# தமிழரசு

16-12-1980 50 காசு.



## தமிழ்நாட்டில் தன்னிறைவுத் திட்டப்பணிகள்


இணைப்புச் சாலைகள்


அரிசனங்களுக்கு வீடுகள்


கிராமப்புறத்தில் மருத்துவ உதவி


மதகுகள், சிறு பாலங்கள்


பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்


பாதுகாக்கப்பட்ட குடிநீர்


தாய்சேய் நலம் காத்தல்


பாசன வசதிகள்

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை அளித்தமைக்காக மாண்புமிகு பிரதமர் அவர்கட்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாதிரிக் குழுக் கூட்டத்தில் பல்வேறு வகையான கருத்துக்கள் வெளியிடப் படுவதனால் மிக்க பயன் உண்டு. என்னுடைய கருத்தையும் வெளியிட இந்த வாய்ப்பினை நான் பயன்படுத்திக் கொள்வதில் தவறு ஏதுமில்லை என்று கருதுகிறேன்.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் இப்பொழுது முதன் முறையாகக் கூடுகிறது. ஆனால் எங்களுடைய கருத்தைக் குழுவின் முன் எடுத்து வைக்கவும், அவை குறித்து விரிவான விவாதம் நடத்தவும் போதுமான கால அவகாசம் இல்லை. இந்தப் பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் விரும்பினாலும், எல்லாக் கருத்துக்களையும் முழுமையாக எடுத்துச் சொல்ல எனக்கு

தேசிய ஒருமைப்பாடு என்பது அப்படிப்பட்ட ஒரு கருத்தினை உள்ளடக்கியதா என்பதை நான் சந்தேகிக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், நமது நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனின் நெஞ்சத்திலே இந்த ஒருமைப்பாட்டு உணர்வு வேரூன்றி நிலைக்க வேண்டும் என்பதே என் கருத்தாகும். இதுவே என்னுடைய இதயக் கிடக்கையுமாகும். தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற வகையில், இந்தக் கருத்தைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது என்றே கருதுகிறேன். இந்தக் கருத்தை நான் வலியுறுத்தும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு கருணாநிதி அவர்கள் இதே கருத்தை இங்கு எடுத்துக் கூறியதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஓர் அரசியல் கட்சியின் சார்பாக, நான் என்னுடைய கருத்தை இங்கே எடுத்துச் சொல்லவில்லை. அனைவருக்கும் பொதுவான ஒரு கருத்தைத்தான் நான் இங்கே எடுத்து வைக்கிறேன் என்பதை இங்கே குழுமியுள்ள உறுப்



# நாடு அதை நாடு!

## மாண்புமிகு முதல்வர்

நேரம் இருக்காது. என் முன் உள்ள கால மின்மையை நான் உணருகிறேன். எனக்குக் கிடைத்துள்ள சிறிதளவு காலஅவகாசத்தில் சில கருத்துக்களை மட்டும் வலியுறுத்தி விளக்கிடப் பெரிதும் விழைகிறேன். அப்படிக் கூறுவதன் மூலம், என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பினை நல்லமுறையில் பயன்படுத்துவதாகவே நான் கருதுகிறேன். இங்கே எழுப்பப்பட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கும் வகையில் நம் அனைவருக்கும் முழுமையான அளவில் வாய்ப்புகள் எதிர்காலத்தில் அளிக்கப்படும் என நான் நம்புகிறேன்.

தேசிய ஒருமைப்பாடு என்று நான் கூறும்பொழுது, அது ஏதோ நாட்டின் பல்வேறு மாநில அரசுகளுக்கிடையே ஏற்படுத்தப்படக்கூடிய, நிலவவேண்டிய ஓர் ஒற்றுமை நிலையைக் குறிப்பதாகவோ, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அமையக்கூடிய உறவுகள் குறித்துக் குறிப்பிடுவதாகவோ என்னைப் பொறுத்தவரையில், அந்த மாதிரிப் பொருளில் அத்தொடர் பயன்படுத்தப்படுகிறது என்று நான் கருதவில்லை

பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன். தேசிய ஒருமைப்பாடு என்று கூறும்பொழுது, சாதிப் பாகுபாடு குறித்தோ, வகுப்புவாரிச் சக்திகள் என்ற கருத்தில் மட்டுமோ அதை எடுத்துக் கொள்ளலாகாது என்பதை நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். அந்தக் கருத்தில் அதை எடுத்துக் கொள்வது மட்டும் போதாது. அதற்கு மேலும் முக்கியமான ஒரு கருத்தினை அது உள்ளடக்கியுள்ளது.

இன்றைய நமது சமுதாயத்தில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நம் சமுதாயத்தில் மண்டிக் கிடக்கின்றன. பல்வேறு மாநிலங்களிடையே பொருளாதார மட்டத்தில், ஒன்றோடொன்று மாறுபட்ட பல்வேறு விதமான அளவுகோல் இருக்கக்கூடாது. நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் வாழுகின்ற மக்கள் சமுதாயத்திற்கு ஒளிமயமான எதிர்காலம் அமையவேண்டும். தேசிய ஒருமைப்பாட்டுணர்வு வேரூன்றி ஓங்கி வளரவேண்டுமெனில் அப்படிப்பட்ட வேறுபாடற்ற சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. அவை குறித்து எந்தவிதக் கருத்தையும் நான் வெளியிட விரும்பவில்லை. என்னுடைய அரசின் சார்பிலும், தமிழ்நாட்டின் சார்பிலும் குறிப்பாகச் சில கருத்துக்களை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு முன், திராவிட முன்னேற்றக் கழகம்; அதற்கு முன்னால் திராவிடக் கழகம் என்பது வரலாறு. அந்தக் காலத்தில் அடிப்படையான சில சமுதாயக் கருத்துக்கள்-அரசியல் கோட்பாடுகள்-சமுதாயத்தில் வர்க்க பேதமற்ற சமத்துவ நிலை, அனைவருக்கும் சமத்துவமான வாய்ப்புகள் என்ற இலட்சியக் கோட்பாடுகள் மலர்ந்தன. இப்படிப்பட்ட அடிப்படை இலட்சியங்கள் இன்றும் தொடர்ந்து நிலவி வருகின்றன. இந்தக் கோட்பாடுகளை நாம் தொடர்ந்து ஏற்றுக்கொண்டு செயலாற்றி வருகிறோம். இந்த அடிப்படைக் கருத்துக்களை விட்டு, நாங்கள் என்றும் விலகி பாதை மாறிச் சென்றதில்லை.

ஒரு காலகட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகமானது பிரிவினையைப் பற்றிப் பேசியிருக்கலாம். அதைப் பற்றி நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஜனாப் ஜின்னா அவர்கள் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டிருந்த காலக்கட்டத்தில், அந்த மாதிரி ஓர் உணர்வு தமிழகத்திலும் இருந்தது உண்மைதான். ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள், பல ஆண்டுகளுக்கு முன்பேயே, இந்தப் பிரிவினைக் கோரிக்கையைத் தன்னுடைய கட்சி கைவிட்டுவிட்டது என்று எந்தவிதச் சந்தேகத்திற்குமிடமின்றி திட்டவட்டமாக அறிவித்தார். நாடு முழுமையான அளவில் சுதந்தரம் பெற்றபிறகுதான், மாநிலங்கள் தங்கள் விருப்பப்படி வாழமுடியும் என்றும் அறிவித்தார். அறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கருத்தினைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறினார்கள். அதை இங்கே எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையென நான் கருதுகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எங்களில் யாருக்குமே இந்தப் பிரிவினை உணர்வு என்பது கிஞ்சிற்றும் கிடையாது.

அதுமட்டுமல்ல; அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் ஒரு கருத்தை எடுத்துக் கூறினார்கள். ''தனி நபரைவிடக் குடும்பம் முக்கியமானது; குடும்பத்தை விட வாழ்கின்ற நகரம் முக்கியமானது. நகரத்தைவிட நாடு முக்கியமானது; ஓர் அரசியல் கட்சியைவிட நாடு பெரிது; முக்கியமானது'' என்று அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். நாட்டுச் சுதந்தரமில்லையெனில், அரசியல் கட்சிகள் வாழமுடியாது; வளர முடியாது. இந்தக் கருத்தை எடுத்துக் கூறிய அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் நாங்கள் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். எங்களால் முடிந்த தியாகத்தை நாங்கள் என்றும் செய்வோம். அறிஞர் அண்ணாவின் கருத்துக்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கவே நாங்கள் விழைகிறோம். அறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டை ஒற்றி அவர் காட்டிய வழியில் தொடர்ந்து நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அரிசன நல, முன்னேற்ற நலன்களில் நாங்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டு இருக்கிறோம். அவர்கள் நல்வாழ்வுக்கான முன்னேற்றத்திற்காகப் பெரிய பெரிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். ஆனால், அதே சமயத்தில் அரிசனக் கிராமம்-அரிசனக் காலனி என்று தனியாக ஒன்று இருக்கக்கூடாது என நாங்கள் விரும்புகிறோம். கிராமம் என்று பேசும்பொழுது எங்களுக்கு விவசாயிகளின் கவனம்தான் வருகிறது. தனியாக ஒரு குடியிருப்பு என்றால் அரிசனங்களை மற்றச் சமூகத்தினரிடமிருந்து தனியாகப் பிரித்து வைக்கிறோம் என்றுதான் பொருள்படும். அப்படிச் செய்வதன் மூலம், சமுதாயத்திலே பல்வேறு சமூகத்தினரிடையே இனவேறுபாடுகளை நாம் தொடர்ந்து உருவாக்கிக்கொண்டு வருகிறோம் என்றுதான் சொல்லவேண்டும். நம்முடைய வாழ்க்கை முறையில் நீண்ட நாட்களாகப் பிடித்துக் கொண்டுவரும் சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வைப் போக்க நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். அரிசனங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்ற மக்கள், அரிசன மக்களாகவே மட்டும் இருப்பது கண்டு நான் மிகவும் வேதனைப்படுகின்றேன். அரிசனங்கள் முன்னேற்றத்திற்கு அரிசன மக்கள்தான் பாடுபட முடியும் என்று சொல்வது தவறு. அவர்களது முன்னேற்றத்தில் மற்றவர்கள் அந்த அளவு அக்கறை கொள்வதில்லை. அந்த மாதிரியான கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்படும் பொழுது அந்த மாதிரி ஒரு சூழ்நிலை நிலவுகிறது என்பதை நினைத்து நமக்கு வருத்தம்தான் ஏற்படுகிறது.

ஜாதி இந்துக்களிடையேயும் இனவேறுபாடுகள் உள்ளன. இதையும் நாம் போக்கியாக வேண்டும். அரிசனங்களிடையே ஒரு சரிசமமான உணர்வு, ஒரு சரிசமமான நிலை இருக்க நாம் பாடுபட வேண்டும். மறுபடியும் அரிசனத் தலைவர்கள் என்றே பிரித்துப்


# தமிழரசு

மலர் 11 இதழ் 12

16—12—1980


## உள்ளே


| | பக்கம் |
|---|---|
| திரைப்படத் தொழில் சிறந்தோங்கிட | — 5 |
| கிராமப்புற மேம்பாடு | — 7 |
| நித்தமும் கட்டடம் மெத்தவும் அமைப்போம் | — 9 |
| தாமே தொழில் புரிய தகவல் 80 கண்காட்சி | — 13 |
| 'இனி ஒரு விதி செய்வோம்' | — 17 |
| மாமதுரை போற்றுதும் | — 19 |
| டில்லியில் தமிழக முதல்வர் | — 23 |
| சிக்கனமே செம்மை தரும் | — 33 |
| மறுபிறவி | — 41 |

பேசுகிறோம். இதற்கு என்ன பொருள்? அரிசனங்களிடையே இனவேறுபாடுகள் ஏராளமாக உள்ளன. இப்படிப்பட்ட இனவேறுபாடுகளைக் களைந்தெறிய அரிசனத் தலைவர்கள் முழுமுயற்சி செய்யவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. அரிசனங்களின் பிரச்சினைகளை அவர்கள் நடுத்தெருவுக்கே கொண்டு வந்து விட்டார்களோ என்று நான் சந்தேகிக்கிறேன். இந்தப் பிரச்சினையில் முதலில் நம் கவனத்தைச் செலுத்தியாக வேண்டும். அரிசனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நாம் விரும்பினால் அரிசனங்களிடையே நிலவுகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வை முதலில் நம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த முறையில் நாம் பிரச்சினைகளை அணுகினோமானால் நாட்டில் வாழும் மக்கள் சமுதாயம் முழுமைக்குமே நல்லது செய்ய நம்மால் முடியும்.

8 மாதங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டில் ஒரு பெரிய கிளர்ச்சியே நடந்தது. பறையர்கள் என்று ஒரு பிரிவினர்; அவர்கள் சமூகத்தில் கீழ்மட்டத்தில் உள்ளனர். பள்ளர்கள் என்று ஒரு பிரிவினர்; பள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரின் சடலம் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரது சடலம் பறையர்கள் வசிக்கும் தெரு வழியாக எடுத்துச் செல்வதைத் தடுக்க ஒரு கிளர்ச்சியே நடைபெற்றது. சடலத்தைத் தூக்கி வந்தவர்கள் அப்படியே கீழே போட்டுவிட்டு உயிர் தப்பினால் போதும் என்று ஓடிவிட்டனர். இப்படிப்பட்ட கொடுமையான செயல்களின் விளைவுகளை அவர்களுக்கு நாம் எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளோம். இப்படிப்பட்ட கொடுமையான செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதை எந்த அளவுக்கு அரிசனத் தலைவர்கள் அந்த மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களைத் திருத்தி வருகிறார்கள் என்பது குறித்து ஒன்றும் தெரியவில்லை.

இந்து-முஸ்லிம் பிரச்சினை குறித்தும் நாம் பேசிவருகிறோம். தமிழ்நாட்டில் இந்து -முஸ்லிம் என்ற பிரச்சினையே இல்லை. குறிப்பாகச் சொல்லப் போனால், எங்களுடைய ஆளுநர் அவர்கள் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர். காவல்துறைத் தலைவர் ஒரு முஸ்லீம். உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் ஒரு முஸ்லீம். தமிழ்நாட்டில் இப்பிரச்சினையே இல்லை. இப்படிப்பட்ட இனப்பாகுபாட்டில் நாங்கள் ஈடுபடுவதே இல்லை. சமூகத்தின் எல்லாப் பகுதியினரும் முன்னேற்றம் அடையவேண்டும் என்ற இலட்சியப் பாதையில் எங்களை நாங்களே ஈடுபடுத்திக்கொண்டு, அப்பயணத்தை நாங்கள் தொடர்ந்து மேற்கொண்டுள்ளோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என் மனத்தில் எழுகின்ற அச்சத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரிசன மக்களின் நலனுக்கு நாம் அதிகம் செய்கிறோமோ இல்லையோ, அதைப்பற்றி வெகுவாகப் பேச மட்டும் நாம் தயங்குவதில்லை. அரிசனங்களுக்கு இன்ன இன்ன நன்மைகள் செய்கிறோம் என்று நாம் அதிகமாகப் பேசிக் கொண்டிருப்பதனாலேயே, ஒருக்கால் சாதி இந்துக்களின் கசப்புணர்ச்சியை நாம் சம்பாதித்துக் கொண்டு வருகிறோமோ என்று கூட அச்சப்பட வேண்டியுள்ளது.

மேலும் சில விஷயங்களை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அவற்றைப் பற்றி



விரிவாகப் பேச நேரமில்லை. நமது நாட்டில் மொழி அடிப்படையில் மொழிவாரி மாநிலங்களை உருவாக்கியபிறகு, மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று சொல்வது எந்த அளவு நியாயமான வாதம் என்று எனக்குப் புரியவில்லை. இதைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். பல பிரச்சினைகள் நம்மை எதிர்நோக்கியுள்ளன. இப்பொழுது நாம் தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. கருணாநிதி அவர்கள் அதைப்பற்றிப் பேசியுள்ளார்கள். மொழி குறித்து அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் எனக்கு ஒப்புதலானவையே. அதே போல், பொருளாதார முன்னேற்றத்தில் கூட அதற்குத் தேவையான அடிப்படை அமைப்பு முறை உருவாக்கப்பட வேண்டும். இந்தத் துறையில் நாம் நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டும். இது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். நாட்டின் கல்வி வளர்ச்சியில் நாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம். மாண்புமிகு பீகார் மாநில முதல்வர் அவர்கள் கல்வி குறித்து ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் பேசியதன் உட்பொருளை நான் சரிவரப் புரிந்துகொண்டேனா என்பது தெரியாது. ஆனால், நாடு முழுமைக்கும் ஒரே கல்வித் திட்டம் இருக்க வேண்டும் என்று அவர் சொன்னார். அந்தக் கருத்தைத்தான் அவர் வெளிப்படுத்தினார் என நினைக்கிறேன். அந்த மாதிரி செய்தால் அதற்கு எந்தவிதமான மாறுபட்ட அபிப்பிராயமும் இருக்க இடமில்லை. ஆனால், கல்வியளவில் இந்த மாதிரி செய்யப்படும்போது கல்வியறிவு பெறும் பொழுதே மாணவர்கள் தொழில் குறித்துச் சில விஷயங்களையும் தெரிந்து கொள்வது அவசியம். பள்ளிகளிலேயே இதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக் குழுவைப் பற்றி பேசும்பொழுது, சில பிரச்சினைகள் எழுகின்றன. மிகப் புனிதமான ஒன்று என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை நெஞ்சில் நிறுத்தி நாம் செயல்படும்போது குறுகிய எண்ணங்களுக்கோ - செயல்களுக்கோ நம்மை நாமே ஆட்படுத்திக் கொள்ளக் கூடாது. பிரச்சினைகளை விசாலமான கண்ணோட்டத்துடன் பார்க்கத் தவறிவிட்டோமேயானால் நம்முடைய முயற்சியில்

வெற்றியைக் காணமுடியாது. பேச்சாளர்கள் ஒருவர் மீது ஒருவர் குற்றங்களைக் காண முயற்சிப்பது நமக்குத் தெரிகிறது. இது இயற்கையானதுங்கூட. மற்றவர்களுடைய குறைபாடுகளை எடுத்துக் கூறினால்கூட அதனால் ஏதாவது நல்ல பயன் ஏற்படுமேயானால், தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு வளர அது உறுதுணையாக இருக்குமானால், அப்படிப்பட்ட பேச்சுக்களை நாம் வரவேற்கலாம்.

அசாம் மாநிலப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் தமிழ்நாடு அரசும் தமிழக மக்களும் தங்கள் கருத்தினைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். எந்தக் காலத்திலும் எப்பொழுதும் நாட்டில் பிரிவினை ஏற்படுவதையோ, ஒரு பகுதி நாட்டிலிருந்து துண்டித்துக் கொண்டு போவதையோ தமிழக அரசும் தமிழக மக்களும் ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தேசிய ஒற்றுமை குலையாமல் காக்க என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ள முடியுமோ அவையனைத்தையும் மேற்கொண்டு ஒற்றுமை காக்கப் பாடுபடுவார்கள். பல்வேறு மாநிலங்களின் தலைவர்களை ஒன்றாக இணைத்துக் கொண்டு வரமுடியுமென்றால், அந்த மாநிலத்திற்குச் சென்று நிலைமையை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ள அவர்களையும் அங்கே அனுப்பலாம். அசாம் பிரச்சினைக்குத் தீர்வு காண இப்படிப்பட்ட ஏற்பாடு உதவுமென்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் கருதினால் இந்தக் கருத்தைத் தயவுசெய்து ஆலோசனை செய்யுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இக்குழு எத்தனை முறை கூடியுள்ளது? என்னைப் பொறுத்தவரையில் இவ்வாண்டுகளில் எத்தனை முறை கூடியது என்பதைப் பற்றிக் கணக்கெடுப்பதைவிட, ஆண்டில் குறிப்பிட்ட மாதத்தில், குறிப்பிட்ட ஒரு தேதியில் கூட வேண்டுமென்று நிர்ணயித்துக் கொள்வது உசிதமென நினைக்கிறேன். அத்துடன் கூடும் கூட்டத்தில் சில குறிப்பிட்ட பிரச்சினைகளின் மீது முடிவுகள் எடுக்கும்படியான சூழ்நிலையும் உருவாக்கப்பட வேண்டும்

நிலச் சீர்திருத்தம் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. எங்களது சட்டமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றி அதைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளோம். அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் விரைவில் கிடைக்குமென நம்புகிறேன். இதை ஏன் இங்குக் குறிப்பிடுகிறேன் என்றால் மக்கள் முன்னேற்றத்திற்கான ஆக்கப் பணிகளில் தமிழ்நாடு தீவிர அக்கறைகொண்டு பாடுபடுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கே! பல்வேறு பிரச்சினைகள் குறித்து நான் அதிகம் பேச விரும்புகிறேன். நேரம் இல்லை, எதிர்காலத்தில் விரிவான முறையில் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கு அதிகமான வாய்ப்புக் கிடைக்குமென நம்புகிறேன்.

இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இரண்டாந்தரக் குடிமக்களாக நாம் உள்ளோம் என்று மாநிலத்திலுள்ள மக்கள் நினைக்கத் தொடங்கி விட்டார்களானால், அப்படிப்பட்ட உணர்வு அவர்களது மனத்தில் தோன்றாமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்வோமேயானால், தேசிய ஒருமைப்பாடு உணர்வுக்கு நாம் வழிவகுத்தவர்களாவோம். எனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பினை இந்தக் கருத்தினை வலியுறுத்துவதற்காகவே பயன்படுத்தியுள்ளேன். இந்த வாய்ப்பினை அளித்த மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் மீண்டும் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்புக் கிடைக்குமென நம்புகிறேன். இந்த வார்த்தைகளுடன் எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

12.11.80ல் புது டில்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

## வேலைக்கு உணவளிக்கும் திட்டப்பணிகள்

தருமபுரி மாவட்டத்தில் உள்ள 16 ஊராட்சி ஒன்றியங்களிலும் வேலைக்கு உணவளிக்கும் திட்டப்பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. '79-80-வது ஆண்டில் 2,765 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 2,472 வேலைகள் முடிக்கப்பட்டன. இப்பணிகளுக்காக 2,174 டன் அரிசி விநியோகிக்கப்பட்டது. ரூ. 37,66,000 மதிப்புள்ள வேலைகள் முடிக்கப்பட்டன. 11,599 பேர் வேலை வாய்ப்புப் பெற்றார்கள். 80–81வது ஆண்டில் 1,362 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 937 வேலைகள் முடிக்கப்பட்டன. முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு ரூ. 26.59.000 ஆகும். இப்பணிகளால் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் 31,554 பேர் ஆவர்.

## உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்க்கு சைக்கிள் முன்பணம்!



அங்கீகரிக்கப்பட்ட உதவி பெறும் 'சி', 'டி' பிரிவைச் சேர்ந்த பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும், உதவிபெறும் பள்ளிகளில் பணி புரியும் பயிற்றுவிக்கும் பணியில்லா ஊழியர்களும் புதிய சைக்கிள்கள் வாங்கிக் கொள்வதற்கென சைக்கிள் முன்பணம் வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் புது சைக்கிள் ஒன்றை ஒருவர் வாங்குவதற்கு முன் பணமாக ரூ. 600 வழங்கப்படும்.



# திரைப்படத் தொழில் சிறந்தோங்கிட....

## மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்
## இராம. வீரப்பன்

உலக முழுதும் திரைப்படம் சக்தி வாய்ந்த ஒரு சாதனமாகத் திகழ்கிறது. அதிலும், குறிப்பாக, இந்தியாவில் கல்வியறிவு பெற வேண்டிய ஏராளமான மக்களுக்கு அது மிகவும் பயன்தரும் கருவியாக விளங்குகிறது. கலாச்சாரத்தை, கலை உணர்வு மிக்க மெய்ப்பாடுகளை, தகவல் தொடர்பை, கேளிக்கைகளை உணர்த்துவதற்கு உரிய சாதனமாகத் திரைப்படம் செயலாற்றுகிறது. திரைப்படத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழ் நாடு அரசு திரைப்படத் தொழிலின் வளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. திரைப்படக் கலையின் பல்வேறு பிரிவுகளில் பயிற்சியை அளிக்கும் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றைத் தமிழகம் நடத்தி வருகிறது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 39 இலட்சத்தை மேற்படி நிறுவனத்துக்கு அரசு ஒதுக்கி உள்ளது. இந்த அரசு பதவிக்கு வந்த பிறகு நகர்ப்புற, கிராமப்புறப் பகுதிகளில் காம்பவுண்டிங் வரி முறையை அறிமுகப்படுத்தியதால் மாநில முழுவதும் திரை அரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சென்ற நிதியாண்டில் ஏறக்குறைய ரூ. 26 கோடி, கேளிக்கை வரியாகத் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது. அந்தத் தொகையில் 10 சதவீதத்தை அரசு வைத்துக் கொண்டு மீதியை உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

கேளிக்கை வரியில் மிக அதிக அளவுப் பங்குத் தொகையை உள்ளாட்சி நிறுவனங்கள் பெற்று வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் இங்கு வருகை புரிந்திருக்கின்ற உறுப்பினர் அனைவருக்கும் மைய அரசுக்கும், தமிழ் நாடு அரசின் சார்பில் ஒருவேண்டுகோளை விடுக்க விழைகிறேன். திரைப்படத் தொழிலின் வளர்ச்சி மாநில அரசின் பொறுப்பில் இருக்க வேண்டும்; திரைப்படத் தொழில் மாநில அரசின் பட்டியலிலிருந்து மைய அரசின் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும் என்னும் சிபாரிசை ஏற்றுக் கொள்ளக்கூடாது. திரைப்படத் தொழிலைப் பொறுத்த அளவில் தற்போதுள்ள நிலையே நீடிக்க வேண்டும். அதாவது திரைப்படத் தொழில், மாநிலங்களின் பட்டியலிலேயே இருக்க வேண்டும். மாநிலங்கள் தங்கள் பகுதிகளில் திரைப்படத் தொழிலை வளர்ப்பதற்கு எல்லா ஆதரவும் அளிக்கப்பட்டு மாநிலங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். நந்தம் பகுதிகளில் திரைப்படத்தொழிலை வளர்ப்பதற்கு மற்ற எந்த மாநிலத்திற்கும் எந்த உதவியும் செய்யத் தமிழ் நாடு அரசு தயாராக இருக்கும்.

மைய அரசு எப்பொழுதெல்லாம் குறிப்பிட்ட சில இனங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்த விரும்புகிறதோ, அப்பொழுதெல்லாம் மாநிலங்களின் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் சில இனங்களை மைய அரசின் பட்டியலுக்கோ, பொது அதிகாரப் பட்டியலுக்கோ மாற்றுவதில் அதிக ஆர்வம் காட்டப்படுவதை மாநில அரசு அக்கறையுடனும் கவலையுடனும் கவனித்து வருகிறது. மாநில அரசின் பட்டியலிலுள்ள ஓர் இனத்தை மைய அரசின் பட்டியலுக்கோ, பொது அதிகாரப் பட்டியலுக்கோ மாற்றிவிடுவதால் மட்டும் எதிர்பார்க்கின்ற வளர்ச்சி ஏற்பட்டு விடாது. நல்ல முறையில் திட்டமிடுதல்-போதிய ஊக்கம் அளித்தல் - காலத்திற்கேற்பச் செயலாற்றல் - ஆகியவற்றின் மூலமாகத்தான் விரும்புகின்ற வளர்ச்சி நிறைவேற முடியும். மாநில அரசுகளின் ஆளுகையின் கீழ் உள்ள பிரிவுகளில் வளர்ச்சி ஏற்பட்டுத்தான் உள்ளது.

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மக்கள் நல்வாழ்வு, மருத்துவமனை ஆகிய இனங்கள் மாநிலத்தின் பட்டியலில்உள்ளன.

இந்தத் துறைகளில் கடந்த ஆண்டுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த இனங்கள் மைய அரசின் பட்டியலில் இல்லை என்பதனாலும் இத்துறைகளில் வளர்ச்சி காண, தேசிய அளவிலான கொள்கைகளை அரசு வகுக்காமலில்லை. ஆகவே மாநிலங்களின் பட்டியலில் உள்ளவற்றை மைய அரசின் பட்டியலுக்கோ, பொது அதிகாரப் பட்டியலுக்கோ மாற்றுவது என்பது குறித்துப் பரிசீலனை செய்வதைவிட, அவற்றைச் செயல்படுத்துவதில் ஒரு பொருத்தமான-தேசிய அளவிலான ஒரு கொள்கையை மைய அரசு உருவாக்க வேண்டும் என்றும் அந்தக் கொள்கையைச் செயல்படுத்துவதில் போதிய ஊக்கம் மைய அரசினால் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவை செயல்படுவது குறித்து ஆய்வு செய்ய அவ்வப்போது கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்றும் இந்த மன்றத்தின் மூலம் நான் மைய அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரைப்படத் தொழிலை மாநில அரசிலிருந்து மைய அரசுக்கு மாற்றுவது என்ற தேசிய அளவிலான திரைப்படக் கொள்கையை வகுக்கும் செயற்பாட்டுக் குழுவின் பரிந்துரையை மைய அரசு மறுக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தினை



## முதல்வரின் முத்துக்கள்

* புகழ், பாராட்டு வரும்போது தகுதி தெரியாமல் சிலர் மிகப் பெரிய தவறுக்கு ஆளாகி விடுகிறார்கள்!

* ஏழ்மை, வறுமையில் எளிமையாக இருப்பது தியாகம் இல்லை; வசதி இருக்கும்போது எளிமையாக இருப்பதுதான் தியாகம்!

* உண்மையை எப்படிச் சொன்னால் புரியும்—புரிந்து கொண்டு மக்கள் செயல்படுவார்கள் என்பதை உணர்ந்து நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் பத்திரிகைகள் செய்தி வெளியிட வேண்டும். வேறு வகையில் வெளியிட்டால், அது நாட்டுக்கு நன்மை பயக்காது!

* ஒருமைப்பாடு என்பது ஒவ்வொருவருடைய உள்ளத்திலிருந்தும் தானாக உருவாக வேண்டிய எண்ணமாகும்!

* எதிர்ப்பைத் தாங்குவது என்பது எளிதானது அல்ல; அத்தகைய எதிர்ப்பின் நடுவிலும் கடமையைச் செய்வதே பெருமை சேர்ப்பதாகும்!

மைய அரசு ஏற்றுக் கொள்ள [illegible] இதுவரையில் நாமளித்துள்ள விளக்கங்கள் போதுமானவை என்று நம்புகிறேன்.

தேசிய அளவிலான விருது பெற்ற திரைப்படங்களும் சிறுவர்களுக்கான படங்களும் கேளிக்கை வரியிலிருந்து விதிவிலக்குப் பெற வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டுள்ளது. முன்னதாக நான் தெரிவித்தபடி, கேளிக்கை வரி என்பது உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்கக் கூடிய வருவாயில் மிக மிக முக்கியமானதொன்றாகும். ஆக்வே அவற்றிற்குச் சேர வேண்டிய நிதி வாயில்களைக் குறைக்கும்போது நாம் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். விருது பெற்ற பல படங்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதில்லை. மாறாக வாழ்க்கைக்குத் தேவையற்ற விஷயங்களை அவை மிகைப்படுத்திக் காட்டுகின்றன. பொதுவாக இத்தகைய படங்கள் நல்லொழுக்கத்தையும் கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்கு உதவி செய்வதாகக் கருத முடியாது. குழந்தைகளுக்கென்று தயாரிக்கப்பட்டுள்ள சில படங்கள் அவர்களுக்குத் தேவையான கருத்துக்களையோ செய்திகளையோ தெரிவிப்பதில்லை. மாறாக அவை சில நேரங்களில் எதிரிடையான கருத்துக்களைப் பரப்புகின்றன. எனவே வரியிலிருந்து விலக்கு என்பதை ஒட்டுமொத்தமாகச் செய்வது என்பது தேவையற்றது; பொருத்தமற்றது!

கேளிக்கை வரியை மாநில அரசுகள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்படும்போது, மைய அரசு திரைப்படங்களின் மீதும், பிரதிகள் மீதும் விதிக்கும் 'எக்ஸைஸ்' வரியைத் திருப்பித் தர வேண்டும் என்ற கருத்தையும் சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

திரைப்படத்துறை வளர்ச்சிக்காக சினிமா டிக்கட்டுகள் மீது வளர்ச்சி வரி விதித்து வளர்ச்சி நிதி ஏற்படுத்தும் மத்திய அரசின் கருத்தினைத் தமிழ்நாடு ஏற்றுக் கொள்கின்ற நிலைமையில் இல்லை. இதனால் திரைப் படம் பார்ப்பதற்குப் பொது மக்கள் செலவிடும் தொகையானது அதிகமாகிவிடும். சமுதாயத்தில் ஏழை, எளிய மக்கள் திரைப் படத் தொழிலை ஆதரிப்பது என்பது மெல்ல மெல்லக் குறைந்துவிடும். மேலும் இந்தப் பிரிவு மக்களுக்குப் பொழுது போக்கு வசதிகளையும் ஏற்படுத்தித் தந்து அவர்களுக்குத் தகுந்த முறையில் அறிவூட்டுவது மிக அவசரமாகச் செய்யப்பட வேண்டிய பணியாகும். கிராமப் பகுதிகளிலும், திரைப்படம் பார்க்கும் வசதியில்லாத பிற்பட்ட பகுதிகளிலும் திரைப்படத்தின் மூலம் மக்களுக்கு நல்லதொரு பொழுது போக்கினை அளிக்க வேண்டும் என்பதற்காக நாம் எடுக்கும் முயற்சிகள் இந்த வரி விதிப்பின் மூலம் வெகுவாகப் பாதிக்கப்படும். ஆகவே, வரி விதிக்க வேண்டும் என்ற கருத்தைத் தமிழக அரசு ஆதரிக்கின்ற நிலையில் இல்லை.

திரைப்பட இனம் மாநிலங்களின் பட்டியலிலேயே இருக்க வேண்டும் என்று மாநில அரசு உறுதியான கொள்கையைக் கொண்டிருக்கும்போது, செயற்குழுவினால் கூறப்பட்டுள்ள பல கருத்துக்கள் ஒத்துப் போகக் கூடியவையாக இருக்கின்றன. நடைமுறைகள் - அரங்கு கட்டும் விதிமுறைகள் போன்ற தேசிய அளவிலான திரைப்படக் கொள்கைகள் குறித்த செயற்குழுவின் பல்வேறு விதமான பரிந்துரைகளை ஆய்வு செய்வதற்கு மாநில அரசின் அமைச்சர்களைக் கொண்ட துணைக் குழு ஒன்றை இந்திய அரசு அமைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிச் செய்வதனால் மாநில அரசுகளில் உள்ள சிக்கல்களை-சிரமங்களைத் தெரியப்படுத்த முடிகிறது. பல்வேறு மாநிலங்கள் கடைப்பிடிக்கும் நடவடிக்கைகளையும் அத்துடன் எல்லா மாநில அரசுகளுக்கும் உகந்த கொள்கைகளை நிறைவேற்றும் முயற்சியில் மாநிலங்களுக்கு மைய அரசு அளிக்கக்கூடிய உதவிகள் குறித்தும் தெளிவுற அறிந்து கொள்ள உதவும்.

மாவட்ட அளவிலும் மாநிலத் தலைமை அளவிலும் மைய அரசு மற்றும் மாநில அரசுகளின் பிரிவுகளுக்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப் பல்வேறு கருத்துக்கள் இங்கே கூறப்பட்டுள்ளன. மாநில, மைய அரசுகளின் செய்தி விளம்பரப் பிரிவுகளின் ஒருங்கிணைந்த குழுவின் தலைவராக மாநில அரசுகளின் செய்தி விளம்பரத் துறையின் செயலாளர் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். அப்படி இருந்தால் மாநில அரசின் செய்தி விளம்பரப் பணியாற்றும் துறைகள் அனைத்தும் மிகுந்த ஊக்கத்துடன் பணியாற்ற முடியும்; மைய, மாநில அரசுகளின் பணிகளை நல்ல முறையில் மக்களிடையே எடுத்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமையும்.

(டெல்லியில் 5-11-80ல் நடைபெற்ற செய்தித்துறை அமைச்சர்களின் மாநாட்டில் மாண்புமிகு தமிழக செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் அர் எம். வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து......)

கிராம மக்கள் உயர, கிராமங்கள் வளம்பெருக: கிராமங்கள் வளம்பெற, நாடு முன்னேற்றத்தில் முழுமையடையும். நம்நாடு பல வகையாலும் விழிப்புற்று, தன்னிறைவுடன் விளங்க வேண்டுமாயின், அரசு திட்டமிடும் சிறிய, பெரிய நல்வாழ்வுப் பணிகள் அனைத்தும் கிராம மக்களைக் கருத்தில் கொண்டு, கிராம வளர்ச்சியை மையமாகச் சுழலும் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். கிராமப் பெருமக்கள்தான் நம் சமுதாயத்தின் ஆணிவேர்; முதுகெலும்பு.

அரசின் பற்பல துறைகள் கிராமங்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் ஊரக வளர்ச்சித்துறைதான், மக்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களின் உள்ளங்களோடு, உறவாடி, பின்னிப்பிணைந்து பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் ஒரு முன்னோடித் துறையாகத் திகழ்கிறது.

ஊராட்சி ஒன்றியங்கள் பற்பல திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றி வருகின்றன. அவற்றில் வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மீன்வளம் ஆகிய திட்டங்களையும், குடிநீர் வழங்கல் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல், பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய வேலைகளையும் மகளிர்-குழந்தைகள் நலன் பேணுதல் ஆகியவற்றையும் குறிப்பிட்டுக் கூறலாம். இவை போன்ற பணிக்கு என, மொத்தமாக ரூ. 217 கோடி செலவிடப்படுகிறது. இப்பெருந்தொகையை ஒன்றிய அளவில் கணக்கிட்டுப் பார்ப்போமானால் நடப்பாண்டைப் பொறுத்தவரையில், ஓர் ஒன்றியத்திற்கான சராசரி ஒதுக்கீடு ரூ. 57.73 இலட்சமாகும்.

தொடக்கக் கல்விக்கென்று நடப்பாண்டில் அரசு செய்துள்ள ஒதுக்கீடு 7521 (75.21 கோடி) இலட்சமாகும். தவிர, இதற்கென ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு ரூ. 1,025 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களிலும், உதவி பெறும் பள்ளிகளிலும் 1,31,264 ஆசிரியர்கள் 50.27 இலட்சம் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வருகின்றனர்



# கிராமப்புற மேம்பாடு

**மாண்புமிகு ஊரகவளர்ச்சி, உள்ளாட்சித்துறை அமைச்சர் ப.குழந்தைவேலு**

கிராமப் புறங்களிலேயே ஊராட்சி ஒன்றிய அலுவலகம் தான் சுறுசுறுப்புடன் பணியாற்றும் ஓர் இடமாகும். அங்கு எல்லா வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்கும் துறைகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, அந்தந்தத் துறைகளைச் சார்ந்த நிர்வாக, தொழில் நுட்ப அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களின் தலைமையிலே பணியாற்றுகின்றனர். எனவே உழவர் பெருமக்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் போன்றோர் அங்கு சென்று தங்களுக்குத் தேவையான வழிமுறைகள், அறிவுரைகள் மற்றும் இன்னபிற உதவிகளையும் பெற்று மன நிறைவுடன் திரும்பலாம். ஊர் நல அலுவலர்கள் ஊர்ப்புறங்களிலேயே தங்கி, மக்களுக்கு இடையறாது வழிகாட்டி வருகின்றனர்.

இன்றைய நிலைமையிலே, தமிழகத்தில் 600 பேரூராட்சிகள் 12 நகரியங்கள் 12,602 ஊராட்சிகள் உள்ளன. இவை 376 ஊராட்சி ஒன்றியங்களுக்குள் ஒழுங்குப் படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன.

இவற்றினைக் கருத்தில்கொண்டு பார்த்தால் தமிழ்நாடு அரசு, கிராம மக்களின் நல்வாழ்வில் கொண்டுள்ள பேரார்வம் தெளிவாகத் தென்படும்.

நடப்பாண்டில் ஊர்ப்புறங்களில் பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காக ரூ. 550 லட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது. இத்துடன் மலைப்பகுதிகளில் உள்ள வட்டாரங்களைப் பொறுத்த வரையில் கட்டடங்கள் கட்டுவதற்கான செலவின் உயர் வரம்பு 25 விழுக்காடு உயர்த்தப்பட்டுள்ளதிலிருந்து, மலைச்சாதி மக்களிடையே கல்வியறிவு விரைவாகப் பரவ வேண்டுமென்ற அரசின் எண்ணம் நன்கு புலனாகும்.

வேளாண்மை, குடும்பநலம், பொதுநல்வாழ்வு போன்ற பற்பல துறைகளில் ஏற்பட்டுள்ளவளர்ச்சி தொழில் நுட்பம் போன்றவற்றை சிற்றூர் வாழ் மக்களும் அறிந்து அன்றாட வாழ்வில் முன்னேற்றம் காணும் வகையில் வானொலிப் பெட்டிகளும், தொலைக் காட்சி பெட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள கிராமங்கள் அனைத்தும்ஒருங்கிணைந்தமுறையில் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே, நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையில் செயலாற்றும் இவ்வரசின் குறிக்கோளாகும்.

நகரங்களும், நகரையடுத்துள்ள புறநகர்ப்பகுதிகள் மட்டுமே திட்டமிட்ட முறையில் வளர்வது என்பதோடு நில்லாமல்

கிராமங்களிலும் முறையான வளர்ச்சி ஏற்பட்டு அவை சிறுசிறு நகரங்கள் போல் மிளிர, அரசு மேற்கொண்டுள்ள அருமையான திட்டம் தான் 'தன்னிறைவுத் திட்டம்' என்பதாகும். இது மிகப் பெரிய புரட்சிகரமான திட்டமாகும். கடந்த 30 ஆண்டுகளாக சாதிக்க முடியாததை 3 ஆண்டுகளில் சாதிக்கும் திட்டம்.

இத்திட்டம் தமிழகத்திலுள்ள 376 வட்டாரங்களில் முதல் கட்டமாக 69 வட்டாரங்களில் செயலாக்கப்படுகிறது. மாவட்டம் ஒன்றிற்கு 5 ஒன்றியங்களும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள 4 ஊராட்சி ஒன்றியங்களும் தன்னிறைவுத்திட்டத்திற்கென முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு மார்ச் திங்கள் தொடங்கி நிறைவேற்றப்படும் தன்னிறைவுத் திட்டத்தில் அடுத்த கட்டமாக 101 வட்டாரங்களும், எஞ்சிய வட்டாரங்கள் அதற்குப் பின்னரும் எடுத்துக் கொள்ளப்படும்.

தன்னிறைவுத்திட்டம் மேற்கொள்ளப்படும் ஊர்ப்புறங்களில் குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள், சிறுபாலங்கள், அரிசனங்களுக்கு வீட்டு வசதிகள், அரிசனங்களின் குடியிருப்புகளுடன் மயானத்திற்குத் தொடர்பேற்படுத்தும் பாதைகள், சிறிய நீர்ப்பாசன வசதிகள் மேம்பாடு, ஊரக மருந்தகங்கள், மகளிர்-குழந்தைகள் நலம், பள்ளிக்கட்டடங்கள் ஆகிய நன்மைகள் செய்து தரப்படுகின்றன.

இவ்வேலைகளை நிறைவேற்ற மூன்றாண்டுகளுக்காக ரூபாய் 270.90 கோடி ஒதுக்க அரசு உத்தேசித்துள்ளது. முதலில் உள்ள 69 வட்டாரங்களுக்கு மட்டும் ரூ. 57.14 கோடி செலவிடப்படும்.

தன்னிறைவுத் திட்டத்தில் முதல் கட்டமாக 69 ஒன்றியங்களில் 2045 வாழ்விடங்களுக்கு ரூ. 2100 இலட்ச செலவில் குடிநீர் வசதி செய்துதர அரசு ஏற்பாடு செய்துள்ளது.

சிறிய நீரோடைகளையும், சாலைகளையும் கடந்து செல்ல மாட்டு வண்டிகளுக்கும் உழவர்களுக்கும் பெரிய இன்னலேற்படுகிறது. இச்சிரமங்களைக் களைவதற்கென 4150 சிறுபாலங்கள், தேவைப்படும் இடங்களில் எல்லாம் கட்டப்பட்டு வசதி செய்யப்படும்.

கிராமங்களும், குக்கிராமங்களும் இணைப்புச்சாலைவசதிகள் இன்றி தீவுகள் போன்று தனித்துக் கிடக்கின்றன. எனவே, இத்தகைய இடங்களை நெடுஞ்சாலைகளுடன் இணைக்கவும், தற்போதுள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் அரசு திட்டமிட்டுள்ளது. இந்த 69 வட்டாரங்களில் 4220 கிலோ மீட்டர் நீளசாலைகள் ரூ. 1221 இலட்ச செலவில் நம் ஊர்ப்புறங்களைச் சிறந்த முறையில் இணைத்து வைக்கும்.

அரிசன மக்களின் வாழ்விடங்களிலிருந்து மிகுந்த தொலைவிலேயே மயானங்கள் உள்ளன. இறந்தவரின் உடலை எடுத்துச் செல்வதற்குப் போதிய வசதிகள் தற்போது இல்லாத இடங்களில் பாதைகள் அமைக்கவும் தன்னிறைவுத் திட்டம் வசதி செய்கிறது. ஆங்காங்கு அமைக்கப்படும் இச்சாலைகளின் மொத்த நீளம் 950 கிலோ மீட்டர்களாகும்.

பள்ளிகளுக்காக 475 கட்டடங்கள் தவிர, ஊரக மருந்தகங்களுக்காக 71-ம், மகளிர் குழந்தைகள் நல நிலையங்களுக்காக 228 கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

அரிசனங்களுக்கென்று ரூ. 25 இலட்சம் செலவில் 5,000 வீடுகளைக் கட்டித் தரவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுச் செயலாற்றுகிறது.

மேலும் ஊராட்சி அலுவலகத்தையும்-சமுதாய நிலங்களையும், தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில் அமைக்க, ரூ. 15 இலட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

நல்லுலகத்தை நாம் நேரில் கண்டதில்லை. அதுபற்றி நாம் படித்திருக்கிறோம். கேட்டுணர்ந்திருக்கிறோம். ஆனால் தமிழ் நாட்டிலுள்ள எல்லா கிராமங்களிலும் தன்னிறைவுத் திட்டம் முழுமைபெறும்போது மாநிலமே ஒரு சுவர்க்க பூமியாகத் திகழும் எனபதில் கிஞ்சிற்றும் ஐயப்பாடே இல்லை.

அடுத்து, வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தினை எடுத்துக் கொண்டால், கிராமப்புறங்களில் 18 வயதிற்கு மேற்பட்டு வேலை வேண்டுவோர் அனைவரும் அந்தந்த கிராமங்களிலுள்ள ஊர் நல அலுவலரிடமோ அல்லது ஊர்நல அலுவலகத்திலோ தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்த 30 நாட்களில் வேலைதர உறுதியளிக்கப்படுகிறது. செய்கின்ற வேலையின் அடிப்படையில் ஊதியம் அளிக்கப்படும். சாதாரணமாக சம்பளத்தில் பாதியளவு உணவுத் தானியமாகக் கொடுக்கப்படும். இதுவரையில் 2,71,096 பேர்களுக்கு வேலை தரப்பட்டுள்ளது.

இதுவரை, வேலைக்கு உணவு என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டு வந்த இத்திட்டம் இனி 'தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்' என்ற புதிய பெயரால் அழைக்கப்பட்டு செயல்படுத்தப் படவிருக்கிறது. ஊர்புறங்களிலே வேலை இல்லாதவர்களும், வேலைக்குறைவாக உள்ளவர்களும், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களும் இத்திட்டத்தின் மூலம் வேலைகள் பெற்றுப் பயனடையலாம். பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கட்டடங்கள் கட்டுதல் சிறுபாசனக் குளங்களை மேம்படுத்துதல் போன்ற நிலையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஊர்ப்புற மக்களுக்குப் போதிய வசதிகள் செய்து தரப்படுகின்றன.

இளைஞர்களிடம் திறமைகள் புதைந்து கிடக்கின்றன. அவற்றினை வெளிக் கொணர்ந்து போதிய பயிற்சிகள் அளித்தால் அவர்களும் வேலைகளைக் கற்றுக் கொண்டு தாமாகவே போட்டி மிகுந்த வாழ்க்கைப் பாதையில் வெற்றி வாகை சூடி முன்னேறிச் செல்வார்கள். இதனைக் கருத்தில் கொண்டு 'ஊரக இளைஞர் தன் முயற்சியால் வேலை பெறும் பயிற்சித் திட்டம்'' என்ற ஒன்று செயலாக்கப்படுகிறது. தமிழகத்திலுள்ள 5 பயிற்சி நிலையங்களிலும் இளைஞர்கள் தொழில்கள் கற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயிற்சி முடிவுற்றவுடன் இவர்கள் தாங்களாகவே சிறு தொழில்களைத் தொடங்கிக் கொள்ளலாம். இதற்கு அரசும் வங்கிகளும் பொருள் உதவி செய்யும்.

அரசு எவ்வளவு முனைப்புடன் செயல்பட்டாலும் ஒரு திட்டத்தின் வெற்றி மக்களின் ஒத்துழைப்பில்தான் அடங்கியுள்ளது. குறிப்பாக, மக்களாட்சித் தத்துவத்தின் நாற்றங்கால்களாக அமைந்துள்ள ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் வாழும் மக்களின் ஒத்துழைப்பில் தான் அப்பகுதியில் நிறைவேற்றப்படும் திட்டங்களின் வெற்றி அடங்கியுள்ளது. எனவே அரசு நிறைவேற்றும் திட்டங்கள் நமக்கானவை-நம் நன்மைக்கானவை என்று மக்களின் மனத்தில் எண்ணம் ஏற்பட்டால் அதுவே இவ்வரசின் மாபெரும் வெற்றியாக நான் கருதுவேன்.

**(சென்னை வானொலி**

**7—12—80)**

# நித்தமும் கட்டடம் மெத்தவும் அமைப்போம்

## மாண்புமிகு பொதுப்பணி- கைத்தறித் துறை அமைச்சர் எஸ்.என். ராசேந்திரன்

**போ**துப் பணித் துறையின் கட்டடப் பிரிவானது, பல்வேறு துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப திட்டங்கள் தீட்டி, வடிவமைத்து கட்டடங்கள் கட்டி பராமரிப்ப தாகும்.

நடப்பு ஆண்டு 1980-81-ல் அரசு கட்டடங்கள் கட்டுவதற் கும், பராமரிப்பதற்கும் ரூ.21.52 கோடியும், அத்துடன் மார்க்கெட் கமிட்டி, நகராட்சி மற்றும் அர சின் சட்ட ரீதிக்குட்பட்ட வாரி யங்களுக்கும் சேர்த்து மொத்த செலவுகளுக்காக ரூ. 28.36 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மருத்துவம்:**

மருத்துவத் துறைக்காகப் பல் வேறு பெரிய திட்டங்கள் மேற் கொள்ளப்படுகிறது. சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் நவீன வசதிகள் கொண்ட அறு வைச் சிகிச்சைப் பகுதிக்காக ரூ. 202.87 இலட்சத்திற்கு ஒரு பன் மாடிக் கட்டடமும் கட்டப்படு கிறது. தமிழ்நாட்டின் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுக்குக் கூடு தல் வசதிகள் செய்து கொடுக்க கட்டடங்கள் கட்டுவதோடு ரூ. 39.31 லட்ச மதிப்பில் சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனையில் வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு கூடுதல் கட்டடங்களும் கட்டுவது குறிப்பிடத்தகுந்தது. இத்தோடு அரசு இம்மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடங்களும், ஒரு ஆய்வு நிலையமும் கட்டுவதற்கு ரூ. 5.70 இலட்சம் அனுமதி வழங் கியுள்ளது. மேலும், இவ்வாண்டு பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரி ஆண், பெண் இந்தியமுறைப்பட்ட மருத் துவர்களுக்குத் தனித்தனியே விடுதிகள் கட்ட ரூ. 31.55 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

சாலை, தொழிற்சாலை மற் றும் வீட்டு விபத்திற்குள்ளான மக்களுக்கு நல்ல மருத்துவக் கவ னிப்புக்காகவும் சிறந்த முத லுதவி அளிப்பதற்காகவும் ரூ. 56.24 இலட்சம் மதிப்பில் முதல் கட்டமாக தென்பிராந்திய மாவட்டங்களில் உள்ள 12 வட்ட மற்றும் மாவட்ட மருத்துவ மனைகளில் விபத்து மற்றும் அவசர நிலைப் பகுதிகள் படுக்கை வசதிகளுடன் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கியுள்ளது. இப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

**ஆரம்பச் சுகாதார நிலையமும் குடும்ப நலத் திட்டமும்:**

20 இடங்களில் ஆரம்பச் சுகா தார நிலையமும், 25 இடங்களில் குடியிருப்புகளும் ,30 இடங்களில்



சுற்றுச்சுவர் கடடுவதற்கும் ஆகி ரூ. 182.05 இலட்சம் ஒப்புதல் அளித்தது. இந்த நிதி ஆண்டில் இவ்வேலைகள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், 17 இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையமும், குடியிருப்புகளும், சுற்றுச் சுவர் கட்டுவதற்கும் அரசு 151.58 இலட்சம் மதிப்பில் அக்டோபர் 1980-ன் இறுதியில் ஒப்புதல் அளித்தது.

15 இடங்களில் குடும்ப நல நிலையமும், குடியிருப்புகளும், 4 இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையத்தின் செவிலியர்களுக் காக தங்கும் விடுதி கட்டுவதற் கும் அரசு ரூபாய்45.77இலட்சம் ஒப்புதல் அளித்தது. இவ்வேலை இந்த நிதி ஆண்டில் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**உலக வங்கியின் சத்துணவுத் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் பொதுப் பணித் துறையினரால் 51 இடங் களில் அலுவலர்களின் குடியிருப் புகளுடன் கூடிய கிராமப்புற சுகாதாரப் பயிற்சி நிலையங்களும் 3 இடங்களின் செவிலியர் நிலை யங்களை விரிவுபடுத்துதல் மற் றும் 6 இடங்களில் புதிய நிலை யங்களை ஏற்படுத்த மொத்த மாக ரூ. 243 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த வேலைகளை ஜூன் 1982-க்குள் முடிக்க திட்ட மிடப்பட்டுள்ளது.

**சமூக நலம்:**

பச்சைமலை, கல்ராயன்மலை, சித்தேரிமலை, ஜவ்வாதுமலை, ஏலகிரிமலை போன்ற பகுதிகளில்

மருத்துவநலம் கருதி ரூ. 17.20 இலட்சம் மதிப்பில் மருத்துவக் கட்டடங்களும் அரசு அலுவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

நீலகிரி மாவட்டம் மேம்பாட்டுக்கு மத்திய அரசு நிதி வசதி திட்டத்தின் கீழ் மருத்துவம், வேளாண்மை, மீன்வளம், கால்நடைகள் நலம் போன்றவைகளுக்காக ரூ. 29.38 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்து அப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



புயல்-வெள்ளப் பாதுகாப்புக் கட்டடம்:

இரண்டாவது கட்டமாக மேலும் 50 புயல் நிவாரணக் கட்டடங்கள் ஐரோப்பிய வர்த்தக நிறுவனத்தின் உதவியுடன் கட்ட எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு கட்டடத்திற்கான மதிப்பு ரூ.3.00 இலட்சமாகும். மொத்த செலவில் மூன்றில் இரண்டு பங்கை ஐரோப்பிய வர்த்தக நிறுவனமும் மூன்றில் ஒரு பங்கை தமிழக அரசும் பகிர்ந்து கொள்ளும்.

மேலும், 'அழிவு நிவாரண அமைப்பு' ஒன்று ரூ. 14 இலட்சம் செலவில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அரக்கோணத்தில் கட்டப்பட்டு வருகிறது.

மெரினாவை அழகுபடுத்துதல்

உயர் மட்டக் குழுவின் பரிந்துரையின்படி, ரூபாய் 10.876 இலட்சம் செலவில் மெரினா கடற்கரையை அதற்கு வருகை தரும் பொதுமக்களின் நலன் கருதி முன்னேற்ற, வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் சுகாதாரம், குடிநீர் வசதி, அதிக ஒளி விளக்கு அமைத்தல் ஆகியன செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

10+2+3 எனப்படும் புதுக் கல்வி முறை தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதால், பல அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டது.

இரண்டாம் கட்டமாக, 274 ஆய்வுக் கூடங்கள் மொத்தம் ரூபாய் 430.56 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதில் 254 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு கல்வித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மூன்றாம் கட்டமாக 70 விஞ்ஞான ஆய்வக்கூடங்கள் மொத்தம் ரூ 161 இலட்சம் செலவில் கட்டுவதற்காக ஆகஸ்டு மாதம் 1980ல் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ஏப்ரல் 1981-க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

'அகில உலகக் குழந்தைகள் ஆண்டில்' எழும்பூரில் நவீன குழந்தைகள் அருங்காட்சி அகம் ஒன்று கட்டுவதற்காக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வேலைகள் துவங்கப்பட்டுள்ளது.

'பி' பிரிவு பள்ளிக் கட்டட மேம்பாட்டுக்காகவும், பள்ளிகளுக்குப்புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் பொதுப் பணித் துறையினரால் ரூ. 35 கோடிக்கு ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

தஞ்சையில் சரஸ்வதி மஹால் நூலகம், கலைக்காட்சிக்கூடம், விற்பனைக் கூடம், கலையரங்கம், உட்புற விளையாட்டு அரங்கம் ஆகிய பலநோக்குக் கட்டடத் திட்டங்கள் கட்டுவதற்கும், சென்னையில் உட்புற விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

காவல் மற்றும் நீதித்துறை:

காவல் துறை அலுவலர்களுக்கு 254.55 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன இவ்வேலைகளில் 75 சதவிகிதக் குடியிருப்புகள் இந்த நிதியாண்டில் இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும். ஏனைய குடியிருப்புகள் அடுத்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் முடிவடைந்துவிடும்.

மாநில நீதித் துறையில் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 34 இலட்சத்தை அரசாங்கம் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் காஞ்சிபுரத்தில் ரூ.17 இலட்சத்தில் நீதி மன்றம் கட்டுவதும், தூத்துக்குடியில் ரூ. 13.5 இலட்சத்தில் நீதிமன்றம் கட்டுவதுமாகும். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு 10 குடியிருப்பு இல்லங்கள் 38 இலட்சத்தில் கட்டுவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இது தவிர மாநிலத்தில் உள்ள எல்லாச் சிறைச்சாலைகளுக்கும் வேண்டிய அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்காக ரூ. 292.577 இலட்சத்தை அரசு வழங்கியுள்ளது. இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன.

வருவாய் மற்றும் வணிகத்துறை

மாநிலத்தில் 7 இடங்களில் கோட்டாட்சி தலைவர் அலுவலகமும், 7 இடங்களில் வட்டாட்சித் தலைவர் அலுவலகமும் கட்டும் பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் கட்டும் மதிப்பு ரூ.5.35 இலட்சமும் ஒவ்வொரு வட்டாட்சித் தலைவர் அலுவலகமும் கட்டும் மதிப்பு ரூ.5.31 இலட்சமும் ஆகும். இது தவிர ரூ. 11.3 இலட்ச மதிப்பில் வணிகவரித்துறை, கோட்டாட்சித்தலைவர் அலுவலகம், வட்டாட்சித்தலைவர் அலுவலக

மும் இணைந்த கட்டடம் புதுக்கோட்டையில் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

நாகர்கோவிலில் அண்மையில் ரூ.16.35 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு இரண்டடுக்கு மாடிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் வேலூர், திருச்சி ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வணிகவரித்துறைக்குச் சென்னை நுங்கம்பாக்கத்தில் 94 இலட்சம் ரூபாய் மதிப்பில் அலுவலகம் கட்டும் பணியும், மதுரையில் 61 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி இவ்வாண்டு துவங்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் பல்வேறு வட்டத் தலைமையிடத்தல் வணிகவரித் துறை அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டம் அமைக்கப்பட்டதன் விளைவாக மாவட்டளவில் உள்ள அதிகாரிகளுக்கு அலுவலகக் கட்டடங்களை ஈரோடு நகரில் கட்டுவதற்காக ரூ.327.05 இலட்சத்தை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அமைச்சர்களுக்கு அரசினர் இல்லம்:**

சென்னை அரசினர் தோட்டத்தில், செம்பியன் இல்லத்தில் அருகில் மற்றுமொரு புதிய அரசினர் விருந்தினர் மாளிகை கட்டுவதற்காக ரூ. 16.75 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது தவிர, தலைநகருக்கு வரும் அரசு அலுவலர்கள் தங்குவதற்காக ரூ. 19 லட்சம் செலவில் ஒரு கட்டடம் கட்ட அரசு அனுமதியளித்துள்ளது. மேலும் 10 அமைச்சர்களுக்கு அரசினர் இல்லம் 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்காகத் திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

**வைப்புத் தொகை வேலைகள்:**

ஒழுங்குமுறை விற்பனைக்குழுவின் அலுவலகம் கட்டும் பணி, ஒழுங்குமுறை விற்பனைக்குழுவின் தேவைகளுக்கு ஏற்ப மாநிலத்தில் பல பகுதிகளிலும், நடவடிக்கைக் கூடம் மற்றும் கிடங்கு கட்டும் பணி பொதுப் பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்காக இதுவரை எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் மொத்த மதிப்பீடு ரூ. 245 இலட்சம் ஆகும்.

மாநில விவசாய விற்பனை வாரியத்தினரால் ஒவ்வொன்றும் ரூ. 4 லட்சம் செலவில், 75 இடங்களில் ஊரக கிடங்கு கட்டதிட்டமிட்டு இத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. களப்பணி ஆரம்பிப்பதற்கு அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒருங்கிணைக்கப்பட்ட நகர வளர்ச்சித் திட்ட வேலைகள்:**

ஒருங்கிணைக்கப்பட்ட நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், அவினாசி ரோடிலும், டாக்டர் நஞ்சப்பா ரோடிலும் 40 இலட்சம்ரூபாய் செலவிலும், மதுரையில் 40 இலட்ச ரூபாய் செலவிலும் வணிக வளைவுகள் கட்டும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தற்போது உதகமண்டலத்தில் 69.12 இலட்ச ரூபாய் செலவில் விற்பனை வளைவு, தினசரிச் சந்தை ஆகியவை கட்டுவதற்கான அரசின் ஒப்பளிப்பு கிடைக்கப்பெற்று, அவ்வேலைகள் சீக்கிரம் தொடங்கப்பட உள்ளது. இதுபோன்ற வேலைகள் 118 இலட்சம் ரூபாய் செலவில் கரூர், புதுக்கோட்டை, தர்மபுரி ஆகிய இடங்களில் அரசின் ஒப்புதல் பெற்று துவங்கப்படும்.

நகராட்சிக்கான கட்டடம் பணிகள் பொதுப்பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, தற்போது பல நகராட்சிகளில் 157 இலட்ச ரூபாய்க்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ் வேலைகளில் அடங்கியுள்ள பணிகளாவன விற்பனைவளைவு பேருந்து நிலையங்கள், தங்குமிடங்கள் ஆகியவை நகராட்சிக்கு வருமானம் வரக்கூடியவை.

பொதுப்பணித்துறை வேலைகளுக்காக $12\frac{1}{2}\%$ ஆய்வுக்கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

**மாடிக்கட்டடம்:**

தமிழ்நாடு பாடப்புத்தகச் சங்கத்தினரால் பொதுப்பணித்துறையினரிடம் நுங்கம்பாக்கத்தில் உள்ள கல்வி இயக்குநரின் அலுவலகச் சுற்றுக்குள் (காம்பவுண்டு) 115 இலட்சம் ரூபாய் செலவில் பல மாடிக் கட்டடம் கட்ட ஒப்படைக்கப்பட்டுள்ள வேலை மிக பெரிய வைப்புத் தொகை வேலைகளில் ஒன்றாகும்.

இது தவிர, தொழிலாளர் மாநில ஈட்டுறுதி மருத்துவமனைகள் கட்டும் பணியும் மேற்படி துறையினரால் பொதுப் பணித்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு நடைபெறுகிறது.

**கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்றும் 17 இடங்களில் 211.82 இலட்சம் ரூபாய் செலவில் கடல் தடுப்புச் சுவர் கட்டும் பணி அரசினரால் ஒப்பளிக்கப்பட்டு வேலை இவ்வாண்டு துவக்கப்படவிருக்கிறது. சென்னை ராயபுரம், எண்ணூர், வடசென்னை ஆகிய இடங்களில் 30.80 இலட்ச ரூபாய் செலவில் கடல் தடுப்புச் சுவர் கட்டும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சாந்தோம், மகாபலிபுரம் ஆகிய இடங்களில் இவ்வேலைகள் செய்வதற்கான கருத்துரு ஆய்வில் உள்ளது.

## தமிழ்நாடு தேசிய மாணவர் படையின் வெற்றி!

கல்கத்தாவில் நடந்த விமான மாதிரிகள் தயாரிப்புப் போட்டியில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி என்.சி.சி. இயக்குநரகத்தைச் சேர்ந்த பத்து தேசிய மாணவர்படை மாணவர்களும், ஐந்து பெண்மணிகளும் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் எல்லாப் பகுதியிலிருந்தும் மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். மொத்தம் அளிக்கப்பட்ட 28 பரிசுகளில் தமிழ்நாடு இயக்குநரகத்தைச் சேர்ந்த மாணவர்களும், மாணவிகளும் 21 பரிசுகளையும், கோப்பைகளையும் வென்றுள்ளனர்.

தமிழ்நாடு தேசிய மாணவர் படையின் விமான ஸ்குவாட்ரனைச் சேர்ந்த ஆர். முரளீதரன் நான்கு பரிசுகளைப் பெற்றுள்ளார். தமிழ்நாடு தேசிய மாணவர்படை விமான ஸ்குவாட்ரன்–2–ஐசேர்ந்த லதா நான்கு பரிசுகளையும் பெற்றுள்ளார்.



# படைவீரர்களின் பணியினை நினைவு கொள்வோம்!

நாடு விடுதலை பெற்றதிலிருந்து ஆண்டுதோறும் டிசம்பர் 7-ஆம் நாள் கொடிநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தீரத்துடன் போராடி இறந்துபட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் அவர்கள் ஆற்றிய வீரமிக்க பணிகளுக்கு வணக்கம் செலுத்தும் வகையிலும், அவர்கள் கொண்டிருந்த உறுதியை இச்சேவையில் ஈடுபட்டுள்ளோர் புதுப்பித்துக் கொள்ளச் செய்யும் வகையிலும் இக் கொடிநாள் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

1980 டிசம்பர் 7-ஆம் நாள் விடுமுறை நாளாக அமைந்ததால் டிசம்பர் 5-ஆம் நாள் நாடு முழுவதும் கொடிநாளாகக் கொண்டாடப்பட்டது.

கொடிநாளில் வசூல் செய்யப்படும் தொகையில் மத்தியநிதிக்கு அளித்த பங்கு போக, மீதமுள்ள தொகை முழுவதும் தமிழ்நாடு முன்னாள் இராணுவ வீரர்களின் நலநிதியில் சேர்க்கப்படுகிறது. இந்நிதி, முன்னாள் இராணுவத்தினரின் புனர்வாழ்வுக்கும், துயருற்றோர் துயர் துடைப்பதற்குமென பல்வேறு திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. 1979-80ஆம் ஆண்டில் 4682 முன்னாள் இராணுவத்தினரும், அவர்களைச் சார்ந்தோரும் ரூ. 8.53 இலட்சம் அளவுக்கு- இந்நிதியிலிருந்து பயனடைந்திருக்கின்றனர்.

முன்னாள் இராணுவத்தினரைச் சார்ந்த ஆதரவற்றோர்க்கு மாதாந்திர உதவித் தொகை, மொத்த உதவித் தொகை, திருமணத்திற்கான நிதி உதவி, காசநோய்; தொழுநோய் பீடித்துச் சிகிச்சை பெறுவோர்க்கான அன்றாடச் செலவுக்கு நிதிஉதவி இறந்துபட்ட முன்னாள் இராணுவத்தினரின் கௌரவமான இறுதிச் சடங்குக்கு நிதி உதவி கஷ்டத்தில் உழலும் முன்னாள் இராணுவத்தினரின் உடனடி நிவாரணத்திற்கு நிதி உதவி, வெள்ளம், தீ விபத்து போன்ற காலங்களில் நிவாரண உதவி, மாணவ மாணவியருக்குத் படிப்புதவித் தொகை போன்ற அரும் பணிகள் இந்நிதியிலிருந்து செய்யப்படுகின்றன.

ஜெய் ஜவான் ஸ்டால்கள் அமைத்துக் கொடுப்பது, வங்கிக் கடன் உதவித் திட்டம், வியாபார வர்த்தகம் செய்யக் கடனுதவி, போன்ற மறுவாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு முழுவதும் இதுவரை ஆறு இலட்சம் ரூபாய் செலவில் 200 ஜெய் ஜவான் ஸ்டால்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, முன்னாள் இராணுவத்தினரும் அவரைச் சார்ந்திருப்போரும் தங்கள் வாழ்வைத் தாமே சீர்படுத்தி வளம் பெற முடிகிறது.

இதுவுமன்றி, வட்ட, மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் முன்னாள் இராணுவத்தினருக்கும் அவர்களைச் சார்ந்தவர்க்கும் என்று தனியாக ரூ. 12.32 இலட்சம் செலவில் 12 படுக்கைகள் கொண்ட வார்டுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேலூரில் ஒய்வூதியம் பெறும் முதியோர் இல்லம் ஒன்று ஆறு இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 58 முதியோர் தங்க வசதி உள்ளது. இந்தியாவில் இதுபோன்ற இல்லம் வேலூரில் உள்ள இது ஒன்றுதான்.

பல்வேறு விதமான உதவித் தொகைகள் மூலம் கைம்பெண்கள் போதுமான அளவுக்கு உதவி பெறுவர். இராணுவத்தினர் மற்றும் முன்னாள் இராணுவத்தினரின் கைம்பெண்கள் அனைவருக்கும், தங்கள் மகள்களின் திருமணத்தை நடத்திக்கொள்ள ரூ. 500 -உதவித்தொகை தரப்படுகிறது. நாட்டின் விடுதலைக்குப்பிறகு பல்வேறு வித முயற்சிகளில் இறக்க நேரிட்டோரின் கைம்பெண்களுக்கு நம் நன்றியைக் காட்டும் விதமாகவும் அவர்களை நினைவில் கொள்ளும் விதமாகவும் அடையாளமாக ரூ. 600 பெறுவர். மேலும் இவர்களுக்கு தங்கள் மகள்களின் திருமணத்தை நடத்துவதற்கென ரூ. 1500 அளிக்கப்படும்.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து முன்னாள் இராணுவத்தினர் சுமார் 9 இலட்சம் ரூபாய் அளவுக்கு 424 பேர்கள் வட்டிச் சலுகையுள்ள கடன்களைப் பெற்றிருக்கின்றனர். மேலும் 18.57 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஜவான் பவன்கள், வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

வேலூரில் பத்து இலட்சம் செலவிலான 72 கடைகள் கொண்ட அங்காடித் தொகுதி (Shopping Complex) ஒன்று கட்டப்பட்டுள்ளது.

சேவை ஒய்வூதியத்துடன் 1.1.64க்கு முன் ஓய்வு பெற்றபின் இறந்த இராணுவ வீரர்களின் கைம்பெண்கள் குடும்ப ஓய்வூதியம் பெற மத்திய அரசு விதிகளின்படி தகுதியில்லாமல் உள்ளது. இத்தகையோரும் கௌரவமுடன் வாழ மாதம் ரூ. 50/- உதவியும், குழந்தைகள் படியாக (Allowance) ரூபாய் 10/- வீதம் இரண்டு குழந்தைகளுக்கும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற வேலையற்றிருக்கும் முன்னாள் இராணுவத்தினருக்கும், அவர்களைச்சார்ந்த விதவைகளுக்கும் மாதம் ரூ. 30- வீதம் வழங்கவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தாய்த்திருநாட்டின் பாதுகாப்புக்காகப் போராடும் புனிதப் பணியில் ஈடுபட்டு, தீரச் செயல்கள் பலபுரிந்து உயிர் நீத்த வீர மறவர்களுக்கும், ஒய்வுபெற்ற முன்னாள் படைவீரர்களுக்கும், உதவிடும் வகையில் அரசு பல நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அவர்கள் செய்துள்ள தியாகத்துக்கு எவ்வளவு உதவி செய்தாலும் தகும் அல்லவா!




# Informex'80

# தாமே தொழில்புரிய "தகவல்' 80" கண்காட்சி

அதோ, வருகிறாரே அவர் ஒரு எம். ஏ., பட்டதாரி!

அவர் வாயைக் கிளறுவோமா?

''இப்ப நீங்க என்ன செய்துகிட்டிருக்கீங்க?''

''சும்மாதான் இருக்கேன்!''

''எத்தனை வருஷமா?''

''ஏழு வருஷமா?''

''வேலை ஒண்ணும் கிடைக்கலியா?''

''ஊஹூம்........''

''நேற்றுகூட எங்கேயோ போய் வந்தாப் போலிருக்கே....''

''சும்மாதான் அப்படிப் போய் வந்தேன்....''

கேள்வி கேட்டவர் தலையில் அடித்துக் கொள்கிறார். இது என்ன சும்மா? சும்மா இருந்தால் சோறு கிடைக்குமா?

அறிவு இருக்கிறது.
ஆற்றல் இருக்கிறது.
ஆனால்.... ஆனால்...
ஊக்கம் மட்டும் இல்லை
அவருக்கு

'முயற்சி திருவினையாக்கும்' என்றெல்லாம் படித்திருக்கிறோம். ஆனால், அந்த முயற்சி—ஊக்கம் எத்தனைப் பேருக்கு இருக்கிறது?

படித்துப் பட்டம் பெற்று, வேலைக்கு எழுதிப் போட்டுவிட்டு திண்ணையில் உட்கார்ந்து கொண்டு வெட்டிப் பேச்சு பேசிக் கொண்டிருந்தால், வேலையா கிடைக்கும்? வாழ்க்கையில் வேதனைதான் மிஞ்சும்!

ஊக்கம், உழைப்பு இருந்தால் வாழ்வில் நிச்சயம் உயர வாய்ப்புண்டு என்பதை உணர்த்துகின்ற ஓர் அரிய கண்காட்சி அண்மையில் சென்னையில் நடந்தது.

அதுதான் 'இன்பார்மெக்ஸ்'80 (Informex 80) என்னும் கண்காட்சி.

சென்னை பல்கலைக்கழக மண்டபத்தில் நடந்த இந்தக் கண்காட்சியை, சென்னைப் பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டி நிலையமும், மாணவர் வழிகாட்டி நிலையமும், பாரத ஸ்டேட் பாங்கும் இணைந்து நடத்தின. நவம்பர் 20 முதல் 15 நாட்கள் நடைபெறும் ''இன்பார்மெக்ஸ்'80'' அதாவது ''தகவல் '80'' கண்காட்சியின் நோக்கமென்ன?

படித்துப் பட்டம் பெற்றும், வேலை இல்லாமல் தவிக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கித் தருவதுதான் இதன் நோக்கம்.

இந்தக் கண்காட்சியில், பல்வேறு அமைப்புகள் பங்கு கொண்டன. பள்ளிக்கல்வி இயக்குநரகம், அரசினர் கலை - கைத்தொழில் கல்லூரி, சிட்கோ, கதர் கிராமக் கைத்தொழில் வாரியம், வேளாண்மைத்துறை, பாரத ஸ்டேட் வங்கி, தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன.

20—11—80 அன்று இந்தக் கண்காட்சியைத் துவக்கி வைத்து மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அரியதோர் உரையாற்றினார்கள். அவர்தம் உரையில் குறிப்பிட்ட சில வாசகங்கள்:

''வேலை இல்லாத் திண்டாட்டப் பிரச்சினையைத் தீர்க்க வேலை வாய்ப்புகளுக்கு அரசை மட்டுமே நம்பியிராமல், படித்தவர்கள் சுயமாகத் தொழில்கள் தொடங்க முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

''தமிழ்நாடு அரசு, சிறுதொழில் வளர்ச்சிக்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. மாவட்டந்தோறும் அமைக்கப்படவிருக்கும், சிறுதொழில் கேந்திரங்களில் தொழில் தொடங்க முன் வருபவர்களுக்கு விற்பனை வரிச்சலுகைகள் தரப்படுவதுடன் நீர், மின்சாரம் பேன்ற அடிப்படை வசதிகளும் உடனடியாகக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

''நமக்குள்ள உழைக்கும் திறன் அறிவுத் திறன் ஆகியவற்றைத் தக்கபடி பயன்படுத்தினால் விரைவில் முன்னேற்றம் காணமுடியும். நமக்குள்ள தேவைகளை நாமே பூர்த்தி செய்துகொள்ளும் விதத்தில் புதிய தொழில்களுக்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன''.

இந்தக் கண்காட்சியில் என்ன இருக்கிறது?

இந்தியாவில் உள்ள 108 பல்கலைக்கழகங்களின் முகவரிகள் (வேளாண்மை மருத்துவம் தவிர)

—பி. வி. கிரி

# வருவாய் வாரியம் கலைப்பு

தமிழ்நாடு வருவாய் வாரிய நீக்கச் சட்டம் 1980 டிசம்பர் மாதம் முதல் நாள் முதல் செயலுக்கு வருகிறது.

வருவாய் வாரியம் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரால் செலுத்தப்பட்ட பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் அனைத்தும் அது சம்பந்தப்பட்ட ஆணையரால் அன்று முதல் செலுத்தப் படும்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை சம்பந்தப்பட்ட அனைத்து பொறுப்புகளைக் கவனிக்க மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை இயக்குநரகம் உருவாக்கப்படுகிறது.

அங்கு என்னென்ன படிப்புகள் உள்ளன என்ற புள்ளிவிவரங்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, ஒருவர் பொருளாதாரம்படித்திருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவருக்கு என்னென்ன வேலை வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை இங்கே நாம் தெரிந்து கொள்கிறோம்.

இதைபோல, வரலாறு, அறிவியல், பொறியியல், கணக்கு, தாவரவியல், உயிரியல், மனை இயல், சட்டம், வேளாண்மை போன்றவற்றில், படித்துப்பட்டம் பெற்றவர்களுக்கான வேலை வாய்ப்புகளையும் கண்டு மலைக்கிறோம்.

ஒவ்வொரு இசை ஆர்வம் இருக்கிறது. அவர் திசை தெரியாமல் விழிக்க வேண்டாம். தமிழ்நாட்டில் எங்கெங்கு இசைக் கல்லூரிகள் உள்ளன? அதற்குப் பிறகு கிடைக்கின்ற வேலை வாய்ப்புக்கள் என்னென்ன? போன்ற விவரங்கள் இங்கே காணக் கிடைக்கின்றன.

அதுமட்டுமல்ல, பள்ளி இறுதி வகுப்புவரை படித்தவர், புகுமுக வகுப்புவரை படித்தவர் எப்படியெல்லாம் முன்னேறலாம் என்பதை இங்கே கண்டு, கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

குறிப்பாக, ஓட்டல் தொழிலில் 1985-ஆம் ஆண்டு இறுதிக்குள் 2.4 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கலாம் என்று ஒரு தகவல் கூறுகிறது. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகம் ஒரு ஆய்வு நடத்தியது. இத்தொழிலில் அமைப்பு ரீதியாக உள்ள துறைகளில் 1.14 இலட்சம் வேலைவாய்ப்பு உருவாகும் என்றும் அமைப்பு ரீதியில் அல்லாமல் மற்ற துறைகளில் மீதி வேலை வாய்ப்புகள் ஏற்படும் என்றும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

ஆண்டுக்குச் சராசரியாக 8 முதல் 10.4 சதவிகிதம் வேலைவாய்ப்பு அதிகரிக்கலாம் என்றும் 1985 ஆம் ஆண்டில் இது உயர்ந்த அளவை எட்டலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு இலட்ச ரூபாய் முதலீடு செய்தால் ஓட்டல்களில் 8 பேருக்கும், உணவு விடுதிகளில் 36 பேருக்கும் வேலைவாய்ப்பு உருவாகுவதாக அந்த ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. ஒன்றுக்கு 9.2 என்ற விகிதத்தில் மூலதன- வேலை வாய்ப்பு சராசரி விகிதாச்சாரம் இந்தத் தொழிலில் இருக்கிறது.

பணியாளர்கள் உயர் பதவி எட்டக்கூடிய வாய்ப்பு அதிகமிருக்கிறது. தொழில்நுட்ப மற்றும் சர்வீஸ் துறைகளில் ஆள் தட்டுப்பாடு காணப்படுகிறது என்றும், இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. நிர்வாகிகள், சமையல் நிபுணர்கள், பணியாளர்கள் போன்ற வேலைகளுக்கு ஆட்கள் தேவைப்படுகிறார்களாம்.

தமிழ்நாடு மட்டுமல்ல—இந்தியா மட்டுமல்ல— உலக நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்கள் வெளியிட்டுள்ள படிப்பு சம்பந்தமான விவரங்கள் (Prospectus) இங்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் என்னென்ன படிப்புகள் இங்குக் கற்பிக்கப்படுகின்றன என்ற விவரங்களைத் தெரிந்து கொள்கிறோம். இதே போல, தமிழ்நாட்டுக் கலைக் கல்லூரிகளின் ஆண்டு மலர்களும் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, சமூக சேவை படிப்பு படித்த பெண்கள் இது சம்பந்தமாக 24 வகையான வேலை வாய்ப்புகளைப் பெறலாம். அறிவியல் படித்தவர்களுக்கும் இதே போல 24 வகையான வேலைகள் உள்ளன.

ஒரு பக்கத்தில், அரசுத் தேர்வுப் பணியாளர் கழகத்தின் கேள்வித் தாள்கள் எல்லாம் வைக்கப்பட்டுள்ளன.

நாட்டுப் பணியில் நம் பங்கைச் செலுத்திட வழிகோலும் வகையில் பாதுகாப்பு கல்வி (Defence Studies) படிக்கவும் வசதிகள் உள்ளன. நாட்டில் இதற்கான 13 இராணுவப் பயிற்சிக் கல்லூரிகள் உள்ளன. தமிழ்நாட்டில் சென்னை, வேலூர், உதகமண்டலம் ஆகிய மூன்று இடங்களில் உள்ளன. மேற்கொண்டு 9 இடங்களில் இம்மாதிரியான கல்லூரிகள் துவக்கப்படவும் திட்டம் உள்ளது.

அனைத்திந்தியாவில் கதர் கிராமத் தொழில்கள்—பொருட்கள் உற்பத்தியில் (1979 — 80) தமிழ்நாட்டின் பங்கு என்ற பட்டியலில் தமிழ்நாடே முன்னணியில் இருப்பதைப் புள்ளி விவரம் எடுத்துக்காட்டுகிறது.

இந்தக் கண்காட்சியில் கவர்ச்சிக்கு இடமில்லை — கருத்துக்கே இடமுண்டு!

ஒரு படிக்கின்ற மாணவன் அல்லது படித்துவிட்டுச் 'சும்மா' இருக்கின்ற மாணவன் இந்தக் கண்காட்சிக்குள் சென்று திரும்பி வந்தால், நிச்சயம் தாமே ஒரு தொழிலை நடத்துவதற்கான ஊக்கம் பெறுவான்!

அதனால்தான் என்னவோ, கண்காட்சி முகப்பில், திருவள்ளுவர் உருவப்படத்தின் கீழே,—

துணைநலம் ஆக்கம் தருஉம்
வினை நலம்
வேண்டிய எல்லாம் தரும்.

என்ற திருக்குறள் எழுதப் பெற்றிருக்கிறது போலும்!

''ஒருவனுக்கு வாய்த்த துணையின் நன்மை ஆக்கத்தைக் கொடுக்கும்; செய்யும் வினையின் நன்மை அவன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்'' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க வாழ்க்கையினை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

''இன்பார்மெக்ஸ்'80'' கண்டு படித்த இளைஞர்கள், 'சொந்தக் காலில் நிற்கத் தூண்டுகோலாய் இருந்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற உதவுகிறது என்றால், அது மிகையல்ல!

# இராமநாதபுர மாவட்ட வளர்ச்சிப்பணிகள்



— இர. அண்ணாதுரை,
மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (செய்தி-மக்கள் தொடர்பு) இராமநாதபுரம் மாவட்டம்.

கிராமப்பகுதிகளில் புதிய கிராமங்களை உருவாக்கவும், தற்போதுள்ள கிராமங்கள் திட்டமிட்ட முறையில் விரிவாக்கப்படுவதற்கும் ஊரமைப்புத் திட்டங்கள் தீட்ட அரசு முடிவு செய்துள்ளது எனவும், நகரங்களும் நகரை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளும் மட்டுமே திட்டமிட்ட முறையில் வளருவது என்பதோடு நில்லாமல் கிராமங்களில் முறையான வளர்ச்சி ஏற்படவும் அதன் அடிப்படையில் குடிநீர் வடிகால் வசதி, கல்வி வசதி, தெரு விளக்கு வசதி போன்ற தேவையான வசதிகளுடன் கிராமங்கள் மிளிரவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் தமிழக அரசு முக்கியமான அறிவிப்பு ஒன்றினைச் செய்தது. அதன் தொடர்பாக இந்த ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 ஊராட்சி ஒன்றியங்களில் இந்தத் திட்டம் தன்னிறைவுத் திட்டமாகச் செயல்படுத்தப்படும் எனத் திட்டமிடப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில், இராஜபாளையம், வெம்பக்கோட்டை, காரியாபட்டி, போகலூர், இராமநாதபுரம் ஆகிய ஐந்து ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

சமுதாயத்தினரின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, சாலை வசதி முதலிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்; வறுமைக் கோட்டுக்குக் கீழே உழலும் தனிப்பட்ட குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தல்; கிராம வாழ் மக்களின் இன்றியமையாத தேவைகளான கீழ் காணும் அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுத்தல்; தன்னிறைவுத் திட்டத்தின் மேற்கண்ட முக்கியச் குறிக்கோள்களை மையமாகக் கொண்டு கீழ்க் காணும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன :

* கிராமப்புறச் சாலைகளை அமைத்தல், மேம்படுத்தல்.
* சிறு பாலங்கள் கட்டுதல்.
* குடிநீர் வசதி செய்து கொடுத்தல்.
* அரிசனக் குடியிருப்புகளுக்கும் மயானங்களுக்கும் பாதைகள் அமைத்துக் கொடுத்தல்.
* சிறு பாசன வசதிகளை மேம்படுத்துதல்.
* கிராம மருந்தகங்களுக்குக் கட்டிடம் அமைத்துக் கொடுத்தல்.
* தாய் சேய் நல விடுதிகளுக்குக் கட்டடம் அமைத்துக் கொடுத்தல்.
* பள்ளிக் கட்டடங்கள் அமைத்துக் கொடுத்தல்.
* மற்றும் நலிந்தோருக்கு, குறிப்பாக அரிசனங்களுக்குப் பயன்படும் பிற திட்டங்கள்.

தன்னிறைவுத் திட்டங்களைச் செயல்படுத்த முதல் கட்டமாகச் சென்ற ஆண்டு இறுதிக் கட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 8,10,000 வீதமாக ரூ. 40,50,000 முன் பணமாக இந்த 5 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கப்பட்டதோடு இந்த ஆண்டு பிரத்தியேகமாக மேற் குறித்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூபாய் 73,55,000மும், கிராமப்புற வேலைத் திட்ட நிதியிலிருந்து பள்ளிக் கட்டடங்களுக்கென தனியாக ரூ. 12,80,000மும் ஆக மொத்தம் ரூ. 1,26,85,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த 5 வட்டாரங்களிலும் 424 சாலை வேலைகளை அமைக்கவும் மற்றும் மேம்படுத்தவும், 69 சிறு பாலங்கள் அமைக்கவும் 61 அரிசனக் குடியிருப்புகளுக்கும் அரிசன மயானங்களுக்கும் சாலை அமைக்கவும், 45 சிறிய நீர்பாசன வசதிகளை மேம்படுத்தவும் 5 கிராம மருந்தகங்களுக்குக் கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கவும் 12 தாய் சேய் நல விடுதிகளுக்குக் கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கவும், 40 பள்ளிக் கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தமாக 657 வேலைகளுக்கு ஆகக் கூடிய மொத்த மதிப்பீடு ரூபாய் 168.37 இலட்சம். இந்த 657 வேலைகளுக்குண்டான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 'டெண்டர்கள்' மூலம் வேலைகளும் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன.

ஊராட்சி ஒன்றிய வாரியாகப் பார்க்குமிடத்துஇராஜபாளையத்தில் மொத்தம் 88 வேலைகள் ரூ. 20.60 இலட்சம் மதிப்பீட்டிலும், வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் 148 வேலைகள் ரூபாய் 32.63 லட்சம் மதிப்பீட்டிலும் காரியாபட்டியில் 134 வேலைகள் ரூ. 25 இலட்சத்திலும், போகலூர் ஒன்றியத்தில் 174வேலைகள் ரூ. 48.37 இலட்சம் மதிப்பீட்டிலும் இராமநாதபுரம் ஒன்றியத்தில் 115 வேலைகள் ரூ. 41.75 இலட்சம் மதிப்பீட்டிலும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு அரசு ஒதுக்கியுள்ள நிதியினை மானியமாகப் பெற இந்த ஐந்து ஊராட்சி ஒன்றியங்களும் அவைகளின் தரங்களுக்குத் தகுந்தவாறு 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை பங்குத் தொகையினை அளிக்க வேண்டியுள்ளது. அந்த முறையில் இராஜபாளையம்ரூபாய் 4.37 இலட்சம், வெம்பக் கோட்டை ரூ. 5.29 இலட்சம், காரியாபட்டி ரூ. 10.03 இலட்சம், போகலூர் ரூ. 12.37 இலட்சம், இராமநாதபுரம் ரூ. 11.35 இலட்சம் பங்குத் தொகையினை அளிக்க வேண்டியுள்ளது. இராஜபாளையம் ஒன்றியம் நீங்கலாக இதர ஒன்றியங்களின் நிதி நிலை பின் தங்கியதாக உள்ளமையால் அரசு இந்த இதர ஒன்றியங்களுக்குப் பங்குத் தொகையினை 'முன் கடனாக வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து ஒன்றியங்களி

லும் ஏற்கெனவே மேற் கொள்ளப்பட்ட வேலைகள் நீங்கலாக மேலும் கூடுதலாக வேலைகளை இரண்டாவது கட்டமாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுவதால் கூடுதலாக ரூபாய் 179 இலட்சம் வரை அரசு மானியம் தேவைப்படுகின்றது. இதற்கு தனியாக பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

31-3-81-க்குள் இந்த ஐந்து ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகளை முடிக்கும் நோக்குடன் அரசு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் கூடுதலாக ஒன்றியப் பொறியாளரும், மேற்பார்வையாளரும், சாலை ஆய்வாளர்களும் நியமித்ததோடு வேலைகளைத் துரிதமாக மேற்பார்வையிட்டு அளவிட்டு முடிப்பதற்கும் பிரத்தியேகமாக ஒரு உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஒவ்வொரு ஒன்றியத்தையும் தலைமையிடமாகவைத்து திறக்கப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேற் கொள்ளப்பட்ட வேலைகளுக்கெனத் தனியாக 2,400 மெ.டன் சிமிண்டும் 140 மெ.டன் இரும்புக் கம்பிகளும் தேவைப்படுகிறது. இதுவரை 840 மெ. டன் சிமிண்ட் கிடைக்கப்பட்டு ஐந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களையும் பிரத்தியேக உதவிக் கோட்டப் பொறியாளர்களையும், நெடுஞ்சாலைக் கோட்டப் பொறியாளர்களையும் தேவைப்படும் சிமெண்டையும் இரும்புக் கம்பிகளையும் இலாகா மூலமாகவே வழங்கி காண்டிராக்டர்களைத் துரிதமாக வேலைகளை முடிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. 31-3-81 நிர்ணயிக்கப்பட்ட நாளாக இருப்பினும் அதற்கு முன்பாகவே வேலைகளை முடிக்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே சமயத்தில் வேலையின் தரத்தையும் செம்மையாகக் கவனித்துக் கொள்ள நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பொறுத்த மட்டில் இந்த ஐந்து ஒன்றியங்களிலும் உள்ள 212 வகைப்படுத்தப்பட்டுள்ள 1 முதல் 5 வகையான குடியிருப்புகளில் 67 குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 145 குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வாரிய நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஏற்கெனவே சென்ற ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறா வேலைகளும் முடிந்து இந்த ஐந்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மேற்குறித்த வேலைகளும் 31-3-81-க்குள் தன்னிறைவு அடையும் என்பது திண்ணம்.

தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும் இந்த ஐந்து ஒன்றியங்களிலும் வறுமைக்கோட்டுக்கு மேல் கொண்டு வரவேண்டிய நிலையில் 62,363 குடும்பங்கள் உள்ளன. இந்த ஊராட்சி ஒன்றியங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம், பால் மாடுகள் வழங்குதல் ஆடு வளர்த்தல், வண்டி மாடுகள் விவசாய வண்டி வழங்குதல், தொழிற்பயிற்சி விவசாயக் கருவிகள் சகாய விலையில் வழங்குதல் போன்ற திட்டங்களை நிறைவேற்ற ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அரசு மானியமாக ரூ. 10 இலட்சம் வீதம் ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 146 இலட்சத்திற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும் வறட்சிக்கு இலக்காகும் பணித்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் வறுமைக் கோட்டுக்கு மேல் கொண்டு வர வேண்டிய 21702 குடும்பங்கள் பயனடைந்து அவர்களது வாழ்க்கை நிலையும் உயர்ந்து இந்த ஐந்து ஒன்றியங்களும் உயரிய நிலையை அடையும் என்பது உறுதி.



# 'இனி ஒரு விதி செய்வோம்'




எச். பி. என். ஷெட்டி, ஐ.ஏ.எஸ்.,

ஆணையர்—அரசுச் செயலாளர்

ஊர்வளர்ச்சி—

உள்ளாட்சித் துறை.


நம் நாட்டின் மிகப் பெரிய சொத்து நம் மக்களேயாவர். அவர்களில் சிறப்பாக கிராம மக்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தாலன்றி, நாடு முன்னேற்றப் பாதையில் செல்வது கடினமென்பதை நாம் அறிவோம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் வேளாண்மையை நம்பி வாழும் மக்கள், விவசாய வேலையற்ற நாட்களில் போதிய வேலையின்றி, மகிழ்ச்சிக் குன்றி வாழ்கின்றனர். இவர்களின் வறுமை நீங்கிடவும், செயலற்ற நிலை மாய்ந்திடவுமே'வேலைக்கு உணவுத் திட்டம்' மிகவும் பயன்படுகிறது.

அதே போன்று, கிராமத்தை முழு அளவாக எடுத்துக்கொண்டு அங்கு வாழ் மக்களின் தேவைகளை முழு அளவில் நிறைவு செய்து வைப்பது ''தன்னிறைவுத் திட்ட'' மாகும்.

இவ்விரு திட்டங்களும் வேலை வாய்ப்புத்திட்டத்துடன் இணைந்துச் செயலாற்றும்போது, தமிழக ஊர்ப்புறங்களின் தோற்றம் புதிய பொலிவுடன் விளங்கத் தொடங்குகிறது.

இதற்குச் சான்றாக, வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலை வளர்ச்சிக் கோட்டத்தை எடுத்துக் கொள்வோம். இக்கோட்டத்தில் 9 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

சென்ற ஆண்டு இக்கோட்டத்திற்கு மட்டும் 1206 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கப்பட்டது. ஒன்றிய அளவில் கணக்கிட்டால் இது ஓர் ஒன்றியத்திற்கு 134 மெட். டன் என்று ஆகிறது. இதனைக் கொண்டு சிறுபாலங்கள், ஊரக மருந்தகங்கள், தாய்-சேய் நல நிலையங்கள், சமுதாய மையங்கள், பள்ளிக்கட்டடங்கள் போன்ற சமூக வாழ்விற்கு நிலையான, தொடர்ந்து பயனளிக்கக் கூடிய 241 அரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 164 வேலைகள் முடிந்து மக்களுக்குப் பயனளித்து வருகின்றன.

தவிர, வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்திலும் கூட மேற்கண்ட நல்வாழ்வுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கை 137 எனக் கணக்கிடப்படுகிறது. இவற்றில் 8670 பேர்கள் சென்ற ஆண்டில் மட்டும் ஈடுபட்டு பயனடைந்தனர்.

திருவண்ணாமலை வளர்ச்சிக் கோட்டத்தை மட்டும் ஆய்வு செய்கையில் வேலையின்மை என்ற துன்ப நிலையை அகற்ற இக்கோட்டத்தில் உள்ள 9 ஒன்றியங்கள் மட்டும் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில் சென்ற ஆண்டு 3177 ஆண்களுக்கும், 126 பெண்களுக்கும் வேலைகள் தந்துள்ளது. இன்னும் பெரும்பான்மையோருக்கு வேலைத்தர ஒன்றியங்கள் முன்வந்தபோதிலும் 4588 பேர்கள் பதிவுசெய்து கொண்டதை ரத்து செய்து கொண்டு விட்டனர்.

இவ்வாண்டு, 905 மெட். டன் அரிசி இக்கோட்டத்திற்குத் தரப்பட்டது. இதனைக் கொண்டு, வேலைக்கு உணவுத் திட்டத்தில் 742 பணிகளும், வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில் 321 வேலைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூபாய் 39.76 இலட்சமாகும்.

இவற்றின் காரணமாக, எத்தனை கிராமவாசிகள் பயன் பெற்றனர்? 26,373 ஆண்களும், 4706 பெண்களும் மேற்கண்ட திட்டங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பயனடைந்தனர்.

இப்பகுதி மக்களைச் சந்தித்து அளவளாவியபோது, வேலைக்கு உணவுத் திட்டமும் வேலை வாய்ப்பு உறுதித் திட்டமும், தங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பென்றும், இவ்விரண்டும் இல்லாவிடில் அவர்களின் வாழ்வு சோர்வுற்று தளர்ந்து, உற்சாக மிழந்து விடும் என்றும் கூறுகின்றனர். இக்கூற்றுக்கு அவர்களின் முகங்களிலும் தோற்றங்களிலும் உள்ள மகிழ்ச்சியே சான்று பகர்கின்றன.

இனி சில ஒன்றியங்களில் நடைபெற்றுள்ள பணிகளை அறிவோம்.

வேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் செங்கானத்தம் மலைப் பாதையொன்றை அமைத்திருக்கிறார்கள். இது சாதாரண சாலையிலிருந்து 100 அடி உயரத்தில் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. செங்கானத்தம் - மேல் குப்பம் கிராம மக்கள் வேலூர் நகரை அடைவதற்குச் சுமார் 15 கி.மீ. சுற்றி வர வேண்டிய நிலை தற்போது இப்பாதையால் 2 கி. மீ. நீளத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது. பாதையை அமைக்க இவ்வொன்றிய அலுவலர்கள்

வெடி வைத்து, மலையை உடைத்து, பெரிய பெரிய மலைக் கற்களை சிறிய கற்களாக்கித் தடுப்புச் சுவர் அமைத்து, மலைப் பாதையை அழகுற அமைத்துள்ளனர். ஒன்றியத்திலுள்ள தொழில் நுட்ப வசதிகளைக் கருத்தில் கொண்டு நோக்கும்போது, வேலூர் ஒன்றியம் இதனால் பெருமையடையலாம்.

சமுதாய வளர்ச்சிக் கென்று, தமிழக மக்கள் தியாகங்கள் செய்ய என்றுமே தவறியதில்லை. அவர்களின் மகத்தான ஒத்துழைப்பை நேரில் கண்டு அக மகிழச் செய்த ஒரு சிறந்த பணி வேலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அல்லி நகர்-திருசூர்சாலையாகும்.

வேலைக்கு உணவுத் திட்டத்தின் வாயிலாக அமைக்கப்பட்டுள்ள இந்தச் சாலை செல்லும் இடங்கள் அனைத்தும் நன்செய் நிலங்களாகும். 21 பேர்களுக்குச் சொந்தமான விளைச்சல் நிலங்களை இச்சாலை அமைப்பதற்கென்றே இலவசமாகக் கொடுத்திருக்கின்றனர். இவ்வாறு அளிக்கப்பட்ட நிலங்களின் மொத்த மதிப்பு ரூ. 60,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒரேயொரு உழவர் மட்டும் ரூபாய் 24,000 மதிப்புள்ள தம்முடைய நிலத்தை, ஊர்மக்களின் பொது நன்மைக்கென்று தானமாக வழங்கியது, அவருடைய தாராள மனப்பாங்கிற்குச் சிறந்த சான்றாகும். இச்சாலை முடிவுறும் இடத்தில் 2 குடிசைகள் இருந்தன. அவற்றிற்குச் சொந்தமானவர்கள் ஊர் நலம் கருதி, அக்குடிசைகளை விட்டுவிட்டு, வேறிடத்தில் இருப்பிடத்தை அமைத்துக் கொண்ட செயலானது, உள்ளத்தைப் புளகாங்கிதமடையச் செய்கிறது. இவர்களிடையே துள்ளிப் பெருகும் உற்சாகம்; தன்னலமற்ற தனிப்பாங்கு பெரிதும் வியப்பில் ஆழ்த்துகிறது.

இதே ஒன்றியத்தில் ரூபாய் 26,547 செலவில் அமைக்கப்பட்டுள்ள மஞ்சாறு - திருசூர் சாலையினால் 15,000 பேர்கள் நன்மையடைந்து வருகின்றனர் என்று அலுவலர்கள் கூறும்போது வியப்படைகிறோம். இதற்கென, ரூ. 18,400 மதிப்புள்ள, 8450 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

கலசப்பாக்கம் ஒன்றியத்தில் வேளாண்மை உற்பத்தியைக் கூடுதலாக்குவதற்கு 45 நாட்கள் வேலை செய்து, 39 ஏக்கர் நிலம் பயனடைய, ஆனைவாடி ஏரிக்குச் செல்லும் கால்வாயை தூர் எடுத்துள்ளனர். இதனால் 752 உழவர்கள் பயனடைகின்றனர்.

தன்னிறைவுத் திட்டத்தில், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம் அருமையானத் திட்டங்களைத் தீட்டி, வெகு வேகமாகச் செயலாற்றுகிறது. இங்கு 9 இடங்களில் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அப்பள்ளிச் சிறார்கள் அனைத்தும் புதிய பள்ளிகள் கட்டப்பட்டு அங்கு வகுப்புகள் தொடங்கும் நாளை பேரார்வத்துடன் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர். தவிர, விஸ்வந்தாங்கள், பெருமனம், தச்சம்பட்டு ஆகிய ஊர்களில் ஒவ்வொன்றும் ரூ. 45,000 மதிப்பில் மூன்று மகப்பேறு குழந்தைகள் நல நிலையம் கட்டப்படுகின்றன. இங்கு மட்டும் 59 இடங்களில் சிறு பாலங்கள் கட்டப்பட்டு, பாசனக் கால்வாய்களுக்கும், மாட்டு வண்டிகள் போக்குவரத்திற்கும் சிறந்த வசதிகள் செய்யப்படுகின்றன.

துரிஞ்சாபுரம் ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தில் 115 பணிகளை மேற்கொண்டுள்ளது.

இவை தவிர, வட ஆர்க்காடு மாவட்டத்தில் முதியோர் கல்வித் திட்டமும் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படும் 5 ஒன்றியங்களில் 19,519 பேர்கள், 500 முதியோர் கல்வி மையங்களில் கல்வியறிவு பெறுகின்றனர்.

மாவட்டம் முழுவதுமாக் நடைபெற்றுள்ள வேலைகளைக் காண்போம். அதற்குச் சான்றாக உழைப்பிற்கு உணவுத் திட்டத்தினை எடுத்துக் கொள்வோம்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலைக்கு உணவுத் திட்டத்தில் சென்ற ஆண்டு மட்டும் ரூபாய் 47.621 இலட்சம் மதிப்புள்ள வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதற்கென, 2752 மெட்ரிக் டன் எடை அரிசி கூலியாக விநியோகிக்கப்பட்டுள்ளது. அரிசியைத் தவிர, கட்டுமான வேலைகளுக்காக ரூ. 5.174 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவற்றினைக் கொண்டு முடிக்கப்பட்ட வேலைகள் 946 ஆகும்.

இவ்வாண்டில் 31-10-80 முடிய 1099 வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வேலைகளின் மதிப்பு ரூ. 66.94 இலட்சமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. விநியோகிக்கப்பட்ட அரிசியின் அளவு 3747. 600 டன் ஆகும். இவை தவிர, ரூ. 1.70 இலட்சம் பணமாகவும் மேற்கண்ட பணிகளை முடிக்கச் செலவிடப்பட்டது.

வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் 1979-80-ஆம் ஆண்டில் ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 1 இலட்சம் வீதம் ரூ. 376 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. திட்டத்திற்குத் தேவையானகருவி கருவிகள் வாங்குவதற்கும், புதிய பணிகளைத் தொடங்குவதற்கு மட்டுமே இந்தத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள 36 ஒன்றியங்களுக்கும் ரூ. 3.6 இலட்சம் மானியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, தமிழ்நாடு முழுவதற்கும், இவ்வாண்டிற்கென ரூ 10 கோடியைத் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.




காந்தம் பூண்டியில் பள்ளிக் கட்டடம் கட்டுதல்

# மாமதுரை போற்றுதும்!

**இல. இராசேந்திரன்**



'தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மதுரை'...

'தென்தமிழ் நன்நாட்டுத் தீது தீர் மதுரை...'

—இப்படிப் பல பழந்தமிழ் இலக்கியங்களிலே மதுரை மாநகரின் மாண்பு குறைவறச் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய போற்றுதலுக்கும் புகழுதலுக்கும் காரணம் என்ன என்று பார்க்கின்றபோது, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமையுடைய திருநகர் அது எனத் தெரிய வரும்.

'படுத்திருக்கும் வினாக்குறி போல் மீசை வைத்த பாண்டியர்கள் வளர்த்த மொழி....'...

—என்று, இற்றைக் கவிஞர் சுரதா அற்றை நாள் பாண்டியரின் அருஞ்சிறப்பைப் பாடுகிறார்.

உலகமொழி என இன்றைக்குச் சொல்லப்படுகின்ற ஆங்கிலத்தின் பிறப்பு வளர்ப்பு பற்றி அறிய முடிகிறது; ஆராய முடிகிறது. ஆனால் தமிழ்மொழியின் தோற்றமும் பிறப்பும் பற்றி ஆராய்ச்சி மனம் கொண்டவர்களாலும் அறிய முடியவில்லை.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்னே தோன்றி, பழமையும் தொன்மையும் கொண்டு, பன்னெடுங் காலமாக மாறா இளமையுடனும் மங்காப் பொலிவுடனும் வாழ்ந்து வளர்ந்துவரும் மொழியான நமதருந் தமிழுக்கு - தனக்கென ஒரு தனித்துவமும் வரலாறும் கொண்ட தமிழுக்கு மாட மாமதுரையிலே சங்கம் அமைத்திருந்த காலம் பற்றிக் கூறவந்த மூதறிஞர் பலரும் பலவிதமாகக் கூறினர்.

## முத்தமிழும் முச்சங்கமும்

சங்ககாலம் கி.மு. 8000 முதல் கி.பி. 100 ஆக இருந்திருக்கலாம் என்கிறார் வி.கே. சூரியநாராயண சாஸ்திரியார். கி.பி. 8 முதல் 9ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்கிறார் ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல். கி.மு. 500 என்கிறார் எம். சீனிவாச ஐயங்கார். கி.மு. 10150- கி.பி. 150 வரை இருக்கக்கூடும் என்கிறார் தாமோதரம் பிள்ளை.

இன்னும் இதற்கோர் முடிவு உண்டானபாடில்லை.

சீரும் பெருமையும் கொண்ட நம் தமிழுக்குப் பாண்டிய மன்னர்கள் கூடல்மாநகரில் சங்கம் வைத்திருந்த விவரம் இறையனார கப் பொருளிலேதான் காணப்படுகிறது.

அதன்படி—

பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் விளங்கிடும் நம் தமிழுக்கான தலைச் சங்கம் தென் மதுரையில் அமைந்திருந்தது. அதனைக் காய்சினவழுதி முதல் கடுங்கோன் ஈறாகப் பாண்டிய மன்னர்கள் 89 பேர்காத்துவளர்த்தனர். 4449 பேர் அங்கம் வகித்த இச்சங்கம் 4440 ஆண்டுகள் இருந்து கடல் கோள்பட்டது. இந்தத் தலைச் சங்கத்திலே தான் பரிபாடல், முதுகுருகு, முதுநாரை முதலான பல நூற்கள் பாடப்பட்டன.

வாழையடி வாழையென வாழ்ந்த பெருமையும், வரலாற்றுச்சிறப்பும் உடைய தமிழுக்கான இடைச்சங்கம் கபாடபுரத்திலே நிறுவப்பட்டது. பாண்டிய மன்னர்கள் வெண்டேர்ச் செழியனிலிருந்து முடத்திரு மாறன் ஈறாக 59 பேர் இதன் புரவலர்கள். 3,700 பேர் இதில் பங்கேற்றுப் பாடினர். தமிழ்நலம் நாடினர். கலி, குருகு, அகவல், வெண்டாளி, வியாழ மாலை எனப் பல நூற்கள் வெளிவரக் காரணமாயிருந்த இந்த இடைச் சங்கம் 3,700 ஆண்டுகள் இருந்து சிறந்திருந்த நிலையில் கடல் கொள்ளப்பட்டது.

உத்தர மதுரையில், மாமன்னன் முடத்திருமாறனால் துவக்கப் பட்டது கடைச் சங்கம். உக்கிரப்பெருவழுதி வரை 49 பேர், கால வெள்ளத்தால் அழிக்க முடியாத இலக்கியச் செல்வங்களும் இலக்கண அரண்களும் உடைய நம் தமிழ்காத்த சங்கம் காத்தனர். 1850 ஆண்டுகள் அரும்பணியாற்றிய இச்சங்கத்தில் 449 புலவர் பெருமக்கள் அணிசெய்தார்கள். சிறுமேதாவியார், சேந்

தம்பூதனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார், மதுரை இளநாகனார் உள்ளிட்ட அப்புலவர் பெருமக்கள் - நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு நற்றிணை நானூறு, புறநானூறு, கூத்து, வரி, சிற்றிசை முதலான சிறந்த நூற்கள் பல தோன்றிடக் காரணமாயினர்.

முத்தமிழ் வளர்த்திட்ட முச்சங்கங்களின் சிறப்பிவை. இவை மட்டுமா மதுரையின் மாண்பு? இன்னும் பல இலக்கியச் சான்றுகளே உண்டு. இதோ சில;

## மதுரையின் பிறபெயர்கள்

அழகு தமிழ் இலக்கியத்தில் மதுரையின் பிற பெயர்களாக ஏறத்தாழ ஐம்பது பெயர்கள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் சில வருமாறு-அங்கண் மூதூர், ஆலவாய், உயர் மதிற்கூடல், கடம்பவனம், கன்னுபுரம், கூடற்பதி, கூடல், கூடல்மா நகரம், கூடலம்பெரும்பதி, சிவராசதானி, சிவன் முத்தித் தலம், தக்கண மதுரை, தமிழ் கெழுகூடல், திறல் மதுரை, திருமதுரை, திருமலி மூதூர், திருமாமதுரை, திருவாலவாய், துவாத சாந்தத் தலம், தெய்வத் தமிழ்க் கூடல், தெளி தமிழ்க் கூடல், தென்மதுரை, தென் மதுராபுரம், தொன் மதுரை, நான்மாடக் கூடல், பூலோகக் கயிலாயம், பூலோகச் சிவலோகம், பெரும் பெயர் மதுரை, பொற்கூடல், மதுரை, மதுராபுரி, மதுரா நகர், மதுரை மூதூர், மதுரைப்பதி, மருதை, மல்லன் மூதூர், மலிபுகழ்க்கூடல், மாடமதுரை, மாமதுரை, மும்மைத்தமிழ்க் கூடல், வழுதிக் கூடல், வெள்ளியம்பலம்.

## புகழ்பாடும் நூற்கள்

சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்தத் தக்க தமிழ் வளர்த்த மதுரை பற்றிய குறிப்புக்கள் பல்வேறு தமிழிலக்கியங்களிலே காணக்கிடைக்கின்றன. எவையெல்லாம் அவை தெரியுமா?

அகநானூறு, அழகர் அந்தாதி, அழகர் கிள்ளை விடுதூது, இறையனார் அகப்பொருள் உரை, ஔவையார் தனிப்பாடல்கள், கல்லாடம், கலித்தொகை, கலிங்கத்துப்பரணி, கந்தபுராணம், கந்தர் கலிவெண்பா, கம்பர் தனிப் பாடல்கள், காளமேகப் புலவர் பாடல்கள், கூடற் பள்ளு, கோடீச்சுரக் கோவை, சங்கர சோழனுலா, சிலப்பதிகாரம், சிறுபாணாற்றுப்படை, சொக்கநாத வெண்பா, தக்கயாகப் பரணி, தமிழ்ச் சங்க மான்மியம், தமிழ்விடு தூது, திருக் குற்றாலக் குறவஞ்சி, திருக்கோவையார், திருமுருகப்பாசுரம், திருமுருகாற்றுப்படை, திருவாலவாயுடையார் கோயில் திருப்பணி மாலை, திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், திருவாசகம், தேவாரம், தேவையுலா, பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணம், பரிபாடல், பரிபாடல் திரட்டு, பாண்டிக்கோவை, பாண்டிமண்டல சதகம், புகழேந்திப் புலவர் பாடல்கள், புறநானூறு, புறத்திரட்டு (ஆசிரிய மாலை), பெரிய புராணம்.....

—இவை மட்டுமா? இன்னும் நீள்கிறது பட்டியல்.

நற்றிணை, நந்திக் கலம்பகம், நாரைவிடு தூது (காளிமுத்துப் புலவர் பாடியது), நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், நெடுநல்வாடை, மதுரைக் கலம்பகம், மதுரைக்கா, மதுரைத் தலபுராணம், மதுரைத் திருப்பணிமாலை மதுரைத் தேவாரம், மதுரை மான்மியம், மதுரை மும்மணிக் கோவை, மதுரையமக அந்தாதி, மணிமேகலை, முக்கூடற் பள்ளு, முத்தொள்ளாயிரம், மூவருலா, மீனாட்சியம்மை இரட்டை மணி மாலை, மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலவிருத்தி, வண்டுவிடுதூது (கடிகை முத்துப் புலவர்) ஆகிய பல இனிய தமிழ் நூற்கள், உலகத்தமிழ் மாநாடு நடக்கவிருக்கும் மதுரையின் உயர்வுபற்றிக் கூறுவனவாகும்.!

தமிழறிந்தார் மட்டுமல்ல; பிற மொழியாளரும் கூட மதுரை நகரின் மாண்பு குறித்து எழுதிச் சென்றிருக்கின்றனர்.

அல்பருணியின் குறிப்பு (அராபியர்), கால்டுவெல் குறிப்பு, கௌடில்லியரின் அர்த்த சாஸ்திரம், வடமொழி நூற்களான சியாமளா தண்டகம் -மதுராவிஜயம், தாலமியின் பூகோள நூல், பாரசீகப் பயணிகளின் குறிப்பு, பிளினியின் குறிப்பு, புரொன்யசா பாதிரியார் கடிதங்கள், பெரிப்ளூஸ் எழுதிய எரித்தியன் கடல், மகாவமிசம் (இலங்கை வரலாற்று நூல்), மார்கோபோலோ குறிப்புகள், மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா, வாசப் என்கிற முகமதிய பயணியின் குறிப்புகள், வியாசரின் மகாபாரதம், ஸ்ட்ராபோவினுடைய குறிப்பு, ஸ்கந்த புராண அகத்திய சம்ஹிதை, ஹாலாஸ்ய மகாத்மியம் ஆகிய பிற மொழி நூற்களிலும் குறிப்புகளிலும் கூட மதுரை மாநகர் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

## மதுரை நகரப் புலவர்கள்!

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இலக்கண வரம்பு கொண்டு வாழ்ந்த மொழியான தமிழாம் தாய்க்குப் புகழ் சேர்த்த புலவர் பெருமக்களில் பலர் மதுரையைச் சேர்ந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

யாரெல்லாம் அவர்கள் என்கிறீர்களா? இதோ விவரம்—

அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார், அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனார், அறுவை வாணிகன் இளவேட்டனார், ஆசிரியர் நல்லந்துவனார், ஆசிரியர் கோடங் கொற்றன், ஆலருவி நாட்டு ஆலம்பேரி சாத்தனார், இளங் கண்ணிக் கௌசிகனார், இளங்கௌசிகனார், இளம் பாலாசிரியன் சேந்தன் கூத்தனார், ஈழத்துப் பூதன் தேவனார், எழுத்தாளன், எழுத்தாளன்

## தெரியுமா? தோழர்கள்!

சோழப் பேரரசனான கங்கை கொண்ட இராசேந்திரன், தன் மகனுக்கு மதுரையில் சுந்தரசோழ பாண்டியன் என முடிசூட்டினான். இராசேந்திரன் பெயரால் அங்கு ஒரு புரம் நிறுவப்பட்டு அரண்மனையும் எழுப்பப்பட்டது! இப்படிப் பல அரண்மனைகள் அங்கு இருந்தன. அவ்வப்போது மூண்ட போர்களின் காரணமாய் இவை அழிந்துபட்டன! திருமலை நாயக்கரால் தோற்றுவிக்கப்பட்ட மாளிகை மட்டுமே இன்றும் எழில்காட்டி நிற்கிறது!

சேந்தன் பூதன், ஓலைக் கடைக் கண்ணம் புகுந்த ராயத்தனார், ஓலைக் கடையத்தார் நல்வெள்ளையார், பகடையத்தார் மகன் வெண்ணாகன், கண்ட ரதத்தன், கண்ணத்தனார், கண்ணனார், கணக்காயனார், கணக்காயனார் மகனார், நக்கீரனார், கதக்கண்ணன், சுந்தரதத்தன், கவுணியன் பூதத்தனார், கள்ளம்போதனார், கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், மதுரைக் காஞ்சிப் புலவர், மதுரைக் காமக்கனி நப்பாலத்தனார், காருலவியங் கூத்தனார், குமரன், கூத்தனார், கூலவாணிகன் சாத்தன், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்...

—மூச்சு முட்டுகிறதா? ஒரு வினாடி ஓய்வெடுத்துக்கொண்டு மேலே படியுங்கள்.

இவர்களெல்லாம் மதுரைப் புலவர்களே! ஒவ்வொருவர் பெயருக்கு முன்னாலும் 'மதுரை'யை சேர்த்துப் படித்திட வேண்டும். அப்படித்தான் இலக்கியங்களிலே காணப்படுகிறது!

**பாண்டிய மன்னர்கள் பட்டியல்**

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் மொத்தம் நூற்றுத் தொண்ணூற்றேழு பேர் என்கிறது 'இறையனார் அகப்பொருள் உரை'. அவ்வளவு பேரின் பெயர்களும் நமக்குக் கிடைக்கவில்லை. கிட்டிய மன்னர்களின் பெயர்கள் இவை—

அண்டர் மகன் குறுவழுதியார், அறிவுடை நம்பி, ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்

கடுங்கோன், மாறவர்மன் அவனி சூளாமணி, சடைய வர்மன் செழியன் சேந்தன், அரிகேசரி மாறவர்மன், கோச்சடையன் இரணதீரன், முதலாம் மாறவர்மன் இராசசிம்மன், பராந்தக நெடுஞ்சடையன், சீமாறன் சீவல்லபன், இரண்டாம் வரகுணவர்மன், பராந்தக வீரநாராயணன்...

—இவர்களெல்லாம் மதுரையை ஆண்ட முற்காலப் பாண்டிய மன்னர்கள்

மூன்றாம் இராசசிம்ம பாண்டியன், வீரபாண்டியன், அமரபுயங்கன், மானாபரணன், சுந்தரபாண்டியன், விக்கிரம பாண்டியன், சீவல்லப பாண்டியன், பாண்டியன் வீரகேசரி, சடையவர்மன் சீவல்லபன், மாறவர்மன்




கொல்லன் புல்லன், கொல்லன் வெண்ணாகனார், பொன்செய் கொல்லன் வெண்ணாகனார், சீத்தலைச் சாத்தன், செய்கண்ணனார், தத்தங் கண்ணனார், தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார், தமிழ்க் கூத்தனார், தமிழ்க் கூத்தனார் கடுவன் மன்னனார், நக்கீரர், நக்கீரனார், நல்வெள்ளியார், படைமங்க மன்னியார், படை வாணிகன் இளந்தேவனார், மருதங் கிழார் மகனார் சோகுத்தனார், பாலாசிரியன் நற்றாமனார், பாலாசிரியன் நப்பாலனார், பாலாசிரியன் சேந்தன் கொற்றனார், புல்லங் கண்ணனார், பூதன் இள நாகனார், பூவண்ட நாகன்வேட்டனார், பெருங்கொல்லன், பெருமருதனார், பெருமருதிள நாகனார், பேராலவாயர், போத்தனார், மருதங்கிழார் மகன் இளம் போத்தன், மருதங்கிழார் மகனார் கோகுத்தனார், மருதங் கிழார் மகனார் பெருங்கண்ணனார், மருதனிள நாகனார், வேளாசான், வேளாதத்தார்.

மாறன், ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, கடுங்கோன் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி, காய்சின வழுதி, கானப் பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, கீரஞ்சாத்தன், குறுவழுதியார், கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், நிலந்தரு திருவிற் பாண்டியன், நெடுஞ்செழியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பன்னாடு தந்த பாண்டியன், பூதப் பாண்டியன், முடத்திருமாறன், வடிம்பலம்ப நின்ற பாண்டியன், வெண்டேர்ச் செழியன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, வெற்றிவேற் செழியன்.

—இவர்களெல்லாம் சங்க காலப் பாண்டிய மன்னர்களாவர்.

திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் பராந்தக பாண்டியன், மாறவர்மன் சீவல்லவன், சடையவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன், மாறவர்மன் விக்கிரம பாண்டியன்.....

—இவர்களெல்லாம் கி.பி.900 முதல் கி.பி. 1190 வரையில் ஆண்ட பாண்டியர்கள்.

முதல் சடையவர்மன் குலசேகரபாண்டியன், முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன், இரண்டாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன், இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன், சடைய வர்மன் விக்கிரம பாண்டியன், முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் விக்கிரம




பாண்டியன், ஜடாவர்மன் வீர பாண்டியன்.....

—இவர்களெல்லாம் கி.பி. 1190 முதல் கி.பி. 1310 முடிய ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களாவர்.

சடையவர்மன் வீரபாண்டியன், சடையவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகர பாண்டியன், சடைய வர்மன், பராக்கிரம பாண்டியன், மாறவர்மன் வீரபாண்டியன், மாறவர்மன் பாரக்கிரம பாண்டியன்....

—இவர்களெல்லாம் கி.பி. 1310ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள்.

பராக்கிரம பாண்டியன், இரண்டாவது பராக்கிரமபாண்டியன், மூன்றாவது பராக்கிரமபாண்டியன், சடையவர்மன் குலசேகரன், சடையவர்மன் விக்கிரம பாண்டியன், சடையவர்மன் பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் குலசேகர பாண்டியன், அழகன்பெருமாள் பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் சீவல்லப பாண்டியன், சடையவர்மன் பராக்கிரம குலசேகர பாண்டியன், நெல்வேலி மாறன், சடையவர்மன் அதிவீரராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன், வரகுணராம குலசேகர பாண்டியன்......

—இந்தப் பாண்டிய மன்னர்களெல்லாம் தென்பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்த பிற்காலப் பாண்டியர்கள் ஆவர்.

1866ஆம் ஆண்டில் நகராட்சியாகி, 1971ஆம் ஆண்டில் மாநகராட்சி ஆகிய மதுரையின் மீது—அந்நாளில் படையெடுத்தோர் பலராவர். தமிழகத்தின் அணியெனத் திகழும் இந்நகரைத் தமதாக்கிக் கொள்ள மாலிக்காபூர் (கி.பி. 1311), அலாவுதீன் (கி.பி. 1312), குஸ்ருகான் (கி.பி.1316) உலூகான் (கி.பி.1323), முகமது பின்-துக்ளக் ஆகியோர் படையெடுப்பு நடாத்தினர்.

**சுல்தான்களும் நாயக்க மன்னர்களும்**

மதுரையை ஆண்ட சுல்தான்கள்-ஜலாலுதீன், அலாவுதீன் உடௌஜி, குத்புதீன், கியாஸ் உத்தீன் தம்கானி, நாசிர் உத்தீன், அடில்ஷா, பக்ருதீன் முபாரக்ஷா, அலாவுதீன் சிக்கந்தர் ஆகியோராவர்.

மதுரையில் நாயக்க மன்னர்கள் கை ஓங்கியது நாளடைவில்.

அவர்கள் ஆட்சிக்கால மதுரை வரலாறு இது:

விசுவநாத நாயக்கர், முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர், இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர், விசுவப்பநாயக்கர், கஸ்தூரி ரங்கப்ப நாயக்கர், முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர், முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் திருமலை நாயக்கர், குமாரமுத்து நாயக்கர், இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர், சொக்கநாத நாயக்கர், மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர், மங்கம்மாள் விஜயரங்க சொக்கநாத நாயக்கர், மீனாட்சி அரசி (விஜயரங்க சொக்கநாதர் மனைவியார்)

**மதுரையை ஆண்ட நாயக்கர்கள் பட்டியல் இது.**

அன்றைய வரலாற்றிலும் இன்றைய வரலாற்றிலும் தனக்கெனத் தனிப்பெருமை கொண்டு திகழும் தண்டமிழ் வளர்ந்திட வழி கோலிய மதுரைநகரின் மாண்புகள் இன்னும் இன்னும் எத்தனையோ!

## மாநாட்டு மதுரையின் பழஞ்சிறப்பு!

மதுரை மாநகரின் அமைப்பு மலர்ந்த தாமரைப் பூவைப் போலிருந்தது. வலிவுமிக்க அரண் அந்நகரைச் சூழ்ந்திருந்தது. அதில் ஏராளமான பொறிகள் அமைக்கப்பட்டிருந்தன. முதலைகள் நிறைந்த அகழி இருந்தது. மதுரையின் அரண்வாயிலைச் சிறந்த காவலர்கள் காத்து நின்றனர். அழகு நிறை மாட மாளிகைகளும், தேரோடும் நீண்ட தெருக்களும், தொழில் பல புரிவோர் இருக்கைகளும் நிறைந்து விளங்கின இந்நகரில் என்று சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரம் முதலான பெருங்காப்பியங்களும் எடுத்துரைத்திருக்கின்றன!

# டில்லியில் தமிழக முதல்வர்

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள், 28.11.80 அன்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை டெல்லியில் சந்தித்துப்பேசினார்.

அப்போது, மதுரையில் ஜனவரி முதல் வாரத்தில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டினைத் தொடங்கி வைக்க வருமாறு பிரதமர் அவர்களுக்கு முதல்வர் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

மத்திய வணிகத்துறை அமைச்சர் திரு பிரணாப்குமார் முகர்ஜி அவர்களை முதல்வர் சந்தித்தார். ''நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடர் முடிந்தபிறகு, வணிகத்துறை அமைச்சர் அவர்கள் சென்னை வருவார். அப்போது அவர் பி அண்டு சி மில் மூடப்பட்டது சம்பந்தமான எல்லா அம்சங்கள் குறித்தும் விவாதிப்பார்'' என்று முதல்வர் அவர்கள் பின்னர் தெரிவித்தார்.

மத்திய நிதியமைச்சர் திரு ஆர். வெங்கட்டராமன் அவர்களையும் முதல்வர் அவர்கள் சந்தித்து, பின்னி மில் பிரச்னை குறித்து கலந்துரையாடினார். தொடர்ந்து, மத்திய செய்தி-ஒலி பரப்புத் துறை அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்களை முதல்வர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் பிரச்சார அமைப்புகள் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் குறித்து விரிவாகப் பேசினார்.

மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு பி.சி. சேத்தி அவர்களை முதல்வர் அவர்கள் சந்தித்து, மரவள்ளிக் கிழங்கை முக்கிய மூலப் பொருளாகக் கொண்டு, எரி சாராயத்தைத் தயாரிக்க சேலத்தில் ஓர் எரி சாராய ஆலையை ரூபாய் இரண்டரை கோடிச் செலவில் அமைக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருப்பது குறித்தும், இந்த ஆலையை அமைக்க விரைவில் அனுமதி வழங்குமாறும் அவரை முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மத்திய தொழில் துணை அமைச்சர் திரு சரண்ஜித் சனானா அவர்களையும் முதல்வர் அவர்கள் சந்தித்தார். இரண்டு நாட்கள் டெல்லியில் இருந்து விட்டு 29.11.80 அன்று சென்னைக்குப் புறப்படும் பொழுது, குடியரசுத் தலைவர் அவர்களையும் முதல்வர் அவர்கள் சந்தித்தார்.



நாடாளுமன்ற நூலகத்தில் தமிழக முதல்வர்

# டில்லியில் மாண்புமிகு தமிழக முதல்வர்



இந்தியக் குடியரசுத தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களுடன்....



இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடன்; தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சிறப்புப் பிரதிநிதி திரு மா. முத்துசாமி அவர்கள் உடன் உள்ளார்.

மைய அரசின் நிதி அமைச்சர் திரு ஆர். வெங்கட்டராமன் அவர்களுடன்....



மைய அரசின் வணிகத்துறை அமைச்சர் திரு பிரணாப் குமார் முகர்ஜி அவர்களுடன்...





மைய அரசின் செய்தித்துறை அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்களுடன்...

மைய அரசின் தொழில்துறை துணை அமைச்சர் திரு சரண்ஜித் சனானா அவர்களுடன்..,





# குமரி மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை வளர்ச்சி!

இந்தியப் பெருநாட்டின் தென் கோடி மாவட்டமாகிய குமரி மாவட்டம் இயற்கை வளங்கள் அனைத்தும் ஒருங்கே இணையப் பெற்றது. குளிர்ச்சியும் வனப்பு மிக்க அதன் மலைத் தொடரும் மலைத் தொடருடன் இணைந்து விளங்கும் தென்னந்தோப்புகளும் நெல் வயல்களும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. இம்மலைத் தொடரும் அதனைத் தொடர்ந்து நீண்டு கிடக்கும் நிலப்பரப்பும் தோட்டப் பயிர்களின் முன்னேற்றத்திற்குக் கூடுதல் வாய்ப்பினை நல்குகின்றன. இயற்கையின் அருளால் ஆண்டு முழுவதும் நல்ல மழையினை இம்மாவட்டம் பெறுகின்றது.

இச்சூழ்நிலைகளால் இம்மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறையினை விரிவாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் இருக்கின்றன.

இதைக் கருத்தில் கொண்டு கீழ்கண்ட திட்டங்கள் குமரி மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மேற்குத் தொடர்ச்சி மலையில்....**

மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம் 1978-79 நிதியாண்டு முதல் மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 1978-79 முதல் 1980-81 முடியவுள்ள மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் ஆயிரம் ஏக்கர் வீதம் 3,000 ஏக்கர்களில் வாசனைத் திரவியங்கள் எனப் போற்றப்படும் கிராம்பு, ஜாதிக் காய், மிளகு, இலவங்கம், கொக்கோ ஆகியபணப்பயிர்களும் மா, பலா, கொய்யா, எலுமிச்சை, ஆரஞ்சு, அன்னாசி ஆகிய பழப்பயிர்களும் பயிரிடப்படுவதற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு புதிதாக இப்பயிர்களைப் பயிரிடுவதற்கு தேவையான உயர்ரக நாற்றுக்கள்யாவும் அரசு மிளகுப் பண்ணை பேச்சிப்பாறை, அரசு பழத் தோட்டம் கன்னியாகுமரி ஆகிய இடங்களிலிருந்து 50 சதம் மானிய விலையில் வினியோகிக்கப்படுகின்றன. மேலும் இத்தோட்டங்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 150 பெருமானமுள்ள இரசாயன உரமும் ரூபாய் 25 பெருமானமுள்ளபூச்சி மருந்துகளும் 50 சதம் மானிய விலையில் வினியோகிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் குமரி மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலங்கள் அவற்றிற்காகச் செலவிடப்பட்ட அரசு நிதி, அதனால் பயன்பெற்ற விவசாயிகள் ஆகிய விபரங்கள்கீழே தரப்பட்டுள்ளன:

1978-79ல் 3 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில், 1,122 ஏக்கரில் பயிரிடப்பட்டு 431 விவசாயிகள் பலன்பெற்றனர். 1979—80-ல் 4 லட்சத்து 12 ஆயிரம் ரூ. செலவில் 1,162 ஏக்கரில் 589 விவசாயிகள் பயன் பெற்றனர்.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் புதியதாக 1122 ஏக்கர் பயிரிடவும் அதற்காக ரூ. 4,43,600 செலவிடவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை இந்நிதியாண்டில் 265 ஏக்கர்கள் பதியதாகப் பயிரிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள் குறிப்பிட்ட இலக்கினை அடைவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அ. பன்னீர்ச் செல்வம்,**
மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்,
(செய்தி மக்கள் தொடர்புத்துறை)
கன்னியாகுமரி.

## மிளகு அபிவிருத்தித் திட்டம்

பேச்சிப் பாறையில் இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் அரசு மிளகு நாற்றுப் பண்ணை 15 ஏக்கர் பரப்பினை உடையது. இப்பண்ணையில் மிளகுப் பதியன்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படுகின்றன. 1967-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் நிறுவப்பட்ட இப்பண்ணை இதுவரை 695 ஏக்கர்களுக்குத் தேவைப்பட்ட மிளகுப் பதியன்களை உற்பத்தி செய்து வினியோகம் செய்திருக்கின்றது.

நடப்பு நிதியாண்டில் 2லட்சம் மிளகுப் பதியன்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆகஸ்டு மாத இறுதி வரை 83,000 பதியன்கள் உற்பத்தி செய்யப்பட்டு விட்டன.

இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் இந்நிதியாண்டில் ரூ. 50,000 செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வாசனைத் திரவியப் பயிர்கள்

இத்திட்டத்தின் குறிக்கோள் வாசனைத் திரவிய பயிர்களான கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் பன்னியூர் 1 மிளகு ஆகியவற்றில் உயர் ரகக் கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்வதே. மேற்கண்ட உயர்ரக நாற்றுக்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்காக இத்திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் 1976 ஜனவரித் திங்கள் முதல் 3 எக்டேர் நிலப்பரப்பில் பேச்சிப் பாறையில் செயல்பட்டு வருகின்றது.

1979-80 நிதியாண்டு முடிய 2.5 லட்சங்களுக்கும் மேற்பட்ட செடிகள் இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டு வினியோகிக்கப்பட்டுள்ளன. இங்கு உற்பத்தியாகும் செடிகள் குமரி மாவட்டத்தில் மட்டுமின்றிதமிழகம் முழுவதிலும் வினியோகம் செய்யப்படுகின்றன.

செடிகளின் உற்பத்தி தவிர பன்னியூர் 1 இன உயர்ரக மிளகுச் செடியின் நவீன உற்பத்தி முறைகளை விவசாயிகளுக்கு விளக்குவதற்காக மாதிரி பாத்திகளும் இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 52,500 பன்னியூர் 1 இன மிளகு பதியன்களும் 26,250 உயர்ரகக்கிராம்புமற்றும் ஜாதிக்காய் கன்றுகளும் உற்பத்தி செய்ய வழிகோரப்பட்டுள்ளது. ஆகஸ்டுத் திங்கள் இறுதி வரையில் 60,000 பன்னியூர் 1 இன மிளகு பதியன்களும் 24,000 கிராம்பு நாற்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

> * உண்மை, அறிவு, ஆனந்தம் இம்மூன்றின் சொருபமே ஆண்டவன்.
>
> * நல்லவர்களும் பரிசுத்தமானவர்களும் அடங்கிய கூட்டத்தையே நீங்கள் நாட வேண்டும்.
>
> — காந்தியடிகள்

இத்திட்டத்தைச் செயல்படுத்த இந்நிதியாண்டில் ரூபாய் 75,000 செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 'கியூ' அன்னாசி பழத் திட்டம்

அதிகப் பருமனும் எடையும் உள்ள பழங்களைத் தரவல்ல உயர் ரக 'கியூ' அன்னாசி நாற்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்வதற்காக இத்திட்டம் 1975 பிப்ரவரித் திங்கள் முதல் செயல்படுத்தப்படுகின்றது.

இந்நாற்றுப் பண்ணையின் மொத்தப் பரப்பு 24.58 ஏக்கர்களில் 21 ஏக்கர்களில் 'கியூ' இன அன்னாசி பயிரிடப்பட்டு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிதியாண்டில் சுமார் 3 லட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றும் வகையில் நடப்பு நிதியாண்டில் ரூ. 50,000 செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அரசு பழப்பண்ணை

குமரிமுனையில் செயல்பட்டு வரும் அரசு பழப்பண்ணை 1922-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் பரப்பு 31.64 ஏக்கர். விவசாயப் பெருமக்களுக்கு நல்ல தரமான உயர்ரகப் பழச்செடிகளை உற்பத்தி செய்து வினியோகம் செய்வதையே தனது குறிக்கோளாகக் கொண்டுசெயல்பட்டு வரும் இப்பண்ணை ஆண்டுதோறும் சராசரியாக 35,000 கும் மேற்பட்ட பழச் செடிகளையும், பூச்செடிகளையும் உற்பத்தி செய்து வினியோகம் செய்து வருகின்றது. இப்பழப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் செடிகளை குமரி மாவட்டத்தில் மட்டுமின்றி தமிழகத்தின் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகள்விரும்பிப்பெறுகின்றனர்.

விஞ்ஞான முறையில் பராமரிக்கப்பட்டு, வரும்இப்பண்ணை ஆண்டுதோறும் ஆயிரக்கணக்காக விவசாயிகளும், உல்லாசப் பயணிகளும் பார்வையிடுகின்ற அரசின் மாதிரிப் பண்ணையாக விளங்கி வருகின்றது.

இந்த நிதியாண்டில் மா, கொய்யா, எலுமிச்சை, பாக்கு மற்றும் இதர ரக தோட்டக் கலை பயிர்கள் சுமார் 1 லட்சம் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உற்பத்திக்காக இந்நிதியாண்டில் ரூ. 2 லட்சம் செலவாகும்.

## பாக்கு அபிவிருத்தி

இத்திட்டத்தின் கீழ் உயர் ரக இன ''மங்களா'' பாக்கு நாற்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில் சுமார் 5,000 உயர் இன 'மங்களா' நாற்றுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இந்நிதியாண்டில் ரூ. 7,000 செலவிடப்படும்.

## மரச்சீனிக் கிழங்கு

இத்திட்டத்தின் கீழ் 4 செயல் விளக்கப் பாத்திகள் தனியார் தோட்டங்களில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் ரகங்களின் தரத்தை பற்றி விவசாயிகள் தெரிந்து கொள்ள இது துணை புரியும். இதற்கு மானியமாக இந்நிதியாண்டில் ரூ. 1,000 செலவிடப்படும்.

## புதிய திட்டங்கள்

† உதயகிரி கோட்டையில் மரச்சீனிக் கிழங்கு மாதிரி பண்ணையும் பயிற்சி நிலையமும் அமைத்தல். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான செயல்கள் தயார் செய்யப்படும் நிலையில்இருக்கின்றன்

† மரச்சீனிக் கிழங்கிலிருந்து ஈதைல் ஆல்கஹால் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

† ஜாதி மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

# அரசின் அறிவிப்புகள்

# ஆக்கப் பணிகள்

## 15—11—80

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 66 ஆயிரம் எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதியளிக்க அரசு மூலம் 278 கோடி ரூபாய் செலவிடப்படும் என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கா. ராஜாமுகமது அவர்கள் தெரிவித்தார்.

## 16—11—80

குவிண்டால் நெல்லுக்கு ரூ. 115 என்றும், கரும்பு டன்னுக்கு ரூ. 175 என்றும் விலை நிர்ணயித்து அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட நெல்லுக்கு ரூ. 10ம் கரும்புக்கு ரூ. 45ம் அதிகம் ஆகும்.

திருச்சி மாவட்டத்தில் கைவினைஞர்களுக்கு 130 சிறுதொழிற்கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும் எனமாண்புமிகு ஊரகத் தொழிலமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறினார்.



பவானியில் 3 கோடி ரூபாய் செலவில் பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட விருப்பதாக மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறினார்.

## 18—11—80

தென் இந்திய இராணுவப் பிரதேச சேனைகளில் சிறந்த சேனையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கோவை 110வது காலாட்படைப் பிரிவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 25 ஆயிரம் நன்கொடை வழங்கினார்.

## 19—11—80

மளிகைக்கடை, பெட்ரோல் பங்க், மார்வாடிக்கடை, சிகையலங்கார நிலையம், துணிக்கடை, ரேடியோ-கடியார ரிப்பேர் கடைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்குத் தமிழக அரசு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்தது.

ஊராட்சி ஒன்றியங்களில் காந்தியடிகள் கனவுகண்ட கிராமராஜ்யத்தை உருவாக்கத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டில் 101 ஊராட்சி ஒன்றியங்கள் தன்னிறைவுத் திட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் கூறினார்.

## 20—11—80

தஞ்சை மாவட்டம் எட்டுக்குடி சுப்பிரமணிய சுவாமி கோயில் ஊழியர் குடியிருப்புகள், ஓய்வு விடுதி ஆகிய வற்றுக்கான கட்டடங்களுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

## 21—11—80

திருப்பூரில் கதவடைப்புச் செய்யப்பட்டிருந்த பனியன் தொழிற்சாலைகளைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை அளித்து கடந்த ஆண்டைவிட 40 ரூபாய் அதிகமாக போனஸ் தருமாறும் கதவடைப்பு நாட்களுக்குச் சம்பளம் தருமாறும் அரசு உத்தரவிட்டது.

## 22—11—80

தஞ்சை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை ஒன்றும் நூற்பு ஆலை ஒன்றும் அமைக்கப்படும் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு, எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார். மருத்துவ வசதி கிட்டாத எல்லா இடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் கூறினார்.

31-ஆம் பக்கம் பார்க்க

# மிளகாயில் வெங்காயம்



தமிழ்நாட்டில் பயிர் செய்யப்படும் முக்கியப் பணப்பயிர்களுள் மிளகாயும் ஒன்றாகும். இந்தியாவில் மிளகாய் உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் மிளகாய் இறைவைப் பயிராகவும், மானாவாரிப் பயிராகவும் பயிர் செய்யப்படுகிறது. தற்போது, பயிர்சாகுபடிக்குத் தேவையான உள்ளீட்டுப் பொருட்களின் விலை ஏற்றத்தால் நிகர இலாபம் கணிசமாகக் குறைந்துள்ளது. அதனால் வருவாயை அதிகரிக்க மிளகாய் பயிரோடு உகந்த ஊடுபயிர்களைப் பயிரிடுதல் அவசியம்.

ஊடுபயிர்கள் குறைந்த நாட்களில் விளைச்சல் கொடுக்கக் கூடியதும், மிளகாய் பயிரின் வளர்ச்சியையும், மகசூலையும் பாதிக்காத முறையில் தெரிவு செய்து பயிரிடப்படுதல் அவசியம்.

மிளகாய் பயிர், 45 செ.மீ. இடைவெளி கொண்ட பார்களின் ஒருபக்கச் சரிவில் நடப்படுகிறது. தற்பொழுது மிளகாய்ப் பயிருடன் ஊடுபயிராக நாட்டு ரக வெங்காயம், பெல்லாரி வெங்காயம், கொத்தமல்லி, அகத்தி போன்ற பயிர்கள் ஆங்காங்கே சில இடங்களில் பயிர் செய்யப்படுகிறது. தனிப்பயிராகவும் மிளகாய் பயிரிடப்படுகிறது. ஊடுபயிராக வெங்காயம் சாகுபடிசெய்தால், மிளகாயின் மகசூல் பாதிக்கப்படுகிறதா? என்ற எண்ணம் நிலவுகிறது. இதைக் கண்டறிய அகில இந்திய ஒருங்கிணைந்த காய்கறி மேம்பாட்டுத் திட்டம் கோவில்பட்டியில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதன் பயனாக, சில பயனுள்ள முடிவுகள் கிடைத்துள்ளன.

பொதுவாக, விவசாயிகள் வெங்காயத்தை வரப்புகளில் மிளகாய் நடாத மறுபக்கத்தில் நடுவது வழக்கம். பாத்திகளில் நட்டால் நான்கு பக்கத்திலும் வரப்பின் இரு பக்கங்களிலும் நடுகிறார்கள். இந்த முறையில் நடவு செய்வதனால் கிடைக்கும் வெங்காயத்தின் விளைச்சல் குறைவே ஆகும். அதற்குப் பதிலாக இணை வரிசை முறையில் மிளகாயை நட்டு, அதன் பிறகு இரண்டு இணை வரிசைகளுக்கிடையில் 15 செ.மீ. இடைவெளியில், மூன்று வரிசைகளில் வெங்காயம் நடவேண்டும். அதாவது, அடுத்தடுத்து உள்ள வரப்புக்களின் எதிரெதிராக உள்ள பக்கங்களில் மிளகாய் நாற்றுக்களை நடவேண்டும். இதனால் 45 செ.மீ. இடைவெளி விடுவதற்குப் பதில் 30 செ.மீ. இடைவெளியில் மிளகாய் நாற்றுக்கள் நடவு செய்யப்படுகிறது.

இவ்வாறு நடுவதால் இரண்டு இணை வரிசைகளுக்கு இடையில் 60 செ.மீ. இடைவெளி கிடைக்கிறது. இந்த இடைவெளியில் வெங்காயம் வரிசைக்கு வரிசை 15 செ.மீ. விட்டு நடப்படுகிறது. இவ்வாறு நடப்படும் பயிரின் எண்ணிக்கை வழக்கமாக நடும் ஒருவரிசை வெங்காய முறையைக் காட்டிலும் இருமடங்கு அளவிற்கு அதிகரிக்கிறது. ஆகையால் இம்முறையில் பயிர் செய்யப்படுவதால் வழக்கமான முறையைவிட 60.45 விழுக்காடு கூடுதல் விளைச்சல் கிடைக்கின்றது. இந்தவகை சாகுபடியில் இணை வரிசை மிளகாயோடு பயிரிடப்பட்ட நாட்டு ரக வெங்காயம் கோ. 2, சராசரியாக எக்டருக்கு 5465 கிலோ மகசூல் கொடுத்துள்ளது. இது தனிவரிசை முறையைக் காட்டிலும் 20659 கிலோ அதிகம் ஆகும்.

### மற்ற பயன்கள்

ஊடு பயிராக மிளகாயோடு கோ.2 ரக வெங்காயத்தைப் பயிரிட்டதில், மிளகாய் தனிப்பயிராகச் செய்வதைக் காட்டிலும், சராசரியாக எக்டர் ஒன்றுக்கு 1280 ரூபாயும், தனிவரிசை முறையைக் காட்டிலும் ரூ.829ம் அதிக வருமானமாகக் கிடைக்கின்றது.

மிளகாய்ப் பயிரோடு ஊடுபயிர் செய்வதால் வரிசைகளுக்கிடையே உள்ள இடம் வீணாகாமல் உபயோகிக்கப்படுகிறது.

இவ்வகைச் சாகுபடி முறைகளினால் மழை குறைந்த பருவ காலங்களில், குறுகிய காலத்தில்

கணிசமான வருமானம் கிடைப்பதுடன் நிலம், நீர் ஆகியவற்றையும் சிறந்த முறையில் உபயோகப்படுத்தலாம்.

இவ்வகைச் சாகுபடியில் மிளகாயின் மகசூல் அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

மிளகாய் பயிர் செய்யும் எல்லா விவசாயிகளும் அம்முறையைக் கடைப்பிடிப்பதனால் கணிசமான நிகர இலாபம் பெறலாம்.

சாகுபடி செலவுகளும், வருமானமும் (ஒரு எக்டருக்கு)

**மிளகாய்ச் சாகுபடியில் வருமானம்**

| | ரூ. பை. |
|---|---|
| மிளகாய் பயிர் சாகுபடிக்கான செலவுகள் | 3869.00 |
| மிளகாய் பயிரில் கிடைக்கும் மொத்த வருமானம் (சராசரி மகசூல் 20 குவி-எக்டருக்கு, ரூ.600குவி) | 12000.00 |
| மிளகாய்ப் பயிரினால் கிடைக்கும் நிகர வருமானம் | 8131.00 |

மா. இளங்கோவன்
இ. ரா. சுதந்திரபாண்டியன்
அகில இந்திய ஒருங்கிணைந்த காய்கறி மேம்பாட்டுத் திட்டம்
கோவில்பட்டி

**வெங்காயச் சாகுபடியில் வருமானம்**

| | ரூ. பை. |
|---|---|
| 1. தனிவரிசை மிளகாயோடு ஒரு வரிசை வெங்காயச் சாகுபடிக்கான செலவுகள் | 1250.00 |
| தனிவரிசை மிளகாயோடு ஒரு வரிசை வெங்காயத்தில் கிடைக்கும் வருமானம் (3406கிலோ-எக்டர், ரூ.0.50 கிலோ) | 1703.00 |
| நிகர வருமானம் | 453.00 |

| | |
|---|---|
| தனிவரிசை மிளகாயோடு ஒரு வரிசை பயிரிட்ட வெங்காயத்தைவிட, இணை வரிசை மிளகாயுடன் சாகுபடி செய்த வெங்காயத்தின் அதிக வருமானம்(ஒரு எக்டருக்கு) | 829.50 |
| 2. இணைவரிசை மிளகாயோடு பயிரிடப்பட்ட வெங்காயச் சாகுபடி செலவுகள் | 1450.00 |
| இம்முறையில் கிடைக்கும் மொத்த வருமானம் (5465 கிலோ-எக்டருக்கு, ரூ.0.50 கிலோ) | 2732.50 |
| நிகர வருமானம் | 1282.50 |

29-ஆம் பக்கத் தொடர்ச்சி

## 23—11—80

திருச்செந்தூரில் பனைமரத் தொழில்கள் சம்பந்தமான ஆய்வு நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ்.என். ராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

## 24—11—80

ஏழை, எளிய மக்கள், அன்றாடம் கூலி பெறும் தொழிலாளர்களுக்கு - பித்தளை மற்றும் வெள்ளிப் பாத்திரங்களின் பேரில் ஈட்டுக் கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்குவது பற்றி அரசு பரிசீலித்து வருவதாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு, எஸ்.டி சோமசுந்தரம் அவர்கள் கூறினார்.

## 26—11—80

கிராமப் பகுதிகளில் பணியாற்றுவதற்காகப் புதிதாக 550 டாக்டர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் தெரிவித்தார்.

## 28—11—80

தமிழ் நாட்டில் வாழும் வெள்ளிமரி நிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ் படிப்பதற்குக் குறுகிய காலப்பயிற்சி கொடுப்பதற்கான முயற்சியை அரசு எடுத்து வருகிறது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

காச நோயைத் தடுக்க-நெசவாளர், பீடித்தொழிலாளர் வீடுதேடிச் செல்லும் மருத்துவ அமைப்பு ஏற்படுத்தப் படும் என்றும் இதற்காக ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு அறித்தது.

## 29—11—80

காஞ்சிபுரத்தில், நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு 17இலட்ச ரூபாயை அரசு ஒதுக்கியுள்ளது.

## 30—11—80

தமிழ் நாட்டில் எங்கெங்கு நல்ல வாய்ப்புகள் உள்ளனவோ அங்கெல்லாம் சிமெண்டு தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ. 25 இலட்சம் முதலீட்டில் 232 சிறுதொழில் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான அடிப்படைவேலைகள்நடந்து வருவதாகவும், இதன் மூலம் 38 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறக்கூடும் என்றும் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு, கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்.

தொகுப்பு: அ. மருது



# ஆலயங்களில் நடத்தப்படும் திருமணம்

அநேக ஏழை எளிய மக்கள் செலவு சிக்க
ணம் கருதி ஆலயங்களில் திருமணங்களை
நடத்தி வருகின்றனர். இப்படி செய்யப்படும்
திருமணங்கள் சிற்சில ஆலயங்களில் மட்டும்
முறையாகப் பதிவுசெய்யப்பட்டு வருகின்றன.
வேறு பல ஆலயங்களில் ஆலய நிருவாக அதி
காரி அல்லது நிருவாக அறங்காவலர்களின்
கவனத்திற்கு வராமலே திருமணங்கள் நடை
பெறுவதாகவும் இப்படி செய்யும்போது திரு
மணச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விதி
முறைகள் சரியாகப் பின்பற்றப்படுவதில்லை
யெனவும், இதன் காரணமாக பிற்காலங்களில்
அநேக சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரியப்
படுகிறது. ஆகையால் கீழ்க்கண்ட அறிவுரை





களை ஆலய நிர்வாகத்தினர் கடைப்பிடிக்க
வேண்டுமெனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

ஆலயங்களில் நடைபெறும் எந்தத்
திருமணமும் ஆலயத்தின் நிர்வாக அறங்
காவலர் அல்லது நிருவாக அதிகாரிகளுக்குத்
தெரியாமல் நடைபெறக் கூடாது. திருமணம்
செய்து கொள்ளும் பெண்ணுக்கு 18 வயதும்,
மாப்பிள்ளைக்கு 21 வயதும் பூர்த்தியாகி
இருக்க வேண்டும். மணமக்களின் பெற்
றோர் அல்லது காப்பாளர்களோ திருமணம்
செய்யும்பொழுது நேரிலிருந்தும்
அதற்கான பாரங்களில் கையொப்பமிட்டு
நிருவாக அதிகாரியின் ஒப்புதலை
பெற்று திருமணங்களை நடத்த குறிப்பிட்ட
படிவத்தை மணமக்களும், மணமக்களின்
பெற்றோர்களோ அல்லது பெற்றோர்கள்
இல்லை என்றால் சட்டப்படியான காப்பா
ளர்களும், மேலும் மணமகன், மணமகள்
ஆகிய இருவர் குடும்பங்களுக்குத் தெரிந்
திருக்கும் முக்கிய பெரியார்களில் சிலரும்
செயல் அலுவலர் அல்லது நிருவாக அறங்
காவலர் முன்னிலையில் பூர்த்தி செய்து
கையெழுத்திட வேண்டும். படிவத்தை வெளி
யில் கொண்டு போய் கையெழுத்துடன்
கொண்டு வர அனுமதிக்கக்கூடாது. இதற்
கான ஒரு நமுனா தயாரித்து மணமக்களின்
பெயர், வயது, பெற்றோர்களின் பெயர்,
விலாசம் முதலிய விவரங்களை அடங்கிய மனு
வைப் பெற்றும் அதில் இத்திருமணம் முதல்
திருமணம் என்பதற்கும், இரண்டாவது, மூன்
றாவது திருமணமாயின் முதல் திருமணத்தின்
மூலம் அடைந்த மனைவி அல்லது கணவன்
உயிருடன் இல்லை என்பதற்கும், பெற்றோர்
களும் அவர்களை சார்ந்த முக்கியப்பெரியோர்
களும் கையொப்பமிட்டுக் கொடுக்கவேண்டும்.
திருமண நாளன்று முறையான திருமணம்
நடந்த தேதியில் திருமணத்தை நடத்தி
வைத்த குருக்கள் அல்லது பட்டாச்சாரி
யாரின் கையொப்பத்தையும் பெற்று நிர்
வாக அதிகாரி அல்லது நிர்வாக அறங்காவலர்
கையொப்பமிட்டு மேற்படி நமூனா பதிவு
செய்யப்பட்டு வைக்கப்பட வேண்டும்.

உரிய திருமணக் கட்டணம் வசூல் செய்து
அதை ஆலயக் கணக்குகளில் அவ்வப்போது
வரவு வைக்கப்பட வேண்டும்.

# கல்ராயன் மலைப்பகுதியில் புதிய வனவளர்ச்சித் திட்டம்

மலைகளும் தொடர்ச்சியான வனப்
பகுதிகளையும் உள்ளடக்கிய சேலம் மாவட்
டத்தின் சின்னகல்ராயன் மலை. பெரிய
கல்ராயன் மலை மற்றும் தென்னார்க்காடு
மாவட்டத்தின் கல்ராயன் மலை இவைகளை
தமிழ்நாடு அரசு கையகப்படுத்தி இப்பகுதி
களை வனப்பகுதிகள் என்று அறிவித்துள்ளது.
தமிழ்நாடு அரசின் வனத்துறை இப்பகுதி
களை எடுத்துக் கொண்டுள்ளது.

இதுவரை இப்பகுதியில் நடைபெற்று
வந்த வனவளர்ச்சிப் பணிகள் சரிவர இல்
லாததாலும் வன பாதுகாப்புக்கும் வளர்ச்சிப்
பணிக்கும் போதுமான அலுவலர்கள் இல்லாத
தாலும், மதிப்புமிக்க வனப்பொருட்கள்
பெருமளவில் கடத்தப்படுவதையும், இப்பகுதி
யில் பயிரிடுவதற்காக மரங்களை பழங்குடி
யினர் வெட்டி வருவதை கருத்தில் கொண்டும்
தலைமை வன பாதுகாவலர் இப்பகுதிக்கான
வளர்ச்சித் திட்டமொன்றை அரசிடம் அளித்
துள்ளார்.

இந்த வளர்ச்சித் திட்டத்தை தமிழ்நாடு
அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி
தீவிர வன வளர்ச்சிப் பணி மட்டுமல்லாது
சாலை அமைத்தல், மின் இணைப்பு, தண்
ணீர் வசதி, கட்டடங்கள் மற்றும் அலுவலர்
விடுதிகள் அமைத்தல் போன்ற பணிகளும்
இத்திட்டத்தின்கீழ் செயலாகும்.

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், தென்
னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக் குறிச்சி
ஆகிய இடங்களில் வனத்துறையின் இரு
பிரிவுகள் அமைக்கப்படும். இந்த வளர்ச்சிப்
பணிக்கென அரசு ரூ. 28 லட்சம் அனுமதித்
துள்ளது.

# சிக்கனமே செம்மை தரும்!

ஆனமுத லில்அதிகம் செலவு செய்தல்
ஆகாது எனச்சொன்னாள் ஔவை; கால்கள்
போனபடிச் செல்பவர்கள் எந்த ஊரும்
போய்ச்சேரார்; பொருள்யாவும் செலவு செய்வோர்
தீனகரு ணாகரனே என்றே பாடித்
தெருப்பிச்சை எடுக்கவரும் நிலையைக் காண்பார்
ஊனமது கைகாலில் வரலாம்; என்றும்
உள்ளத்தில் அவைவருதல் ஆகா தன்றோ!

சிக்கனத்தைக் கைவிட்டே செலவு செய்தோர்
சீர்கெட்ட கதையாவும் படித்த பின்னும்
மிக்கஅலட் சியமாகத் தண்ணீர் போல
மேதினியில் பொருள் தனைச் செலவு செய்தால்
திக்குதொறும் கடன்சுமைதான் பெருகும்; வாழ்வு
திமிங்கலத்தின் வசப்பட்ட கலம்போ லாகும்
வக்கணையாய் சிக்கனமாய்ச் செலவு செய்வோர்
வாழ்க்கையிலே இன்பமெனும் வசந்தம் வீசும்.

சிக்கனமாய் வாழ்பவரே வாழ்வின் துன்பம்
சீரணித்து வெற்றிபெறத் தகுதி யுள்ளார்
மிக்கமிக்கச் செலவழிக்கும் பேரால் இந்த
மேதினியில் நனிவாழ முடிவ தில்லை
சிக்கனமாம் துலாக்கோலின் வரவுத் தட்டு
சிரித்தபடி கீழிருக்கப் பார்த்துக் கொள்வோர்
எக்காலும் பயமின்றி இனிது வாழ்வர்
ஏனையவர் வழக்கிழந்த மொழிபோல் தாழ்வர்

பன்னீரில் குளித்தாளாம் ஒருத்தி, முத்தைப்
பழச்சாற்றில் போட்டொருத்தி அருந்தி னாளாம்
வெந்நீரில் குளித்திடலாம் நோயுண் டானால்
வெறும்நீரே உத்தமமாம் குளிப்ப தற்கு
எந்நாளும் சிக்கனமாய் இருப்ப தாலே
எவருக்கும் தீங்கில்லை; சேமிப் புள்ளம்
தன்னாலே வரவேண்டும்; இல்லை யென்றால்
தரித்திரமே சரித்திரமாய் மாறி நிற்கும்

சிக்கனத்தின் மேருமலை "பெரியார்" ஆவார்
சிக்கனத்தைக் கடைப்பிடியார் நலிந்து போவார்
தக்கபடி தக்கசம யத்தில் காசு
தங்குதடை யின்றிசெல விடலே நன்றாம்
மக்கள்உயிர் காப்பதற்கு உணவு தேவை
மானத்தைக் காப்பதற்கு ஆடை தேவை
விக்கலுக்குத் தண்ணீர்தான் தேவை; நல்ல
விலையுயர்ந்த குளிர்ப்பானம் தேவை யில்லை.





கோவூர் இசைதாசன்

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை—600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

**மாணவர் பக்கம் :**

# இளம் பாடகி



ஒவ்வொருவரிடத்திலும் ஒரு தனித் திறமை இருக்கிறது. திறமைசாலிகளுக்குப் பின்னால் பல திறமைசாலிகள் இருக்கிறார்கள் என்பதுபோல, ஆடல், பாடல், பேச்சு, நடிப்பு, ஓவியம், கட்டுரை எழுதுதல் போன்றவற்றில் திறம் மிக்க மாணவமணிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

செல்வி எஸ். கே. சாந்தி, பாட்டு பாடுவதில் சிறந்து விளங்குகிறார். இளம் வயதிலேயே இனிமையாகப் பாடும் திறம் இருப்பதால், வருங்காலத்தில் சிறந்த பாடகியாக வருவார் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

சென்னை, மீனாட்சி மகளிர் கல்லூரியில் பி.காம். முதலாண்டு படிக்கும் இவர், பள்ளியில்—கல்லூரியில் நடந்த பாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றுச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

பள்ளி—கல்லூரி விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்து, தேசிய கீதம் பாடுவதற்கு இவரை அழைப்பார்கள். பாடப்பாட அதுவே ஒரு பயிற்சியாகி, இன்று ஒரு நல்ல பாடகியாக மாறி விட்டார், 17 வயதான செல்வி எஸ். கே. சாந்தி.

இவர் மெல்லிசைப் பாடல்களிலும் சிறந்து விளங்குகிறார். பாட்டில் மட்டுமல்ல, விளையாட்டிலும்கூட இவர் பரிசுகள் பெற்றுள்ளார்.

''படிப்பு முடிந்து, வேறு துறைக்குச் சென்றாலும் பாட்டை விடமாட்டேன்!'' என்கிறார் இளம் பாடகி சாந்தி.

—பேட்டி : பி. வி. ஜீ.

# அறிவுச்சுடர்



வீடுகளுக்கடியில் தரையில் சூரிய சக்தியைச் சேமித்து வைத்து, குளிர் காலங்களில் பயன்படுத்தும் புதிய முறையை ஜப்பானில் டோஜியோ பகுதியில் ஏற்படுத்தியுள்ளனர். இதே மாதிரி மழைக்கால குளிரையும் பூமிக்குள் சேமித்து வைத்துக் கோடை காலத்தில் பயன்படுத்த முடியுமாம்!.

தேன் சிறந்த, எளிதில் செரிக்ககூடிய, அதிக சத்து நிறைந்த உணவாகும். ஒரு கிலோ தேன் 5 கிலோ பாலுக்கும் 1.5 கிலோ மாமிசத்துக்கும், 50 முட்டைக்கும் சமமாகும். தேன், பல நோய் தீர்க்கும் மருந்தாகவும் ஆங்கில, ஆயுர்வேத மருந்துகளோடு கலந்து உண்ணவும் பயன்படுகிறது.

கண்ணில் நுட்பமான அறுவைச் சிகிச்சை செய்ய 'கிரையோதெர்ம்' என்ற வியத்தகு கருவியைக் கண்டுபிடித்துள்ளனர்.

மின்சாரத்தைப் பயன்படுத்தாமல் இருதயத்திலுள்ள இரத்தக் குழாய்களில் பாயும் இரத்த அழுத்தத்தை அளவிட ''பைபர் ஆப்டிகல்ஸ்'' என்ற புதிய கருவி உலகிலேயே முதன் முதலாக ஜப்பானில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

# உயிரினங்கள் அனைத்தும் ஒன்றே!

காந்தியடிகள் தமது இளம் பிராயத்திலிருந்தே செடிகொடிகளைப் பராமரித்து வருவதில் மிகுந்த ஈடுபாடு காட்டிவந்தார்.

அவருடைய வீட்டில் தோட்டம் போடுவதற்கு வசதியான நிலப்பகுதி ஏதும் இல்லை. ஆகவே, சட்டிகளில் செடிகள் பலவற்றை வளர்த்து வீட்டின் தளத்தின் மீது அவற்றை வைப்பார்.

அவரது குடும்பம் ராஜ்கோட்டுக்கு இடம் மாறிய பொழுது அங்கு வீட்டின் வெளிமுற்றத்தில் அவருக்கென ஒரு சிறு பூந்தோட்டம் கிடைத்தது.

பள்ளியிலிருந்து திரும்பியவுடன் மாலை நேரங்களில் அவர் அத்தோட்டத்துக்குச் சென்று அங்கு குழிகளைத் தோண்டுவதிலும், செடிகளைப் பராமரிப்பதிலும் ஈடுபட்டு வந்தார்.

மேலும், அதிகாலையில் எழுந்து நகர்ப்புறப் பகுதிகளில் அமைந்திருந்த தோட்டம் ஒன்றுக்குச் செல்வார். அங்குள்ள குளம் ஒன்றில் தனது துணிகளைத் துவைத்துக் கொண்டு, திரும்பும் வழியில் நாற்றுக்கள் சிலவற்றை எடுத்து வருவார். அவற்றைத் தமது தோட்டத்தில் நட்டு வைப்பார்.

இவ்வாறு செடிகொடிகள் பற்றியும், மலர்கள் பற்றியும் அவர் பல விஷயங்களை அறிந்துணர்ந்தார். செடி கொடிகளிடமும், மரங்களிடமும் அவர் காட்டிவந்த ஈடுபாடு, அவருடைய கடைசிக் காலம் வரையில் விடாது நீடித்து வந்தது.

—"நாம் அறிந்த காந்திஜி" என்னும் நூலிலிருந்து...





# ஓட்டிலே ஓடும் மின்சார ஓட்டம்!

இது என்ன என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

மேற்கு ஜெர்மனியில் உள்ள ஒரு தொழிற்சாலையில் போடப்பட்டுள்ள சிமெண்ட் ஓடுதான் இது! இதில் என்ன சிறப்பு?

இந்த ஓட்டில் கம்பிகள் செருகப்பட்டிருக்கின்றன. இந்தக் கம்பிகள், சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றுகின்றன! ஆம். இந்த மின்சாரத்தினால்தான், அந்தத் தொழிற்சாலையே இயங்குகிறது!

தகவல் : அரக்கோணம் சங்கரபாண்டியன்.

# மாணவர்களே நடத்தும் மாதிரிப் பண்ணை



**ஜோ**திபுரம் கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் அருகேயுள்ள ஒரு குக்கிராமம்!

இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் விவசாயிகள். இவர்களின் குழந்தைகள் நூதன முறையில் விவசாயம் செய்து வருகிறார்கள். இங்குள்ள பயோனியர் மில்ஸ் உயர்நிலைப் பள்ளியில் விவசாய மன்றம் ஒன்று உள்ளது. இதன் உறுப்பினர்கள் 40 மாணவர்கள். இவர்களின் பெற்றோர் இதன் ஒருங்கிணைப்பாளர்கள்.

விஞ்ஞான ரீதியில் சாகுபடி செய்வது எப்படி என்பதைப் பற்றி மத்திய பருத்தி ஆய்வு நிலைய விஞ்ஞானிகளும், களப் பணியாளர்களும் அவ்வப்போது ஆலோசனைகள் வழங்குகின்றனர்.

பள்ளி அளித்த ஒரு துண்டு நிலத்தில் 'விங்ட் பீன்ஸ்' என்னும் 'இறகு அவரை' என்ற பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. ஜப்பான், தைவான் நாடுகளில்தான் இது சாதாரணமாக சாகுபடி செய்யப்படுகிறது.

இதில் 40 சதவிகிதம் புரதச் சத்து உள்ளது. சாதாரண அவரை வகைகளில் 14 சதவிகிதம்தான் புரதச் சத்து உண்டு. இந்தப் புதிய முயற்சி தமிழ்நாட்டிலேயே முதலாவதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காய்கறித் தோட்டம் மற்றும் உயர்ரகப் பருத்திச் சாகுபடியிலும் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த முன் முயற்சி இந்தப் பகுதியில் உள்ள சிறு விவசாயிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

புதிய நுணுக்கங்களைப் பயன்படுத்தி தரமான விதைகளையும், நல்ல மகசூலையும் அடைவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.



## கேள்வி-பதில்...

*கேள்வி:*

வாலாட்டிக் குருவி ஏன் வாலாட்டுகிறது?

*பதில்:*

சுவாசத்திற்காக வாலாட்டுகிறது.

*கேள்வி:*

தேனீ. அழுக்கு எதிலும் உட்காராதா? ஏன்?

*பதில்:*

தேன் எடுப்பதற்காகவே தேனீ தன் கூட்டைவிட்டு வெளியே வருகிறது. தன் வேலை முடிந்ததும் நேரே கூட்டுக்குத் திரும்பி வந்து தன் அறைக்குச் சென்று ஓய்வு எடுக்கும். வெளியே எங்கேயும் உட்காராது.

*கேள்வி:*

உரையூற்றிய பாலை அசையாது ஓரிடத்தில் வைக்காவிட்டால் நல்ல தயிர் உண்டாகாதாமே? ஏன்?

*பதில்:*

இது தவறான கருத்து. அசைந்தாலும் நல்ல தயிர் உண்டாகும். ஆனால் கட்டியாக இராது.

*கேள்வி:*

கிளிஞ்சல் பதித்த சுவரில் சுண்ணாம்பு ஒட்டாதா? ஏன்?

*பதில்:*

கிளிஞ்சல் பதித்த சுவரிலும் சுண்ணாம்பு ஒட்டும்.

# நூல் நயம்

## இந்தியாவின் இந்திரா

**ஆசிரியர்:** ஜகன்,

**வெளியீடு:** பூர்ணிமா பிரசுரம், 40, தேரடித் தெரு, சென்னை-600 005.

**விலை:** ரூ. 5—00

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் வாழ்க்கைச் சித்திரங்களை, மிக அழகாகப் படம் பிடித்துள்ளார் ஆசிரியர்.

பண்டித ஜவஹர்லால் நேரு, பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆகியோர் நாட்டுக்கு ஆற்றிய—ஆற்றி வருகின்ற தொண்டுகளை விளக்கமாகக் கூறும் இந்நூல், எளிய இனிய நடையில் எழுதப் பட்டுள்ளது.

## இந்திரா மணிமொழிகள்

**தொகுப்பு:** ஜகன்,

**வெளியீடு:** பூர்ணிமா பிரசுரம், 40, தேரடித் தெரு, சென்னை-600 005.

**விலை:** ரூ. 3—00

பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு துறைகள் பற்றிப் பேசிய - எழுதிய அரிய கருத்துக்கள் அழகாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. இந் நூலில். நாடு, சமுதாயம், உழைப்பு, தொழில், கூட்டுறவு, தேசிய ஒருமைப்பாடு, கல்வி, வேளாண்மை இப்படி மணி மணியான கருத்துக்கள் இந்நூல் முழுவதும் விரவியிருக்கின்றன.

## தொற்று நோய்களும் தடுப்பு முறைகளும்

**ஆசிரியர்:** 'கல்வி கோபால கிருஷ்ணன்,

**வெளியீடு:** கல்வி பப்ளிகேஷன், 15-3வது தெரு, பரமேஸ்வரி நகர், அடையாறு, சென்னை-600 020.

**விலை:** ரூ. 6—00

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். இந்தச் செல்வத்தைப் பெற நாம் நோயின்றி வாழக் கற்றுக் கொள்ளவேண்டும்.

தொற்று நோய்கள் என்றால் என்ன? அவற்றைத் தடுக்கும் முறைகள் என்னென்ன? என் பதையும், அசுத்தமான பழக்கங்களால் ஏற்படும் தொல்லைகளையும் கூறி, வளமும் - நலமும் பெற வழி கூறுகிறார் இந்நூலாசிரியர். குறிப்பாக, கிராம மக்களிடையே உள்ள அறியாமையைப் போக்கவும், அறிவியலின் உண்மையினை அவர்கள் உணர்ந்திடவும் தூண்டுகோலாய் இருக்கிறது இந்நூல். கதை போன்று, சிறுவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் படிப்பதற்கேற்ற வகையில் அமைந்துள்ளது இந்நூல். விளக்கப் படங்களும் உள்ளன. மத்திய அரசின் பரிசுபெற்ற இந்நூல் ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது அவசியமாகும்.



## தொல்காப்பியச் செல்வம்

**ஆசிரியர்:** —லெ. ப. கரு. இராம நாதன் செட்டியார்.

**வெளியீடு:** முத்தையா நிலையம், 25, டேராவேங்கடசாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005

**விலை:** ரூ. 6—00.

இலக்கணம் என்றாலே விளக்கெண்ணெய் குடிப்பதுபோல சிலருக்கு! அதைப் பக்குவமாய்ச் சொல்ல வேண்டும் - மருந்தைத் தேனில் குழைத்துத் தருவது போல்! மருந்தை உண்டபின் தானே உடல் நலம் பெறும்? அதைப் போல படித்தபிறகு தானே அறிவு வளம் பெறும்?

பழம்பெரு நூல்களில் தொல்காப்பியமும் ஒன்று. இது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியது என்பதுடன், இல்வாழ்க்கை, அரசியல், பண்பாடு முதலியவற்றில் தமிழர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள் என்பதனை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாகவும் விளங்குகிறது.

தித்திக்கும் தீந்தமிழில் ஒவ்வொரு வரியையும் முத்துக்கோத்ததுபோல தருகிறார் நூலாசிரியர். சங்கங்கள், தொல்காப்பியனாரின் வரலாற்றுக் குறிப்புகள், அதுபற்றிய செய்திகள், நூலின் அமைப்பு என்று அதிகாரங்களை அமைத்திருக்கின்ற பாங்கு பாராட்டுக்குரியது. ஆசிரியரின் எளிய, இனிய நடை வெகுவாகக் கவர்கிறது.

நினைப்புக்கு எட்டாத நெடுங்காலத்திற்கு முன்பே தோன்றிய ஒரு அரிய நூலைப் பற்றிப் படிக்கும் போது, நெஞ்சம் இனிக்கிறது—பெருமைப்படுகின்றது.

## உனக்காகவே வாழ்கிறேன்!

**ஆசிரியர்:** மூவேந்தர் முத்து,

**வெளியீடு:** பூவழகி பதிப்பகம், 31, சீனிவாசப் பெருமாள் சன்னதித் தெரு, சென்னை—600 004

**விலை:** ரூ. 10—00.

''நாம் எங்கே போகிறோம்?''

''நாகரீக மோகத்தால் கீழே போய்க் கொண்டிருக்கிறோம்''- இது இந்த நாவலாசிரியரின் வாக்குமூலம். 'நாகரிகம் என்பது ஒழுக்கத்தின் குரல் வளையை நெறிப்பதாக இருக்கக்கூடாது' என்று கோடிட்டுக்காட்டுகிறார் அவர்.

ஜெயலட்சுமி - இவள் தான் இந்நாவலின் கதாநாயகி—சேற்றில் செந்தாமரை — தியாக தீபம்! இவளைச் சுற்றி எத்தனைப் பாத்திரங்கள்! அவர்களை நாம் எங்கேயோ பார்த்ததாக இல்லை?

ஆனந்தகோபால், உலக நாயகி—நம் கண்முன் நிற்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் இன்றைய சமுதாயத்தையே நம் கண்முன் கொண்டு வருகிறார் ஆசிரியர்.

இந்த நாவலின் மூலம், ஒரு நல்ல நாவலாசிரியர் என்ற பெயரை நிலைநாட்டிக் கொண்டு விட்டார் மூவேந்தர் முத்து.

—பி. வி. கிரி.

தமிழ் வளர்த்த பெரியார்கள்



# பரலி சு.நெல்லையப்பர்

வழக்கறிஞர் டி. என். வள்ளிநாயகம்

முல்லை மணக்கும், முகில் விளையாடும், நெல்லை நாட்டினிலே தமிழுக்குத் தொண்டு செய்து தமிழ்த்தாயின் திருஉருவின் பொன் னணிகளாய் இலங்கிய பல்லோர் பிறந்தது பாரறியும். நாட்டின் விடுதலை என் மூச்சு என்று வீரம் ததும்பப் பாடிய கவியரசர் பாரதியைப் பெற்றெடுத்தது எட்டயபுரம். குற்றால மலையின் வற்றாத வளத்தினை முற்றாமல் மூத்த தமிழிலே குறவஞ்சியாய்க் கொடுத்து தமிழுள்ளங்களைக் கொள்ளை கொண்ட புலவர் பெருமகனார் பிறந்த மேல் நகரம் குற்றாலத்துக் கருகமையும் பேறு பெற்றது. தற்காலம் கண்ட தமிழ் மூதறிஞர் பலருள் ரசிகமணியை ஈர்த்த இனிய அரு .க்கரையாம் குற்றாலம் நெல்லையின் ஒரு பகுதி. பாட்டுக்கொரு புலவனாய் பாரதத்தின் திலகமாய் திகழ்ந்த பாரதியின் பெரும் நட்புப் பெற்று 'தன்னைத் தமிழுக்கு- தரணிக்கு ஈந்த நல்லார் நெல்லையப்பர் நெல்லைக்கருகிலமைந்திருக்கும் பரலிக் கோட்டையில் பிறந்து, அச்சிற்றூருக்கு வரலாற்றில் இடம் கொடுத்தார்.

''தமிழினை அறியத் தமிழினை மொழியத்
தமிழினில் சந்ததம் பாடத்
தமிழினில் மகிழத் தமிழினில் வாழத்
தமிழனேன் விரும்பினேன் என்றும்'

என 1923ஆம் ஆண்டிலே பாடியவர் பரலி சு.நெல்லையப்பர். திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலியென்றும் திருஞானசம்பந்தர் பாடிய நெல்லையின் அருகே உள்ள சிற்றூர் பரலிக்கோட்டை. இன்று பல்லிக்கோட்டை என்று வழங்கி வருகிறது.

அச்சிற்றூரில் 1889-ஆம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் நாளில் (விரோதி புரட்டாசி 5) நெல்லையப்பர் பிறந்தார்.

நெல்லையப்பர் இளமையிலே திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும் பின்னர் திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும் படித்தார். அவர் பள்ளியில் ஆங்கிலத்துடன் வடமொழியையும் படித்தார். தமிழை தானே படித்துக் கொண்டார். பிற்காலத்தில் தேவதாஸ் காந்தியிடம் இந்தியையும் கற்றுக் கொண்டார்.

வ.உ.சிதம்பரனாரின் சுதேசிக் கப்பல் கம்பெனியில் இளமையில் நெல்லையப்பர் பணிபுரிந்திருக்கிறார். இவரின் தமையனார், தம்பி ஆகியோரும் அக்கம்பெனியில் அலுவல் செய்தார்கள். சிதம்பரனார் 1908ஆம் ஆண்டில் சிறைவாசம் செய்யும் பொழுது அவருடன் சிறைக்குச் சென்றவர் நெல்லையப்பர். வ.உ.சி. அவர்கள் கோவைச் சிறையில் இருந்த பொழுது இளைஞரான நெல்லையப்பர் கோவையில் தங்கி சிதம்பரனாருக்கு அந்தரங்கமாக பல உதவிகளைப் புரிந்துவந்தார். பின்னர்,1910ஆம் ஆண்டில் புதுச்சேரி சென்று அங்கு கவியரசர் பாரதியாருடன் பத்திரிகைத் தொழிலில் துணையாக இருந்தார்.

புதுச்சேரிக்கு அரவிந்தர் ரகசியமாக வந்தபொழுது அவரை கடற்கரையில் வரவேற்கும் வாய்ப்புப் பெற்றவர்களில் நெல்லையப்பரும் ஒருவர்.

1913ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்து பல பத்திரிகைகளில் துணையாசிரியராகப் பணியாற்றினார். 1920ல் திரு வ.வே.சு.அய்யர் சிறைச் சாலைக்குப் போன சமயம் ''தேச பக்தன்'' ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார். பின் 1922ஆம் ஆண்டில் தாம் துணையாசிரியராய் இருந்த ''லோகோபகாரி'' பத்திரிகையை விலைக்கு வாங்கி ஏறத்தாழ 20 ஆண்டுகள் லோகோபகாரியின் அதிபராகவும் ஆசிரியராகவும் இருந்து வந்தார்.

அடக்குமுறை உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில் புதுச்சேரியில் இருந்த கவியரசர் பாரதியாரின் கண்ணன் பாட்டையும், நாட்டுப்பாடல்களையும், 1917, 1919-ல் முதன் முறையாக புத்தகவடிவில் வெளியிட்டு பாரதியாரால் 'அருமைத்தம்பி' என்று வாழ்த்தப் பெற்றார்.

சமயத்தில் பற்றுமிகுந்த நெல்லையப்பர் மணிவாசகர் 'திருவாசகம்' நாட்டில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கிடைக்கப் பெறாத காலத்தில் பத்திரிகை வாயிலாக நாடெங்கும் பொருள் சேர்த்து இரண்டணா விலைக்கு சுமார் 20,000 பிரதிகள் வெளியிட்டார். தேவாரம் முதலிய சமயநூல்கள் அடக்க விலைப் பதிப்பாக வெளியிடுவதற்குக் காரணமாக இருந்தவர் நெல்லையப்பரே ஆவார்.

1941ஆம் ஆண்டில் அண்ணல் காந்தியடிகளின் தனிநபர் அறப்போராட்டத்தில் ஈடுபட்டு ஆறுமாதம் சிறைத்தண்டனை பெற்றார்.

சென்னை சிந்தாதிரிப் பேட்டைப் பகுதியில் வசித்துக் கொண்டிருந்த நெல்லையப்பர் அவர் மறைவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னரே சென்னையை அடுத்த குரோம்பேட்டையில் குடியேறினார். தாம் வசிக்கும் பகுதிக்கு பாரதிபுரம் என்று பெயரிட்டு இறுதிக்காலம் வரை வசித்து வந்தார்.

பரலி நெல்லையப்பர் அவர்கள் எனக்கு உறவு முறையில் தாய்வழி மாமா ஆவார்கள். என்னிடமும், சென்னை அண்ணாமலை மன்றத்தில் பணியாற்றிய எனது சகோதரர் குப்புசாமி அவர்களிடமும் அடிக்கடி சொல்லுவார். ''வ.உ.சிதம்பரனார் அவர்களின் தொடர்பு எனக்குத் தேசபக்தியும் பொதுநல ஊக்கமும் வளர்வதற்குக் காரணமாயிருந்தன. மகாகவி பாரதியார் அவர்களின் தொடர்பு என்னிடம் கவிதை உணர்ச்சியும் ஆத்மசிந்தனையும் வளர்வதற்குக் காரணமாயிருந்தன'' என்று.

ஆனால், நாங்கள் கேட்டு அறிந்தவகையில் இளமையிலிருந்தே கவிதையினிடத்தும் தமிழினிடத்தும் நெருக்கமான பிடிப்புடையவராகத் திகழ்ந்திருக்கிறார். அவர்கள் இளம் வயதில் எழுதிய பல கவிதைகளின் பிரதிகள் கூட அவர்களிடத்தில் இல்லை.

நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள். ''இன்றைக்குப் பேசப்படுகின்ற 'சோஷலிசம்' என்ற சமதர்ம சமுதாயக் கருத்துக்களுக்கு மேலான கருத்துக்களை ஐம்பது ஆண்டுகளுக்குமுன்பே பரலி நெல்லையப்பர் பாடியிருக்கின்றார். 'தெய்வபக்தி, தேசபக்தி, சத்தியம், சாந்தம், சமதர்மம், தன்னலமின்மை, பொதுநல சேவை' முதலிய உயர்ந்த பண்புகளைப் புகட்டுகின்ற பாடல்களையே நெல்லையப்பர் எழுதியுள்ளார் '' என்று.

இத்தகைய பெருமைக்குரிய பரலி சு. நெல்லையப்பர் அவர்கள், பாரதியார் அவர்களின் புகழ் ஒளி உலகினில் பரவுவதற்கு முன்னமேயே அவரை 'தெய்வீகப் புலவர்' என்று முதன்முதலாக கூறியவர்.

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் மீதும், கவியரசர் பாரதியார் மீதும் ஈடில்லா பக்தியும் பாசமும் கொண்டிருந்த பெருந்தகை நெல்லையப்பர். இறைவனிடத்தும் இயற்கை அழகினிடத்தும் ஈடுபாடு உடையவர். 1914ஆம் ஆண்டில் ராபர்ட் ஹெரிக் என்ற ஆங்கிலப்புலவர் பாடிய பாடல்களின் சில கருத்துக்களை 'வர்ணனை' என்ற தலைப்பில் பாடலாக எழுதியுள்ளார்.

சிலருடைய வரலாற்றுச் செய்திகள் நூல் வடிவில் அமையாது போனது எதிர்காலத் தலைமுறையினருக்கு பேரிழப்பாகும். நெல்லையப்பர் அவர்கள் காலத்திய செய்திகள் பல நூல் வடிவில் வராத பெருங்குறை தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏற்பட்ட குறையாகும்.

பாரதியார் அவர்களுடைய போற்றுதலுக்கு ஆளாகியவர் என்பதனை நினைவுகூரும் வகையில் நெல்லையப்பருக்கு பாரதி சங்கத்தார் பொன்னாடை போர்த்திக் கேடயம் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். தமிழ் எழுத்தாளர் சங்கத்தாரும் நெல்லையப்பரின் தமிழ்ப் பணிக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

திருமணம் செய்து கொள்ளாத நெல்லையப்பர் அவர்கள், வளர்ப்புப் பெண்ணாக பூங்கோதை என்ற பெண்ணை வளர்த்து வந்தார்கள்.

விடுதலை வேட்கை, வீறு கொண்டத் தமிழுணர்வு, வறுமையிலாத் திருநாட்டை காணவேண்டும்; வளமலியும் வாழ்வு அனைவருக்கும் வேண்டும் என்ற நெல்லையப்பர் அவர்களுடைய தொண்டு உள்ளத்தை நினைவு கூர்ந்திடும் இந்நேரத்தில் 1924ஆம் ஆண்டில் அவர் எழுதிய பாடலின் சில அடிகளைச் சூளுரையாக ஏற்போம்! புதுயுகம் சமைப்போம். 'பாடலும் ஆடலும் 'என்னும் அப் பாடலின் சில வரிகள்:—

வறுமையை நாட்டில் ஒழிப்பேன்-பெரு
வாழ்வுற என்றும் உழைப்பேன்
சிறுமையை நாட்டில் ஒழிப்பேன்-பெருஞ்
சீருற என்றும் உழைப்பேன்:

அறிவினை நாட்டில் வளர்ப்பேன்-நல்
அன்பினை நாட்டில் வளர்ப்பேன்
நெறியினில் சென்றிவண் வாழ்வேன்--
என்றும்
நீடிய புகழினைக் கொள்வேன்.

## அஞ்சல் ஆயுள் இன்சூரன்ஸ் வரம்பு உயர்வு

அஞ்சல் ஆயுள் இன்சூரன்ஸ் எடுத்துக் கொள்ள தகுதி வாய்ந்தவர்கள் இனிமேல் 75 ஆயிரம் ரூபாய் வரை இன்சூரன்ஸ் எடுத்துக் கொள்ளலாம். இதுவரை இவர்கள் 50 ஆயிரம் ரூபாய் வரைதான் காப்பீடு செய்து கொள்ள வரம்பு இருந்தது.

மத்திய, மாநில, பாதுகாப்பு சர்வீஸ், உள்ளாட்சி, பல்கலைக்கழக அரசு உதவி பெற்ற நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் அஞ்சல் ஆயுள் காப்பீடு செய்யத் தகுதி பெற்றவர்கள்.

ஆயுள் முழுவதற்குமான பாலிசிகளில் காப்பீடு செய்யப்பட்ட தொகையில் 1000-க்கு 40 ரூபாய் வீதமும் மற்ற பாலிசிகளுக்கு ஆயிரத்துக்கு 31 ரூபாய் வீதமும் ஆண்டுதோறும் போனஸ் கிடைக்கும். அஞ்சல் ஆயுள் இன்சூரன்ஸ் போனஸ்தான் எல்லாவற்றையும் விட அதிகமாகும்.

எல்லா அஞ்சல் ஆயுள் இன்சூரன்ஸ் பாலிசிகளும் இலாபத்துடன் இணைந்த பாலிசிகளாகும். ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்திலிருந்தும் பாலிசிக்கான தொகை கழித்துக் கொள்ளப்படுகிறது. தபால் நிலையத்தில் 'பிரிமியம்' கட்டக்கூடிய வசதியும் அளிக்கப்படுகிறது.

1980 மார்ச் மாத இறுதிவரை இந்தத் திட்டத்தில் 7 இலட்சம் பேர் சேர்ந்துள்ளனர். அவர்களின் காப்பீட்டுத் தொகை 385 கோடி ரூபாயாகும்.

# மறுபிறவி



**ச.** சங்கரன், பி.ஏ.,

'இன்-அவுட்' பெயர்ப் பலகை பளிச்சென்று வெளியே தெரிந்தது.

அந்த மாடி வீட்டின் கீழ் போர்ஷனில் உள்ளே நுழைந்தால் வலதுபுறம் ஒரு அழகிய அறை. அந்த அறைக்குள்ளே மார்பளவில் ஒரு பெரிய புகைப்படம். அவர் தான் பி. ஏ., பட்டதாரி ச. சங்கரன்.

அறையில் 'கவர்ச்சி'யான காலண்டர்கள் - புத்தகங்கள்-பத்திரிகைகள் - டைம்பீஸ் எல்லாம் இருந்தன.

திருவாளர் சங்கரன் உள்ளே இருக்கிறாரா?

அதற்கு 'இன்-அவுட்' போர்டு எதற்கு? ஜன்னல் வழியாக, மெல்லிய புகை வருவதிலிருந்தே அதைத் தெரிந்து கொள்ள முடியாதா?

''ஹாய்! சங்கர்! என்னடா செய்திட்டிருக்கே?''

''ஒண்ணுமில்லே, சும்மா உள்ளே வாடா!''

சங்கரின் நண்பன் சிங்காரம் உள்ளே சென்று அங்கிருந்த ஒரு ஸ்டூலை 'சரக்' கென்று இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொள்கிறான்.

''டேய், இப்ப மணி பதினொன்னு. இன்னும் அரைமணி நேரத்திலே நாம பிக்சருக்குப் போறோம், என்ன?''

''நான் ரெடி! இப்படியேகூட தான் வரத் தயார்டா!''

சொல்லிக்கொண்டே மடமட வென 'டிரஸ்' பண்ணிக் கொண்ட சங்கர், வெளியே வந்தான். 'அவுட்' என்பதை நகர்த்தி வைத்தான். பிறகு, சிங்காரத்தோடு நடையைக் கட்டினான்.

### யார் இந்த பி. ஏ., பட்டதாரி?

இராமநாதன் ஒரு அரசு ஊழியர். அவரது அருமந்தப் புதல்வன்தான் 'பெயர்ப் பலகைப் பிரியரான சங்கரன். இவன் தம்பி இளங்கோ வெறும் எஸ். எஸ். எல். சி. இவர்களல்லாமல் இரண்டு சகோதரிகள். பாவம்! இராமநாதன், வயிற்றைக்கட்டி வாயைக் கட்டி மூத்தவனை பி.ஏ. வரை படிக்க வைத்து விட்டார்.

தன் மகனை ஒரு பட்டதாரியாக்கி - அவனை ஒரு நல்ல வேலையில் அமர்த்தி-திருமணம் செய்வித்துக் கண்குளிரக் காண வேண்டும் என்று கொள்ளை ஆசை அவருக்கு.....

அதோ, அங்கே வருவது யார்?

''டேய், சங்கரா! எங்கே போயிட்டு வர்றே. இப்ப மணி பத்தாகுது. வரவர உனக்குப் பயமே இல்லாம போயிட்டுது..''

பி.வி. கிரி

''வந்து...வேலை விஷயமா ஒருத்தரைப் பார்த்துட்டு வரேம்பா!''

''பகலெல்லாம் சும்மா இருந்துட்டு, ராத்திரிதான் உனக்கு நேரம் கிடைச்சுதா?''

''வந்து என் ஃபிரண்டு சிங்காரம் இல்லே, அவனோட.....''

''அவனோட பகலிலே சினிமா பார்த்துட்டு, மாலையிலே பீச்சுக்குப் போயிட்டு, கொஞ்சங்கூட பயம் இல்லாம இப்ப வர்றே இல்லே.....''

''ஏங்க, வந்ததும் வராததுமா கொழந்தையைக் கரிச்சிக்கொட்ட றீங்க...'' இது அவன் அம்மா சிவகாமி.

இராமநாதனுக்கு நரம்பெல்லாம் புடைத்தது.

''நீ போ உள்ளே!'' அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. பிறகு, அவர் கவனம் மீண்டும் சங்கர் மீது திரும்பியது, காமிராவைப் போல!

''இன்னிக்கி 'எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் ஆபீசுக்குப் போகணும் இல்லே.....''

''ஆமாம்!''

''போனியா?''

''வந்து, மறந்துட்டேம்பா....

''என்ன சொன்னே....'' அவர் முகம் சிவந்தது. கைகள் துடித்தன. சில நிமிடங்கள் கழிந்தன.

''டேர், சங்கர்! எல்லாம் உன் நன்மைக்குத்தான் சொல்றேண்டா. வெட்டியா ஊரைச் சுத்திக்கிட்டு வீணே காலத்தைப் போக்கினா, உன் வாழ்க்கைத்தான் பாழாப் போகும். உன் தம்பி, இளங்கோவைப் பார்த்தியா? உன்னைவிடக் குறைவா படிச்சவன், நாலுபேரைப் போய்ப் பார்க்கிறான். வேலைக்காக நாயா அலையறான்...''

அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. ஏனென்றால், அவர் ஒரு இரத்தக் கொதிப்பு நோயாளி.

இளங்கோ முயற்சியுடையவன் உழைப்புக்கு அஞ்சாதவன். சோம்பல் சிறிதும் இல்லாதவன். இது போதாதா, ஒருவர் முன்னேற?

உழைப்பு என்கிற விதையை ஊன்றிச் செடியாக்கினால்தானே, வெற்றி என்கிற மலரை நாம் பறித்து அதன் வாசத்தை அனுபவிக்க முடியும்?

இளங்கோவுக்குக் குறைந்த படிப்பு இருந்ததே தவிர, நிறைய அறிவு இருந்தது.

நாளைக்கு என்னென்ன செய்ய வேண்டும்? யார் யாரைச் சந்திக்க வேண்டும்? என்றெல்லாம் முதல் நாளே திட்டமிடுவான். இளம் வயதிலேயே அவனுக்கு இந்த நல்ல பழக்கம் இருந்தது.

இராமநாதனுக்கு இளங்கோவைப் பற்றிக் கவலையில்லை. அவன் புத்திசாலி. எப்படியும் பிழைத்துக் கொள்வான் என்று, ஆனால், சங்கரனைப் பற்றிய கவலைதான், அவரை வாட்டிக் கொண்டிருந்தது.

தகாத சிநேகிதத்தால், அவன் பல தவறுகளுக்கு அடிமையாகி விட்டதை அவர் அவ்வப்போது கேள்விப்படும் போதெல்லாம், அவர் கட்டிய மனக்கோட்டை சரிந்து வருவதை உணர்ந்தார்.

இராமநாதன் அலுவலகத்திலிருந்து சோர்வுடன் வந்துகொண்டிருந்தார். அதைப் பார்த்த அவரது மனைவி, ''என்னங்க, ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க? உடம்பு சரியில்லையா?'' என்று கேட்டாள்.

அவர் பதில் ஏதும் பேசாமல், பையை மேசைமீது வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார்.

''என்னங்க, பேசாம இருக்கீங்க? என்ன நடந்தது?'' பதறிப் போய்க் கேட்டாள் சிவகாமி.

''என்ன நடக்கணும்?'' என்று கேட்டுவிட்டு, மேசையில் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

வெளியே இருந்து இளங்கோ மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்துக் கொண்டு உள்ளே ஓடி வந்தான். வந்தவன், அப்படியே 'பிரேக்' போட்ட பேருந்து போல நின்றான்.

சிவகாமி இயந்திரம்போல் இயங்கினாள். ஒரு நொடியில் சூடாகக் காப்பி போட்டுக் கொண்டு வந்து மேசைமீது வைத்தாள்.

''இந்தாங்க, காப்பி சாப்பிடுங்க....''

இராமநாதன், காப்பி தம்ளரைச் சற்று நகர்த்தி வைத்துவிட்டு, ''சங்கர் வந்தா வீட்லே சேர்க்கக்கூடாது. ஆமா, சொல்லிபுட்டேன்... ''அவர் முகத்தில் கோபக்கனல் தெறித்தது. சூடான காப்பியின் ஆவி, அவரது முகத்தைத் தழுவிச் சென்றது.

''என்னங்க நடந்தது? சங்கர் அப்படி என்ன தப்புப் பண்ணிட்டான்?'' சிவகாமி உடல் லேசாக நடுங்கியது. துள்ளிக் குதித்துக் கொண்டுவந்து, ஏதோ சொல்ல வாயெடுத்த இளங்கோ, ஒன்றும் புரியாமல் விழித்தான்.

''சங்கரோட 'உயிர் நண்பன்' இருக்கான்லே, சிங்காரம், அவன், தான் தங்கியிருக்கிற ஹாஸ்டல்லே டிரான்ஸிஸ்டர், டைம்பீஸ் இவற்றைத் திருடிட்டினாம். அப்போ, அவனோட நம்ம சங்கரும் இருந்திருக்கான். சும்மா விடுவாங்களா, போலீஸ்காரங்க, ரெண்டு பேரையும் சேர்த்துத் தள்ளிக்கிட்டுப் போயிருக்காங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு.....''

## தருமபுரி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

தருமபுரி மாவட்டத்தில் உள்ள 16 ஊராட்சி ஒன்றியங்களிலும் 268 குடிநீர்க் கிணறுகள் தோண்டுவதற்கு ரூ. 13 இலட்சமும், 268 பள்ளிக் கட்டிடங்கள் கட்ட ரூ. 20 லட்சத்து 33 ஆயிரமும், 96 இணைப்புச் சாலைகள் அமைக்க ரூ. 4 லட்சத்து 34 ஆயிரமும், 5 வேளாண்மைக் கிடங்குகள் கட்ட ரூ. 40 ஆயிரம், கால்நடை பராமரிப்பிற்கு ரூ. 39,500, கால்நடை மருத்துவக் குடியிருப்பு 1 கட்ட ரூ. 24 ஆயிரம், சமூக கல்விக்கு ரூ. 29,600, மகளிர், குழந்தைகள் நலத்தை பேண ரூ. 61,200, கிராமப்புற நீர்ப்பாசன திட்டங்களுக்கு ரூ. 4,56,000 நடப்பாண்டிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

''என்ன? அதைக் கண்ணாலே பார்த்துமா நேரே வீட்டுக்கு வந்துட்டீங்க?''

''ஆமா, அவனை நான் ஏன் காப்பாத்தணும்? எக்கேடாவது கெட்டுப் போறான்....''

அப்போது—

''இராமநாதன் இருக்காரா?'' என்ற குரல்கேட்டு, எல்லாரும் வாசல் பக்கம் திரும்பிப் பார்த்தனர்.

சாம்பசிவம் வந்து கொண்டிருந்தார். அவருக்குப் பின்னே சங்கர் தலைகுனிந்து நின்றுகொண்டிருந்தான்.

யாரு, சாம்பசிவமா?'' என்று இராமநாதனும், ''சங்கரனா'' என்று சிவகாமியும் கேட்டனர் ஏக காலத்தில்.

சாம்பசிவம் உள்ளே வந்தார். சங்கரன் வெளியே நின்றுகொண்டிருந்தான்.

''நம்ம சங்கரனை, போலீஸ் காரங்க புடிச்சிக்கிட்டுப்போனாங் கன்னு சொன்னீங்களே?'' சிவகாமி கேட்டாள். வெளியே நின்றிருந்த சங்கரனை எட்டிப்பார்த்து. அவனை உள்ளே அழைக்க பயம், தன் கணவர் என்ன சொல்வாரோ என்று.

''யாரும் கோபப்படாதீங்க... சங்கரனை நான்தான் அழைச்சிக்கிட்டு வந்தேன்...''

''ஏன் அவனை அழைச்சிக்கிட்டு வந்தீங்க?'' இது இராமநாதன். பேச்சில் கடுகு வெடித்தது.

''இராமநாதன்! நாம ஒண்ணாப்படிச்சவங்க. உங்கவீட்டிலே ஒண்ணுன்னா, அதிலே எனக்குப் பங்கு இல்லையா? சங்கரனை நான் திருத்தறேன். போதுமா? அதுக்கு முதல்படியாத்தான், அவனை போலீஸ் ஸ்டேஷனிலிருந்து அழைச்சிக்கிட்டு வந்திருக்கேன்...போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னோட நண்பர். ரெண்டு பேரையும் கண்டிச்சி விட்டுட வேண்டிக்கிட்டேன். அதுக்குள்ளே பொருளைக் கைவிட்ட பையனும் வழக்கு வேணாம்னு கேட்டுக்கிட்டான்.'' என்று அவர் சொன்னதும், எல்லாரும் பிரமிப்புடன் கேட்டனர். இராமநாதன் தலையைக் குனிந்து கொண்டே கேட்டுக் கொண்டிருந்தார்.

அதுவரை சும்மா இருந்த இளங்கோ, ''அப்பா! அண்ணனை தண்டனையிலிருந்து சாம்பசிவ மாமா காப்பாத்தினாரு. அதே சமயம், நான் சொந்தக்காலிலே நிற்கவும் உதவி செய்தாரு..அவர் நம்ம குலதெய்வம்பா..'' என்றான் உணர்ச்சி பொங்க....

''என்ன?'' எல்லாரும் ஆச்சரியத்துடன் கேட்டனர்.

அங்கே அமைதியாகப் புன்முறுவல் செய்து கொண்டிருந்தார் சாம்பசிவம்.

''டேய், இளங்கோ! நீ என்னடா சொல்றே?'' அதுவரை தலை குனிந்து கொண்டிருந்த இராமநாதன் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் புது உற்சாகம் காணப்பட்டது.

''அப்பா! நான் சுயமா தொழில் புரிய, சாம்பசிவ மாமா உதவி செய்திருக்காரு. தேசியமயமாக்கப்பட்ட பாங்கிலே எனக்குக் கடனுதவி தர சிபாரிசு செய்திருக்காரு....''

''அப்படியா?''

''ஆமாம். இராமநாதன்! நம்ம இளங்கோ என்னை வந்து பார்க்கும்போதெல்லாம், சொந்தமா தொழில் புரிய ஆசைப்படறேன் அதுக்கு ஏதாவது வழி இருக்கான்னு தான் கேட்பான். அவனோட சுயமுயற்சி, உழைத்துச் சாப்பிடணுங்கிற ஆர்வம் எல்லாம் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சிருந்தது. எனக்குத் தெரிஞ்ச பாங்க் மானேஜரிடம் இதைப் பத்திச் சொன்னேன். அவரும் மனமுவந்து, நம்ம இளங்கோ, சிற்றுண்டி நடத்தும் 'பங்க்' ஒன்றை அமைக்கக் கடனுதவி தர உறுதி கொடுத்தார்'' என்றார் மூச்சு வாங்க சாம்பசிவம்.

இதை வெளியில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த சங்கரன் ஓடோடி, உள்ளே வந்து, 'அப்பா என்னை மன்னியுங்கள்! உங்கப் பேச்சைக் கேட்காம ஊர் சுற்றினேன். இப்பத்தான் எனக்கு



புத்தி வந்தது. இனி நான் பழைய சங்கரன் இல்லேப்பா, சும்மா இருந்தால் சோறு வராது, உழைச்சுத்தான் ஒவ்வொருத்தனும் சாப்பிடணுங்கிற முடிவு எடுத்திட்ட புதிய சங்கரன், என் கண்களைத் திறந்து விட்ட சாம்பசிவ மாமாவை நான் மறக்கவே மாட்டேன்.'' அவன் கண்களில் நீர் கலங்கியது. அதைப் பார்த்து அவன் அம்மா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

உடனே, சங்கரன் பார்வை இளங்கோ மீது திரும்பியது.

''டேய்! இளங்கோ! நீ ஆரம்பிக்கப் போகிற தொழில்லே என்னையும் சேர்த்துக்குடா..நானும் உனக்கு உதவியா இருக்கேன்டா. அதுக்கு நீ சம்பளம்கூட தர வேண்டாம்டா!'' என்று கண் கலங்கியபடிக் கூறியது எல்லாரையும் உருக்கிவிட்டது.

கடுகாய் வெடித்த இராமநாதன், மெழுகாய் உருகி, சங்கரனைத் தழுவிக் கொண்டார்!

## மாநிலத் தலைமை கணக்காயர் II தமிழ்நாடு.

1979-80 அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி சம்பந்தமாக தமிழரசு 1.10.80 இதழில் வெளியான செய்தியில் 'RDN' என்பதற்குப் பதிலாக 'EDN' என்றும் 'FH' என்பதற்குப் பதிலாக 'PH' என்றும் திருத்தி படித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# உங்கள் பணத்தை இரண்டு மடங்கிற்கும் அதிகமாக்குங்கள் 7 ஆண்டுகளில்

தேசீய
சேமிப்புப்
பத்திரங்கள்
வாங்குங்கள்
(5-வது வெளியீடு)

**கணிசமான வட்டி பெறுங்கள். ஆண்டொன்றுக்கு 10.75% கூட்டு வட்டி (சாதாரண வட்டி 14.93%)**

ரூ. 100/- 7 வருடங்களில் ரூ. 204.50 ஆகிறது. பத்திரத்தை மூன்றுண்டுகளுக்குப் பின்னர் பணமாக்கிக் கொள்ளலாம். முதலீட்டுக்கு வரம்பில்லே.

மற்ற பயன்கள்

வருமான வரி மதிப்பீட்டிற்காக, அஞ்சலகம் இலவசமாக சான்றிதழ் வழங்கும். ரூ. 1.5 லட்சம் வரையில் சொத்து வரி விலக்கு கிடைக்கும் ஆண்டுக்கு ரூ. 3,000 - வரையிலான வட்டிக்கு வரி விலக்கு உண்டு. மேற்பட்ட தகவல்களுக்கு தயவு செய்து கீழ்க் காணுபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்:

* அங்கீகாரம் பெற்ற ஏஜென்ட் * மாவட்ட சேமிப்பு அதிகாரி, மாவட்ட கலெக்டரக மேற்பார்வை * அண்மையிலுள்ள அஞ்சலகம் * பிராந்திய தேசீய சேமிப்பு நிறுவனம் (மாநில அல்லது மத்திய அரசு)

டி.எ.வி.பி. 80/119

அல்லது கீழ்க் காணும் விலாசத்துக்கு எழுதுங்கள்:
நாஷனல் சேவிங்ஸ் ஆர்கனேசேஷன்,
12, ஸெமினரி ஹில்ஸ், நாக்பூர்-440006.



# காவல் துறையில் பெண்கள்


செல்வி தே. பிச்சி,
முதுநிலைக் காவலர்,
பெண் காவலர் பிரிவு, சென்னை.


"மங்கையராகப் பிறப்பதற்கே -நல்ல
மாதவம் செய்திட
வேண்டுமம்மா!''

என்று பாடினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. அந்த அளவிற்குப் பீடும் பெருமையும் உடையது பெண் தன்மை.

'தொட்டிலை ஆட்டும் கையே தொல்லுலகு ஆளுங்கை' என்பதும் அதன் காரணமாகவே அன்றோ!

இந்தியப் பெரு நாட்டின் பிரதமராக திருமதி இந்திராகாந்தி அம்மையாரே வீற்றிருக்கும் போது, தமிழகத்தின் காவல் துறையில் பெண்கள் பணியாற்றுவது ஓர் அதிசயம் போலப் பேசப் படுகிறது. இதிலென்ன விந்தையிருக்கிறதோ எனக்கு விளங்கவில்லை!

'பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள்
நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில்
ஆணுக்குப் பெண்இங்கே
இளைப்பில்லை காண்

என்று கும்மியடி!'—என்று பாரதியார் காட்டும் புதுமைப் பெண்ணாக நாங்கள் விளங்குகிறோம். ஆற்றுவதற்காக நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள காவல் துறைப் பணி எங்களைப் பெருமைப்படச் செய்வதாகவே இருக்கிறது. பெருமகிழ்ச்சி கொள்ளச் செய்வதாகவே இருக்கின்றது.

## பெண் காவலர் பணி

தமிழ் நாட்டில் 1973-ஆம் ஆண்டு பெண் காவலர் பணி ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது ஒரு பெண் உதவி ஆய்வாளர், 21 பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டனர். முதல் பெண் உதவி - ஆய்வாளராக குமாரி உஷா என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் மிகவும் திறமையுடன் பெண் காவலர் பணியைச் செயல் படுத்தி வந்தார். குடியரசு தினத்திலும், சுதந்திர தினத்திலும் மற்றும் பதக்கங்கள் அளிக்கும் போது நடக்கும் கவாத்துகளிலும் மிகவும் திறமையாகச் செயல்பட்டார்.

அதன் பின்னர், இருபத்தியொரு பெண் காவலர்களில் ஒருவரான குமாரி கௌசல்யா என்பவர் தலைமைக் காவலராகப் பதவி உயர்த்தப்பட்டார். 1976-ஆம் ஆண்டு வரையிலும் முன்னோடியாகப் பணியாற்றி வந்த குமாரி உஷா என்பவர் பெண் உதவி ஆய்வாளர் பதவியினின்று விலகிய பிறகு அவர் பொறுப்பை குமாரி கௌசல்யா என்பவர் நடத்தி வந்தார். திரும்பவும் 1976-77ஆம் ஆண்டுகளில் பெண் காவலர் படையினர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. நான்கு பெண் உதவி - ஆய்வாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு சென்னை, மதுரை திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

சென்னை நகருக்குப் பெண் உதவி ஆய்வாளராக குமாரி சிசிலி என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் முதலில் பெண் காவலராகவே பணியாற்றி வந்தார். பி.எஸ்.சி பட்டம் பெற்றவர் இவர். அவர் தலைமையின் கீழ் பதினெட்டுப் பெண் காவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## பெண் காவலர்கள் ஆற்றிடும் பணிகள்

தமிழகக் காவல் துறையின் தலைமை அலுவலகத்தில் மேலதிகாரிகளைப் பார்க்க வரும்பெண் பார்வையாளர்களை வரவேற்பது. அதே போல் நகர காவல் அலுவலகத்தில் மேலதிகாரிகளைப் பார்க்க வரும் பெண் பார்வையாளர்களை வரவேற்பது.

விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களைக் கைது செய்து அவர்களை விசாரணை செய்தல்.

இளம் பெண் குற்றவாளிகளுக்கும், பெண் கைதிகளுக்கும் பாதுகாப்பு அலுவல் புரிதல்.

இயற்கைக்கு விரோதமாக சாகும் பெண்களை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் போதும், அவர்களை மருத்துவப் பரிசோதனை செய்யும் போதும் பாதுகாப்பு அலுவல் புரிதல்.

பெண் குற்றவாளிகளை மேலதிகாரிகள் விசாரணை செய்யும் போது அவர்களுக்கு உடன் உதவியாக இருத்தல்.

ஆதரவற்ற குழந்தைகளை விசாரணை செய்து அவர்களை நல்வழி படுத்துதல்.

பெண்கள் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும், கோவில் திருவிழாக்களிலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அலுவல் புரிதல்.

போக்கு வரத்தைக் கட்டுப் படுத்தும் பணியில் ஈடுபடுதல்.

இப்பொழுது பெண் காவலர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று அங்கு கைது செய்யப் படும் பெண் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்புப் பணி புரிந்து அவர்களை நம் மாநிலத்திற்கு அழைத்து வருகிறார்கள்.

சட்ட மன்ற -பேரவை கூட்டங்கள் நடக்கும் போது பெண்கள் பகுதியில் எந்த விதமான கூச்சல் -குழப்பம் எழாமல் பாது காப்பது போன்ற பணிகளையும் செய்து வருகிறார்கள்.

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் கைது செய்யப்படும் பெண் குற்றவாளிகளை இரவு ஆறு மணிக்கு மேல் தங்கள் காவல் நிலையங்களில் வைக்காமல் பெண் காவல் நிலையத்திற்கு அழைத்து வருவார்கள். அவர்களுக்கு பாதுகாப்புப் அளிப்பது பெண் காவலர்களின் கடமை யாகும்.

பொது மக்கள் எங்களைப் பார்த்து -இவ்வாறு இரவு அலுவல் செய்கிறீர்களே உங்களுக்கு பயம் இல்லையா? நீங்களும் பெண்களாக இருக்கிறீர்களே? என்றெல்லாம் பலவாறாக கேள்விகளைக் கேட்பார்கள். நாங்கள் அதற்கு அளிக்கும் பதில் 'எங்களது பணியே அதுதானே நாங்கள் ஒவ்வொருவரும் நெஞ்சுரத்துடன் தான் இப் பணிக்கென வந்துள்ளோம்.'

இரவில் எங்கள் காவல் நிலையத்தில் வரும் பெண் குற்றவாளிகளை அன்பாகப் பேசி அவர்கள் எந்தவிதமான குற்றம் புரிந்திருக்கிறார்கள் என்பதனைப் பற்றி விசாரித்து அவர்களுக்கு நாங்கள் மேலும் இந்த விதமான தவறுகள் செய்யக்கூடாது என்று அன்பாகப் புத்தி புகட்டி அனுப்புவோம்.

பெண்காவலர்களுக்கு அளிக்கப் படும் சமூக சேவை பயிற்சியில் பெண்கள் எந்த விதமான குற்றம் செய்கிறார்கள் என்ன நோக்கத்துடன் செய்கிறார்கள், குற்றம் புரிவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன எந்த விதத்தில் அவற்றைப் தவிர்ப்பது போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

## பெண் காவலர் தேர்வுக்குரிய தகுதிகள்

பெண் காவலர் பணிக்குச் சேர வேண்டும் என்றால் 157 செ.மீ. உயரத்திற்குக் குறையாமலும் 50 கிலோ கிராம் எடைக்குக் குறையாமலும் பதினோராம் வகுப்பு வரை படித்தவராகவும், திருமணம் ஆகாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் உடற்பயிற்சிக்கான விளையாட்டுக்கள் - ஓடுதல்-பந்து வீசுதல்-நீளம் தாண்டுதல்-உயரம் தாண்டுதல் போன்ற பல வகையான விளையாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நட்சத்திர மதிப்பிற்குக் குறையாமல் பெற்றிருத்தல் மிக அவசியம். உடல் ஆரோக்கியத்துடனும் காணப் படல் வேண்டும். இவைகள் அனைத்தும் ஒரு பெண்ணுக்குக் காணப்பட்டால் அவர் பெண் காவலர் தேர்வுக்குத் தகுதி உடையவர் ஆவார்.

*1980*ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் *8*ஆம் நாள் சென்னை ராஜரத்தினம் மைதானத்தில் பெண் காவலர் தேர்வு நடத்தப் பட்டது. அதில் பட்டதாரிபெண்களும் வந்திருந்தனர். ஒவ்வொரு பெண்மணிகளும் தங்கள் திறமையைக் காட்டினர். நூற்றுக் கணக்கான பெண்கள் அந்த பரந்த மைதானத்தில் ஓடினர். சிலர் பந்து வீசினர். எப்படியாயினும் ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் அவர்கள் காணப்பட்டனர். மைதானத்தைச் சுற்றிலும் நூற்றுக் கணக்கான பொது மக்கள் கூடி நின்று





தங்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தை எழுப்பினர். பத்திரிகை நிருபர்களும், தொலைக் காட்சி நிருபர்களும் காவலர் தேர்வுக்கு வந்த பெண்களைப் பேட்டி கண்டனர். பலர் புகைப்படங்கள் அப்போது பத்திரிகையில் வெளியிடப்பட்டன.

**பெண் காவலருக்கு அளிக்கப்படும் பயிற்சிகள்**

ஒவ்வொரு காவலரும் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதை உள்ளத்தில் பதிய வைக்கும் எண்ணத்தில் ஒன்பது மாதகாலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் ''கவாத்து'' உடற்பயிற்சிகள்'' ''சட்டம் ஒழுங்கு'' பற்றியும், ''குற்றங்கள்'' பற்றியும், வகுப்புகள் நடத்தப்படுகிறது. 'கராத்தே பயிற்சி, குதிரை ஏறும் பழக்கம்' 'துப்பாக்கிச் சூடு' ஆகிய பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி பெண்கள் சமூக சேவை பற்றி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. பயிற்சிக் காலம் முடிந்த உடனே அலுவலுக்கு அவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**பெண் காவலருக்குரிய சீருடைகள்**

பெண் காவலருக்குக் 'காக்கி நிற முழுக்கால் சட்டையும், காக்கி நிறச் சட்டையும், தலையில் வைப்பதற்கு அசோக சக்கர முத்திரை பொறிக்கப்பட்ட நீல நிறத் தலைப்பாகையும், காலில் அணியக் காலணியும், இடுப்பில் அணிவதற்கு பெல்ட்டும் அளிக்கப்படுகிறது. இவ்வுடையுடன் முதலில் வெளியே செல்லும்போது, பொதுமக்கள் மத்தியில் ஒரு சிறு சலசலப்பு இருந்தது. ஆனால், நாட்கள் செல்லச் செல்ல எல்லாம் சரியாகிவிட்டது.

**பெண் காவலர் பணியை ஊக்குவித்தல்**

மேலும் தமிழ் நாட்டில் 600 பெண் காவலர்களும், 60 தலைமைக் காவலர்களும், 78 பெண் உதவி ஆய்வாளர்களும் நியமிக்கப்பட உள்ளார்கள்.

காவல் துறையில்பணியாற்றும் முதுநிலை காவலர் ஒருவர் இது பற்றிக் கூறியதாவது:

'நான் 1974ஆம் ஆண்டு நாகர் கோயிலில் உள்ள தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரியில் இளங்கலைத் தமிழ் இலக்கியம் (B.A. Tamil Literature) படித்து பட்டம் பெற்றுள்ளேன். கல்லூரியில் படிக்கும் போதே சாரணர் இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்றினேன். 1975-ஆம் ஆண்டு சென்னை மாநகருக்கு வந்து ஒரு தனியார் பள்ளிக் கூடத்தில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வந்தேன்.

1976ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பெண் காவலர் தேர்வுக்குரிய தலைப்பினைப் பத்திரிகைகளில் படித்த நான், அதற்காக விண்ணப்பம் செய்தேன். தேர்வில் கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்டு, என் சான்றிதழ்களை மேலதிகாரிகளிடம் ஒப்படைத்தேன்.

''என் வீட்டில் உள்ளவர்கள் நான் காவல் துறையில் போய் சேர்ந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இருப்பினும் நான் மனம் தளராமல் நாட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்னும் உயரிய நோக்குடன் இப்பணியில் வந்து சேர்ந்தேன்.

''1976ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் 5ஆம் நாள் முதற்கொண்டு இப் பணியைச் செவ்வனே செய்து வருகிறேன். இதுவரையிலும் மேலதிகாரிகளிடம் இருந்து எந்த விதமான தண்டனைகளும் பெறாமல் என் பணியைச் செவ்வனே செய்து வருகிறேன். நற்பணிக்கான வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன். தற்போது முது நிலைக் காவலராகச் சென்னை மாநகரில் நான் பணியாற்றி வருகின்றேன். மேலும் தமிழ் நாட்டில் 78 பெண் உதவி ஆய்வாளர்கள் தேர்வு தேர்வு செய்யப்படவிருப்பதாக அறிந்த நானும் பெண் உதவி ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்ப மனு அனுப்பியுள்ளேன்.

''நான் இப்பணிக்கு வந்தபின்னர் தான் பெண்களிடையே காணப்படும் பழக்க வழக்கங்கள், பெண்கள் தவறு செய்வதற்குரிய காரணங்கள், எவ்வாறு குற்றம் செய்யத் தூண்டப்படுகிறார்கள் எந்த வகையான குற்றங்களைச் செய்கிறார்கள் அதற்கு அவர்கள் எவ்வாறு தண்டனை அடைகிறார்கள், சமூகத்தில் பெண்களுக்குரிய பங்கு என்ன என்பது போன்ற பல காரியங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

இப் பணியைத் தவிர வேறு பணிக்கு நான் சென்றிருந்தேன் என்றால் இவ்வளவு காரியங்களை என்னால் புரிந்து கொள்ள முடியாது' என்றார் அவர்.

**மதுரை மாநகராட்சியின் தீர்மானம் ஒன்றை தமிழ் நாடு அரசு ஏற்று, மதுரையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தினச் சந்தைக்குப் ''பசும்பொன் முத்துராமலிங்கம் சந்தை'' எனப் பெயரிட அனுமதித்துள்ளது.**

# சென்னையில் வேல்ஸ் இளவரசர்



இங்கிலாந்தின் இளவரசர் சார்லஸ் 2.12.80 செவ்வாயன்று சென்னை மாநகருக்கு வருகை தந்தார்.

இந்தியாவில் 13 நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த அவர், அன்றைய தினம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடைந்தார்.

மேதகு தமிழக ஆளுநர் சாதிக் அலி, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். மற்றும் அமைச்சர்கள், அரசு தலைமைச் செயலாளர் ஆகியோர் வேல்ஸ் இளவரசரைச் சிறப்புற வரவேற்றனர். இந்த வரவேற்பில் தமிழகச் சட்டப் பேரவை-மேலவைத் தலைவர்களும், உயர் அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பிரானேஷ் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், மற்ற அமைச்சர்களை இளவரசருக்கு அறிமுகம் செய்து வைத்த பின்னர்-அங்கிருந்து மாமல்லபுரத்திற்குக் காரில் பயணம் தொடர்ந்தார் அவர். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன், இங்கிலாந்து நாட்டுத் தூதுவர்சர் ஜான் தாம்சன் ஆகியோர் உடன் சென்றனர்.

மாமல்லபுரம் இந்திய சுற்றுலா விடுதியில் இளவரசர் சார்லஸைச் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ. முத்துசாமி வரவேற்றார். பல்வேறு மாநில இராணுவ அதிகாரிகள் வீட்டுப் பெண்கள் அந்தந்த மாநில உடையலங்காரத்தோடு இளவரசரை கோலாகலத்துடன் வரவேற்றார்கள். அவ்விடுதியில், அலங்காரக் குத்துவிளக்கொன்றையும் அவர் ஏற்றிவைத்தார்.

டிசம்பர் 3ஆம் நாள் காலையில், மாமல்லபுரம் கற்கோயில் சிற்பங்களைக் கண்டுகளித்தார் இளவரசர் சார்லஸ். பல்லவ மன்னர்களால் பல நூறு ஆண்டுகளின் முன்னாலே அமைக்கப்பட்ட அந்த அழகிய சிற்பங்களின் நுட்பங்கள் அவர் மனதைக் கவர்ந்தன. ஒவ்வொரு சிற்பம் குறித்தும் ஆவலோடு விவரம் கேட்டறிந்தார் அவர்.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அதிகாரி திரு, சி.எல். சூரி, மாமல்லபுரச் சிற்பப் படத் தொகுப்பு ஒன்றினை இளவரசருக்கு அளித்தார்.

அங்கிருந்து புறப்பட்டு-கேளம்பாக்கத்திலுள்ள 'ஜே' பண்ணைக்கு வந்து சேர்ந்த இளவரசர் சார்லஸ், அங்கே புதுப் பொலிவோடு விளங்கும் வேளாண்மைப் பயிர்களையும் வேளாண்மைக் கருவிகளையும் பார்வையிட்டார்.

அன்று மாலை கிண்டியிலுள்ள தொழிற்பேட்டையில் இளவரசரை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு, கே.ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் வரவேற்றனர்.

ஆட்டை சோல்லும் கட்டுரை

தொழிற்பேட்டையைக் காரிலேயே சுற்றிப்பார்த்த இளவரசர், பின்னர் சிறுதொழில் நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினையும் கண்டு ரசித்தார். தமிழ்நாடு முழுவதுமுள்ள 70 சிறுதொழில் நிறுவனங்கள் தயாரித்த 100 வகையான பொருட்கள் அக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

தொழில் வணிகத்துறை இயக்குநர் திரு, சி. இராமச்சந்திரன், சிட்கோ தொழில் நிறுவன நிர்வாக இயக்குநர் திரு கே.பி. கீதாகிருஷ்ணன், தமிழ்நாடு சிறுதொழில் சங்கத்தலைவர் திரு, வி.எஸ். நரசிம்மன், சிட்கோ தொழில் நிறுவனப் பொது நிர்வாகி திரு, எஸ்.சுந்தரம் ஆகியோர் இளவரசருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

அன்றுமாலை 5 மணியளவில், சென்னையில், செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள செயின்ட்மேரி புராதன தேவாலயத்திற்கு வருகைதந்த இளவரசரை, அன்போடு வரவேற்றுப் பரிசளித்தார் பிஷப் சுந்தர்கிளார்க். திருச்சபையின் செயலாளர் திருமதி எ. கே. சுந்தர், இளவரசரைக் கோயிலுக்குள் அழைத்துச் சென்று சுற்றிக் காட்டினார்.

பின்னர் - தலைமைச் செயலகத்தின் முன் உள்ள கொடிமரத்து மேடையில், இளவரசரை மாண்புமிகு முதல்வர் அவர்களும் சட்டமன்ற -மேலவைத் தலைவர்களும், மற்றும் அமைச்சர்களும் மகிழ்வோடு வரவேற்றார்கள். 'சூரியன் மறைவு நிகழ்ச்சி'யோடு தேசியக்கொடிஅந்த 150 அடிக் கம்பத்திலிருந்து இறக்கப்பட்ட பிறகு அனைவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

மேதகு ஆளுநர் அவர்கள் அளித்த விருந்திலே பங்கேற்பதற்காக இரவு 7.10 மணியளவில் ராஜாஜி மண்டபம் வந்து சேர்ந்த இளவரசர் சார்லஸ், மேதகு தமிழக ஆளுநர் அவர்களாலும், மாண்புமிகு முதல்வர் அவர்களாலும் இன்முகத்தோடு வரவேற்கப்பட்டார்.

விழாவின் முடிவில், ஐம்பொன்னாலான தஞ்சாவூர் தட்டு ஒன்றை ஆளுநரும், முதல்வரும் இளவரசருக்குப் பரிசாக வழங்கினார்கள். பெருமகிழ்வோடு அதைப் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தார் அவர்.

இவ்வாறு, தமது தமிழகச் சுற்றுப் பயணத்தை இனிதே நிறைவேற்றிய வேல்ஸ் இளவரசர் சார்லஸ் 4.12.80 வியாழனன்றுகாலை 9.50 மணியளவில் ஒரிஸா மாநிலத்திற்கு பயணமாவதற்காக விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மேதகு ஆளுநர் அவர்களும் அவருக்கு மாலையணிவித்து விடைகொடுத்தனர்.

சிவப்பும் வெள்ளையுமாய் நின்ற தமது விமானத்தில் ஏறுமுன்-''தமிழ்நாடு என்னைக் கவர்ந்துவிட்டது; இந்தச் சுற்றுப் பயணம் எனக்கு முழுத் திருப்தியளித்தது; அனைவரும் என்மீது அன்புகாட்டினர்'' என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இதயபூர்வமாகத் தெரிவித்து விடைபெற்றார் இங்கிலாந்தின் இளவரசர் சார்லஸ்!

—பி.எல்.ஆர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


கண்களுக்கு குளுமையூட்டும்
பருத்தி, மற்றும் பருத்தியில் அச்சிட்ட
சேலைகள்; கோடைக் காலத்திலும்
குளிர்காலத்தைக்காட்டும் பல
வண்ணச் சேலைகள். நீடித்து
உழைப்பவை.
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி














# தமிழகத்தில் வேல்ஸ் இளவரசர்

டிசம்பர் 2-4 (1980)

1. விமான நிலையத்தில் வரவேற்பு
2. மாண்புமிகு முதல்வருடன்.....
3. ராஜாஜி மண்டபத்தில் வரவேற்பு
4. 'ஜே' பண்ணையில்....
5. கோட்டையிலுள்ள தேவாலயத்தில்.....
6. மாமல்லபுரத்தில்.....
7. கிண்டி தொழில் பேட்டையில்.....



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23